15 ஜூன் 1994

www.padippakam.com

'மார்வாடி' எதிர்ப்பில் மறைக்கப்படும் உண்மைகள்

# புதிய ஜனநாயகம்




படிப்பகம்

www.padippakam.com

# நிலப்பிரபுவின் கொட்டம் குமுறும் விவசாயிகள்

நாகை - காயிதே மில்லத் மாவட்டம் சீர்காழி வட்டம் கொள்ளிடம் ஒன்றியத்தைச் சேர்ந்த புளியந்துறை கிராமத்தில் எஸ்.பி.ஜி. மிஷனுக்கு சொந்தமான 150 ஏக்கர் நஞ்சை நிலத்தை காலங்காலமாக அப்பகுதியைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட விவசாயிகள் குத்தகை சாகுபடி செய்தனர்.

இப்பகுதியில் பண்ணையாதிக்கம் செய்துவரும் குப்புசாமி நாயுடு மேற்படி மிஷன் நிலத்திற்கு ''பவர் ஏஜெண்டாக'' 76-ம் ஆண்டு பொறுப்பேற்றதும் விவசாயிகளின் வறுமையைப் பயன்படுத்தி வஞ்சகமாக ஏமாற்றி அவர்களின் உரிமையை ''சரண்டர்'' எழுது வாங்கியுள்ளான். இந்த குத்தகை விவசாயிகள் அம்பேத்கார் மக்கள் இயக்கம் சார்பாக நிலம் கேட்டு உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியதோடு, ஆட்களை வைத்து அறுவடை செய்தபோதும் கடுமையான எதிர்ப்பு தெரிவித்து தடுத்தனர்.

நீதிமன்றம் ஏப்ரல் 22-ம் தேதி கமிஷன் போட்டு விசாரிப்பதாக சொல்லியது. ஆனால் கமிஷன் போடப்படவில்லை. 25-ம் தேதி மீண்டும் அறுவடை செய்ய வந்தபோது குத்தகை விவசாயிகள் எதிர்ப்பு தெரிவிக்கவே பூம்புகார் தொகுதி எம்.எல்.ஏ. பூராசாமி உதவியோடு அமைச்சர் ஒத்துழைப்புடன் ஆயுதபடை போலீசும், புதுப்பட்டினம், கொள்ளிடம் போலீசும், சீர்காழி காவல்துறை வட்ட ஆய்வாளரும், தாசில்தாரும் தங்களிடம் நீதிமன்ற உத்தரவு உள்ளதாக பொய் கூறி அறுவடை செய்தனர்.

தடுக்க முயன்ற குத்தகை விவசாயிகளை மிரட்டியும், தடுத்தால் சுடுவதற்கும் அனுமதி பெற்றுள்ளோம், சுட்டுடுவோம் அமைதியாக பிரச்சனையைப் பேசி தீருங்கள் என பயமுறுத்தியும் நைச்சியமாக பேசியும் 60 பேரை கைது செய்து திருச்சி மத்திய சிறையிலடைத்தனர். தற்போது ஜாமீனில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இப்போராட்டத்தில் புளியந்துறை விவசாயிகள் ஊன்றி நிற்க வேண்டும். உழைக்கும் மக்களாகிய நாம் குப்புசாமி நாயுடு போன்ற ஆதிக்க வர்க்கத்திற்கு எடுபிடியாக இருப்பதை தவிர்த்து புளியந்துறை விவசாயிகளின் போராட்டத்திற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று இப்பகுதியிலுள்ள விவசாயிகள் விடுதலை முன்னணி இப்போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து பிரசுரம், சுவரொட்டி வாயிலாக பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டு வருகிறது.

# தன்னார்வ குழுக்களின் தகிடுதத்தங்கள்

கடந்த மே மாதம் 10,11,12 தேதிகளில் திருச்சியில் சமூக செயல்பாட்டு இயக்கம் எனும் பெயரில் தமிழகத்தில் உள்ள 2000 தன்னார்வக் குழுக்கள் இணைந்து ''இன்றைய சவால்களைச் சந்திக்க இணைந்து செயல்படுவோம்'' என முழங்கிக் கொண்டு மாநாடு ஒன்றினை நடத்தி முடித்தன. இம்மாநாட்டில் 600 தன்னார்வ குழுக்களும் 4000 பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

''மதிப்புணர்வு (தகவு) சமூக செயல்பாட்டு இயக்கம்'' ''நிதி பங்களிப்பு நிறுவனங்களுடன் சமூக செயல்பாட்டு இயக்கம் சந்திக்கும் பிரச்சனைகள்'' என்ற தலைப்புகளில் விவாதம் நடந்தது. ''நிர்வாகத்தை ஜனநாயக முறையில் நடத்த வேண்டும்; எங்கு, யாரிடம் நிதி வாங்கினாலும் ஊழல் செய்யாமலிருந்தால் போதும்'' ''ஏகாதிபத்தியங்களிடம் நிதி வாங்கிக் கொண்டு அதை எதிர்க்க முடியாது'' என்றெல்லாம் வாய்ச்சவடால் அடித்து, தங்கள் மத்தியில் மலிந்திருக்கும், ஊழல்களையும், ஜனநாயகமற்ற தன்மையையும் தமது ஏகாதிபத்திய சேவையையும் அவர்களே ஒப்புக்கொண்டனர்.

மேலும், மாநாட்டில் இரண்டாம் நாளன்று பாலியல் நிலையில்

## ''காட்'' எதிர்ப்பு பொதுக்கூட்டம்

நாடு மீண்டும் ஏகாதிபத்தியங்களிடம் அடிமையாவதையும், பார்ப்பன மதவெறி அபாயத்தையும் எதிர்த்து 9.5.94 அன்று நெய்வேலியில் எழுச்சிமிகு பொதுக்கூட்டம் நடைபெற்றது. காட்-டங்கல் ஒப்பந்தத்தால் தொழிற்சங்க - தொழிலாளர் உரிமை பறிபோவதையும், எஸ்.டி.பவர் சிஸ்டம் என்ற அமெரிக்க நிறுவனம் தனியார் மின் நிலையம் அமைப்பதை எதிர்த்தும், பாசிச ராவ் கும்பலால் நாடு மீண்டும் காலனியாக்கப்படுவதையும், பார்ப்பன பாசிச அபாயத்தை விளக்கியும் தோழர் கதிரவன் (ம.க.இ.க.) தோழர் நாராயணன் (வி.வி.மு.) மற்றும் தொழிலாளர் பிரச்சாரக் குழுவின் தோழர்கள் சங்கர், சுப்பிரமணி ஆகியோர் உரையாற்றினர். இறுதியில் ம.க.இ.க. கலைக்குழுவினர் நடத்திய புரட்சிகர கலை நிகழ்ச்சி நடைபெற்றது. இப்பொதுக்கூட்டம் புதிய சிந்தனையை விதைத்துள்ளது என்று கூடியிருந்த தொழிலாளர்கள் பாராட்டினர்.

தகவல் : தொ.பி.கு
நெய்வே

சமூக செயல்பாட்டு இயக்கம்
தலைப்பில் விவாதம் நடந்தபோது
யல் வன்முறைக்குப் பலியான பெ
குற்றவாளிகளின் பெயர்களைக் கூ
வந்தனர். கூட்டத் தலைவர் ஒய். ே
அவர்களுக்கு வாய்ப்பளிக்க மறுத்
டார். அதையும் மீறி சில பெ
பேசிய பொழுது 'மைக்' பிடுங்க
டது. மாநாட்டு பிரதிநிதிகளாக
ருந்த ஓர் இளைஞர் கும்பலோ பாதி
பட்ட பெண்களைப் பார்த்து கைத்த
விசிலடித்து பரிகாசம் செய்தது.

ஏகாதிபத்தியங்களிடம் நிதி
றுக் கொண்டு, 'சமூக சேவை' என்ற
ரில் மூன்றாம் உலக நாடுகளில் நடை
றுவரும் ஏகாதிபத்தியங்களுக்கு
ரான போராட்டங்களுள் ஊடுரு
தாமும் புரட்சிகரமாகப் பேசி அவற்றை
திசை திருப்புவதே இக்கும்பலின் முக்கி
வேலை. போராட்டத் தலைமையை ம
றும் சமூக உணர்வுள்ள இளைஞர்களை
ஐந்து நட்சத்திர கலாச்சாரத்தில் வரைமு
றையற்ற பாலுறவில் பழக்கி சீரழிப்பது
என்ற இவர்களது துரோக நடவடிக்கை
களை புரட்சிகர மாணவர் - இளைஞர்
முன்னணியின் திருச்சி கிளைத் தோழர்
கள் துண்டுப்பிரசுரம், உருட்டச்சுப் பிரசு
ரம் சுவரொட்டி மூலம் அம்பலப்படுத்தி
னர். துண்டு பிரசுரத்தை மாநாட்டு ஊர்வ
லத்தில் பு.மா.இ.மு. தோழர்கள் நால்வர்
விநியோகிப்பதைக் கண்டு ஆத்தி
டைந்த ஒரு கிறித்துவ சாமியாரும்
றொருவரும் (மதுரையைச் சேர்ந்த
என்ற இந்த சாமியார் நிதியைக்
டல் செய்தவன்) பிரசுரங்களை
முயன்றனர். தோழர்கள் வி
கப் போராடியபோது, போ
யிட்டு, தோழர்களைக் கா
திற்கு அழைத்துச் செ
டம் முடிந்த பின்னரே

பொதுக்கூட்ட
எதிர்ப் பிரச்சாரம்
னும் உங்கள் கரு
களுக்குத்
இணைந்து
ரமாகப் பே
பிரசுரத்
படுத்
விள
வி





படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு

ஒன்பதாம் ஆண்டு

13-14

16 மே - 15 ஜூன் '94

உள்நாடு:
தனி இதழ்: ரூ.3.00
ஆண்டு சந்தா: ரூ.72.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 16

முகப்போவியம்: கரோ

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

இரா.சண்முகராஜ்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
4, சாமியார் தோட்டம்,
ஆலந்தூர் சாலை,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.

# 'ஜெ' உதிர்த்த ரோமங்களின் மானப்போர்

வழிப்பறி - கொலை - கொள்ளை - கற்பழிப்பு என்று அன்றாடம் எவ்வளவோ சமூக விரோத அராஜகச் செயல்கள்; விலைவாசி - கட்டண உயர்வு என்று கடும் பொருளாதாரத் தாக்குதல்கள்; எங்கும் எதிலும் லஞ்ச ஊழல் - அதிகார முறைகேடுகள் ஆகிய ஆக்கிரமங்கள்; போலீசு - அதிகார வர்க்க அட்டூழியங்கள் - இத்தனை பிரச்சினைகளிலும் இருந்து தமிழ்நாட்டு மக்களைத் திசை திருப்ப ஒருபுறம் பார்ப்பன பாசிச ஜெயலலிதா, மறுபுறம் வாழப்பாடி - மூப்பனார் கும்பல் அரசியல் இலாவணிக் கூத்து நடததிக் கொண்டிருக்கின்றன. இதில் பிரதான நாயக - நாயகி ஒதுங்கிக் கொள்ள பல சமயம் துணை நடிகர்களின் கோமாளிக் கூத்து அரங்கத்தை ஆக்கிரமித்துக் கொள்கிறது. ''உதிர்ந்த உரோமங்கள்'' என்று ஜெயலலிதாவால் கழித்துக் கட்டப்பட்ட மாஜி மந்திரிகள்; அவர் சிங்காரம் செய்து கொள்ள வாழப்பாடி - மூப்பனார் கும்பலிடம் இருந்து பிடுங்கிய ''உரோமங்க''ளாகிய காங்கிரசு எம்.எல்.ஏ.க்கள் - இவர்கள்தான் அந்தத் துணை நடிகர்கள். இதில் பின்னவர் நடவடிக்கைகள் மட்டும் ஏதோ அரசியல் கேலி கூத்துகள் போலவும், ஜெயலலிதா ''உதிர்த்த உரோமங்க''ளின் நடவடிக்கைகள் மட்டும் ஏதோ அரசியல் மானப்பிரச்சனை, உரிமைப் போராட்டம் என்பதாகவும் ஒரு பகுதிப் பத்திரிக்கைகள் சித்தரிக்கின்றன.

ஜெயலலிதா கழித்துக் கட்டிய மாஜி மந்திரிகளில் நெடுஞ்செழியன், அரங்கநாயகம், சாத்தூர் ராமச்சந்திரன், குழந்தைவேலு, வி.வி.சுவாமிநாதன் ஆகிய சிலர் வேறுவழியின்றி மீண்டும் அவர் காலில் விழுந்து ஒட்டிக் கொண்டனர். ஆனால் பண்ருட்டி ராமச்சந்திரன், திருநாவுக்கரசு, ராஜாராம், விசுவநாதன், அழகு. திருநாவுக்கரசு, எஸ்.ஆர். ராதா என்று உதிரிகளாகச் சிதறிக் கிடக்கும் ஒரு கும்பல் ஒருபுறம் மீண்டும் ஜெயலலிதாவின் கடைக்கண் பார்வை கிடைக்காதா என்று ஏங்கித் தவம் கிடக்கின்றது; மறுபுறம், தாம் ஒவ்வொருவருக்கும் அநீதி இழைக்கப்பட்டுவிட்டதாகவும், தாம் நீதிக்காகவும் உரிமைக்காகவும் மானப்போர் நடத்துவதாகவும் கூச்சல் போடுகின்றனர். இவர்கள் இப்போது எழுதியும் பேசியும் வரும் கருத்துக்கள் என்ன?

இவர்களில் பலர் எம்.ஜி.ஆரின், இன்னும் சிலர் எம்.ஜி.ஆரோடு அண்ணாதுரையின் மதிப்புக்கும் நம்பிக்கைக்கும் பாராட்டுக்கும் பாசத்துக்கும் உரியவராக இருந்ததாக உரிமை கொண்டாடுகின்றனர். மற்ற மந்திரிகளை, தலைவர்களை விட தாம் அறிவும், திறமையும், மக்கள் செல்வாக்கும் கொண்டவர்கள் என்று கூறிக் கொள்கின்றனர். எம்.ஜி.ஆர். அண்ணாதுரை மட்டுமல்ல, காமராஜர், ராஜாஜி என இறந்துபோன தலைவர்கள், அத்தனை பேரும் ஒழுக்கமும், நேர்மையும், பெருந்தன்மையும் கொண்டவர்கள்; அதற்கு நேர்மாறாக ஜெயலலிதா சின்னப்புத்தியும் பொறாமையும் கர்வமும் அறியாமையும் பேராசையும் இன்னும் எல்லா இழி குணங்களும் கொண்டவர்; எம்.ஜி.ஆரிடம் தாம் காட்டிய விசுவாசத்துக்கு தக்க வெகுமதியளிப்பார்; ஆனால் ஜெயலலிதா செய்நன்றி கொல்பவர்; ஜெயலலிதாவின் அரசியல் வாழ்க்கைக்கும் உயிருக்குமே ஆபத்து நேர்ந்த காலங்களில் எல்லாம் துணிச்சலோடு நின்று காத்த விசுவாசிகளான தங்களை அவர் துச்சமாக மதித்து தூக்கி எறிந்துவிட்டார்; எம்.ஜி.ஆருக்கே உரிய மரியாதை தர மறுத்து இருட்டடிப்பு செய்கிறார் என்று குற்றஞ்சாட்டுகின்றனர். அகில இந்தியத் தலைவர்களின் குறிப்பாக, காங்கிரசின் பெருந்தலைகளின் மதிப்பையும், ஆதரவையும் பெற்ற தாங்கள் காங்கிரசிடம் பகைத்துக் கொள்வது நல்லதல்ல என்று எவ்வளவோ சொல்லியும் ஜெயலலிதா கேட்கவில்லை; தனது அகந்தையால் கூட்டணியை முறித்துக் கொண்டார்; ஆகவே ஆட்சி கவிழ்க்கப்பட வேண்டும்; அதற்கு மக்கள் ஆதரவளிக்க வேண்டும் என்பதுதான் இவர்களது அரசியல்.

உண்மையில் இவர்களது யோக்கியதை என்ன? கணிசமாக காலம் இந்த மாஜி மந்திரிகள் பிழைப்புவாத, பொறுக்கி அரசியல் மூலம் பதவி பெற்று கோடிகோடியாக சொத்துச் சேர்த்துக் கொண்டுள்ளார்கள். சாதியைச் சொல்லியும், அவ்வப்போது எலும்புத் துண்டுகளை வீசியும் ஒவ்வொருவரும் ஒரு அடியாள் படையை வைத்திருக்கிறார்கள். எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா கட்சி மற்றும் ஆட்சியின் எல்லா சமூக விரோத பாசிச நடவடிககைகளுக்கும் விசுவாசமாக ஊழியஞ் செய்தவர்கள். இன்னும் அவர்களது தகாத உறவுக்கு உடந்தையாய் இருந்ததைப் பெருமையோடு பீற்றிக் கொள்பவர்கள். ஜெயாவின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்குத் தேவையான அளவு எம்.எல்.ஏ.க்களை விலைபேசி இழுத்து விடமுடியும் என நம்பிக்கையூட்டி வருபவர்கள். இதை முற்றாக நம்பாவிட்டாலும் ஜெயலலிதாவுக்கு தொல்லை தரவும், ஓட்டுப் பொறுக்குவதற்கு எம்.ஜி.ஆர் செல்வாக்கை இவர்கள் மூலம் பெற முடியும் என்றும் காங்கிரசும் நம்புகிறது. இவர்களது அரசியல் போராட்டம் எதுவும் மக்கள் பிரச்சினை அடிப்படையானது அல்ல. எம்.ஜி.ஆரின் வாரிசுரிமை கொண்டாடுவதில் ஜெயலலிதாவுடன் நடத்தும் சட்டமன்ற பங்காளிச் சண்டைகள்; எம்.ஜி.ஆர் துதிபாடும் மாநாடு, சிலை வைப்பு போன்ற இவர்களது முயற்சிகளுக்கு ஜெயலலிதா அரசு தடை விதிப்பதும், முறியடிப்பதும், அதை எதிர்த்து இவர்கள் கூச்சல் போடுவதும் இவர்களது அரசியலாக உள்ளது.

இப்போது ஜெயலலிதாவை எதிர்த்து மானப்போர் - உரிமை முழக்கம் எழுப்புவதாக நாடகமாடும் இந்த மாஜி மந்திரிகள் எல்லாம், உண்மையில் மானங்கெட்டதுகள். எம்.ஜி.ஆரின் பிழைப்புவாத - கவர்ச்சிவாத - பொறுக்கி அரசியலை கிரிமினல் மயமாக்கி, அதற்கு ஜெயலலிதாவை வாரிசாக்கி ஆட்சியிலும் அமர்த்தியவர்கள். ஜெயா - ஜானகி நடத்திய அரசியல் சக்களத்திச் சண்டையில் எம்.எல்.ஏ.க்களை கள்ளப்பணம், ஐந்து நட்சத்திர விருந்து - சாராயம் - விபச்சாரம் என்று குளிப்பாட்டி ஒரு புது அரசியல் பண்பாட்டை நிலை பெறச் செய்தவர்கள்.' ஆகவே, இந்த மாஜி மந்திரிகள் அனைவரும், இப்போதுள்ள ஜெயாவின் எடுபிடிகளைப் போலவே சமூகப் புறக்கணிப்பு செய்து அரசியலில் இருந்தே விரட்டப்பட வேண்டிய சமூக விரோத ஒட்டுண்ணிகள்.

படிப்பகம்

www.padippakam.com

# ஏவுகணைச் சோதனைகள்:
# வறுமையின் நடுவே வாண வேடிக்கை

**கோடிகோடியாய் நமது வரிப்பணத்தை வாரியிறைத்து, ஏழை நாடான இந்தியா தொடர்ந்து ஏவுகணைச் சோதனைகள் எதற்காக நடத்த வேண்டும்?**

பிரதமர் நரசிம்மராவின் அமெரிக்கப் பயணம் அரசியல் வட்டாரத்தில் சர்ச்சைக்குரிய முக்கிய விவகாரமாக எழுந்துள்ளது. அமெரிக்காவின் கட்டளைகளுக்கு அடிபணிந்து காலில் விழுவதையே கண்ணியமான கொள்கையாகக் கொண்டுள்ள இந்தியப் பிரதமர், அமெரிக்க அதிபர் கிளிண்டனுடன் இந்திய ஏவுகணைத் திட்டத்தின் எதிர்காலம் பற்றி பேச்சு வார்த்தை நடத்துவதற்காகவே இப்பயணத்தை மேற்கொண்டார்.

ஏற்கனவே புதிய பொருளாதாரக் கொள்கை என்ற பெயரில் அமெரிக்க நிர்பந்தங்களுக்குப் பணிந்து ராவ் கும்பல் நாட்டை மறு அடகு வைத்து விட்டது. குறிப்பாக, அமெரிக்க வெளியுறவுத் துறை உதவிச் செயலர் ராபின் ரப்பேல், அமைச்சர் டால்போட் ஆகியோர் தமது இந்தியப் பயணத்தின் போது காஷ்மீர் விவகாரம், மனித உரிமை, அணு ஆயுதப் பரவல் தடுப்பு, ஏவுகணைத் திட்டம் ஆகியன குறித்து வெளிப்படையாகவே மிரட்டத் தொடங்கியதும் இந்தியா நீக்குப் போக்காக நடந்து கொண்டு பணிந்து போக ஆரம்பித்து விட்டது. அமெரிக்காவின் மிரட்டலுக்குப் பணிந்து அணு ஆயுதப் பரவல் தடுப்பு (NPT) ஒப்பந்தத்தில் கையெழுத்திட மாட்டோம் என்று சவடால் அடித்து வந்த ராவ் கும்பல், கடந்த மாதத்தில் லண்டனில் அமெரிக்க அதிகாரிகளுடன் ரகசிய பேச்சு வார்த்தை நடத்தி ஒப்பந்தத்தில் இரகசியமான முறையில் கையெழுத்திடவும், "அக்னி" ஏவுகணைத் திட்டத்தைக் கைவிடவும் முன்னேற்பாடுகளைச் செய்து விட்டது. அதன் தொடர்ச்சியாகவே பிரதமர் ராவ், கிளிண்டனுடன் பேச்சு வார்த்தை நடத்தக் கிளம்பினார்.

இதற்கிடையில் "ஏவுகணை தந்தை" என்றழைக்கப்படும் இந்திய பாதுகாப்புத்துறையின் ஏவுகணை ஆய்வு திட்டத்தின் தலைவரான டாக்டர் அப்துல் கலாம் அப்பதவியிலிருந்து மாற்றப்படுவார் என்று செய்திகள் வந்தது. எதிர்க்கட்சிகள் இதற்கெதிராக நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பியதும், டாக்டர் அப்துல் கலாம் பதவியில் தொடர்ந்து நீடிப்பார் என்று அரசு மழுப்பியது. இப்போது தனது சுய விருப்பப்படி அவர் கல்விப் பணியாற்றப் போகிறார் என்று செய்திகள் வருகின்றன.

பிரதமரின் அமெரிக்கப் பயணத்திற்கு முன்பே, இனிமேலும் அக்னி ஏவுகணைச் சோதனை நடத்தப்பட மாட்டாது என்று அரசு அறிவித்து விட்டது. இதே போல, பிருத்வி ஏவுகணைச் சோதனையும் பிரதமரின் அமெரிக்கப் பயணத்தையொட்டி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுவதாக அரசு அறிவித்தது. மேலும் அமெரிக்காவின் யோசனைப்படி, ஏற்கனவே அணு ஆயுத வல்லரசுகளாக உள்ள 5 நாடுகளுடன், ஜெர்மனி, ஜப்பான் ஆகிய வல்லரசுகளையும் சேர்த்து இவைகளுடன், இந்தியாவும், பாகிஸ்தானும் பேச்சு வார்த்தை நடத்தி அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திடவும் இப்போது ராவ் கும்பல் உத்தேசித்து வருகிறது.



எதிர்க்கட்சிகள், அமெரிக்காவின் மிரட்டலுக்குப் பணிந்து நமது பாதுகாப்புக் கொள்கையை மாற்றுவது சரியல்ல என்றும், கிளிண்டனுடன் ராவ் நடத்தும் பேச்சு வார்த்தையின் நோக்கத்தை வெளியிட வேண்டும் என்றும் நாடாளுமன்றத்தில் கூச்சலிட்டன. ராவ் கும்பலோ, அமெரிக்கா எந்த நிர்பந்தமும் கொடுக்கவில்லை; நமது பாதுகாப்புக் கொள்கையில் யாருக்கும் விட்டுக் கொடுக்க மாட்டோம்; பொருளாதார உறவுகள் குறித்து பேச்சு வார்த்தை நடத்தத்தான் இப்பயணம் மேற்கொள்ளப்படுகிறது என்று கூசாமல் புளுகியது. அமெரிக்க அதிபர் கிளிண்டனுடன் பிரதமர் ராவ் என்ன பேசினார்? என்ன முடிவாகியது என்பது பகிரங்கமாக அறிவிக்கப்படாமல் இன்னமும் ரகசியமாகவே உள்ளது. மேலும், அமெரிக்க நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் பேசிய ராவ், அமெரிக்காவின் நிர்பந்தங்களை எதிர்த்து ஒரு வார்த்தை கூட பேசவில்லை. அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட மாட்டோம் என்று தெளிவாகக் கூறாமல் மழுப்பலாகத்தான் அவர் உரையாற்றினார். சுருக்கமாகச் சொன்னால் அணு ஆயுதங்களையும், ஏவுகணைகளையும் தயாரிப்பதா, கூடாதா என்பதைக் கூட அமெரிக்கா தீர்மானிக்கும் அளவுக்கு இந்தியா தனது பெயரளவிலான சுயாதிபத்திய உரிமையை இழந்து நிற்பதையே இது மீண்டும் நிரூபித்துள்ளது.

அணுவாற்றலைப் பெற்றுள்ள நாடுகளான இந்தியாவும், பாகிஸ்தானும் போரில் ஈடுபட மாட்டோம்; அணு ஆயுத உற்பத்தியில் இறங்க மாட்டோம் என்று தங்களுக்குள் ஓர் உடன்பாட்டுக்கு வந்தாலே, அமெரிக்கவின் தலையீட்டையும் மிரட்டலையும் முறியடிக்க முடியும். இரு நாடுகளும் நட்புறவை வளர்த்து தமது பாதுகாப்பையும் பலப்படுத்திக் கொள்ள முடியும். ஆனால் இந்தியாவும் பாகிஸ்தானும் அரசியல் ஆதாயம் கருதி நீண்ட காலமாகப் பகைமை பாராட்டிக் கொண்டு ஆயுதக் குவிப்பிலும் ரகசிய அணு ஆயுதத் தயாரிப்பிலும் முனைப்பாக உள்ளன.

இதைச் சாதகமாக்கிக் கொண்டு, இந்தியா ஒரு பிராந்திய வல்லரசாக வளருவதைத் தடுக்கும் நோக்கத்தோடு அடுத்தடுத்து மிரட்டல்களையும் நிர்பந்தங்களையும் அமெரிக்கா தொடுத்து வருகிறது. அணு ஆயுதத் தயாரிப்பில் ஈடுபடுவதாக இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகள் மீதும் குற்றம் சாட்டினாலும், தனது நம்பகமான எடுபிடியாகக் கருதும் பாக். மீது அமெரிக்கா எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. அதே சமயம் பாகிஸ்தானுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆயுத உதவிகள் செய்து ஊக்குவிக்கிறது.




படிப்பகம்

www.padippakam.com

அணு ஆயுதப் பரவல் தடுப்பு என்ற பெயரில் மறு காலனியாதிக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் அமெரிக்காவின் மிரட்டல்களையும் நிர்ப்பந்தங்களையும் அம்பலப்படுத்தி முறியடிக்க வேண்டும்; இந்தியாவின் பெயரளவிலான சுயாதிபத்திய உரிமையையும் அமெரிக்காவிடம் அடகு வைக்கக் கூடாது என்பது சரியானது தான். ஆனால், கோடி கோடியாய் நமது வரிப்பணத்தை வாரியிறைத்து, ஏழை நாடான இந்தியா தொடர்ந்து ஏவுகணைச் சோதனைகளை நடத்த வேண்டுமா என்பது தான் கேள்வி. நாட்டின் பெரும்பான்மையான மக்கள் வறுமையிலும் பட்டினியிலும் பரிதவிக்கும் போது, கோடிக்கணக்கில் செலவிட்டு இந்திய அரசு ஏவுகணைச் சோதனைகளை எதற்காக நடத்த வேண்டும்?

''சீனாவும் பாகிஸ்தானும் இந்தியாவின் நீண்டகால எதிரி நாடுகள். சீனாவிடம் அக்னியைப் போல 450 அணு ஆயுத ஏவுகணைகள் களத்தில் தயார் நிலையில் உள்ளன. சீனாவிடமிருந்து ஆயுத உதவி பெறும் பாகிஸ்தானிடமும் இத்தகைய ஏவுகணைகள் இருப்பதற்கு சாத்தியக் கூறுகள் உள்ளது. இது தவிர, அமெரிக்காவிடமிருந்து அணுகுண்டுகளை ஏந்திச் சென்று தாக்கும் எப்-16 ரக போர் விமானங்களை வாங்கி, அது குவித்து வைத்துள்ளது. காஷ்மீர் எல்லையில் தொடர்ந்து பதற்றம் நிலவுவதால், எப்போது வேண்டுமானாலும் போர் சூழும் அபாயம் உள்ளது. மேலும் அணு ஆயுத மற்ற நாடாக இப்போது இந்தியா உள்ள நிலையில், எதிரியின் கை ஓங்கத் துணியாமல் எச்சரித்து வைக்க பிருத்வி, அக்னி ஏவுகணைகள் நமக்கு மிக அவசியமானது. அண்டையிலுள்ள நாடுகள் ஆயுதங்களைக் குவித்துக் கொண்டிருக்கும் போது, நமது நாட்டின் பாதுகாப்பு நலனை குறைத்து மதிப்பிடக் கூடாது'' என்று ஆட்சியாளர்களும், ராணுவ உயரதிகாரிகளும் ஏவுகணைப் பரிசோதனைகளையும் உற்பத்தியையும் நியாயப்படுத்துகின்றனர்.

அண்டை நாடான சீனா அதிநவீன போர்க் கருவிகளைக் குவித்து வைத்திருந்தாலும், அவற்றை இந்தியாவுக்கு எதிராக நிறுத்தி பதற்றத்தை ஏற்படுத்தியதாக அண்மைக்கால வரலாறு ஏதுமில்லை. ராணுவ உயரதிகாரிகளும் உளவுத் துறையினரும் சீனாவுடனான யுத்தத்திற்கு இப்போது அடிப்படையே இல்லை என்று தான் கூறுகின்றனர். முன்பை விட சீனாவுடன் நல்லுறவுகள் வளர்ந்து வருவதாக ஆட்சியாளர்களும் ஒப்புக் கொள்கின்றனர். இந்தியத் தரகுப் பெருமுதலாளிகள் சீனாவுடன் வர்த்தக உறவு கொள்ளும் முயற்சியில் உள்ளனர். இந்நிலையில் கோடி கோடியாய் நமது வரிப் பணத்தை வாரியிறைத்து ஏவுகணைச் சோதனைகளை ஏன் நடத்த வேண்டும்?



அமெரிக்காவில் கிளிண்டனுடன் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு வரும் ராவ்: ஓநாயின் பின்னே செல்லும் ஆட்டுக்குட்டி.

இதற்கு ஆளும் கும்பலோ, ராணுவத் தளபதிகளோ விளக்கமளிக்கத் தயாராக இல்லை. பிற நாடுகளுடனான பேச்சுவார்த்தையில் நமது கரத்தை பலப்படுத்துவதாக அக்னி ஏவுகணை அமையும்; சீனாவுடனான உறவில் எப்போதாவது விரிசல் ஏற்பட்டால் அதற்கு அக்னி சரியான மிரட்டலாக அமையும் என்று பத்திரிகைகள் பாமரத்தனமாக சப்பைக்கட்டு போடுகின்றன.

இதே போல, இந்தியா - பாகிஸ்தான் எல்லையில் ஒருவருக்கொருவர் அடிக்கடி ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளும், சிறு சிறு துப்பாக்கிச் சண்டைகளும் நடந்துள்ள போதிலும் போர் மூள்வதற்கான அபாயம் உடனடி நிகழ்ச்சி நிரலில் இல்லை என்று தான் உளவுத் துறை அதிகாரிகள் கூறுகின்றனர். மேலும், பாகிஸ்தானை ஒப்பிடும் போது ஏற்கனவே இந்தியா மிகப் பெரிய ராணுவ பலத்தைக் கொண்ட நாடாகும். இந்தியாவுக்கெதிராக மீண்டும் பாகிஸ்தான் போரில் இறங்குவது தற்கொலைக்கு ஒப்பானது என்பதை அந்நாட்டுத் தலைவர்களே நன்கறிவார்கள். அந்நிய அச்சுறுத்தலோ, போருக்கான அபாயமோ இல்லாத நிலையில் எதற்காக இந்தியா ஏவுகணைச் சோதனைகளில் இறங்க வேண்டும்?

**கடனுக்காக ஏகாதிபத்தியங்களிடம் கையேந்தி நிற்கும் இந்தியா, பிராந்திய மேலாதிக்க வெறி பிடித்து ஆயுதக் குவிப்பிற்கு கோடி கோடியாய் செலவிட்டால் அதன் விளைவு நாட்டை பட்டினிச் சாவிற்குள் தான் தள்ளும்.**

இந்தியா நீண்ட காலமாகப் பின்பற்றி வரும் விரிவாக்க மற்றும் பிராந்திய மேலாதிக்கக் கொள்கையின் விளைவு தான் இத்தகைய ஏவுகணைச் சோதனைகள். அண்டை நாடுகளை அச்சுறுத்துவது, மேலாதிக்கம் செய்வது, அவசியமானால் ஆக்கிரமிப்புப் போர் தொடுப்பது, இவற்றை நியாயப்படுத்த நாட்டு மக்களிடம் குறுகிய தேசியவெறி, மதவெறி, போர்வெறியைத் தூண்டி விடுவது என்பதே இந்திய ஆளும் வர்க்கங்களின் கொள்கையாக உள்ளது. பாசிச ராவ் கும்பல் மட்டுமல்ல; எதிர்க்கட்சிகளும் இதே கொள்கையை நியாயப் படுத்தியே வருகின்றன.

அகண்ட பாரதக் கொள்கையைக் கொண்டுள்ள இந்து வெறியர்களான பாரதீய ஜனதா கட்சியினர், இந்தியா சுதேசி அணுகுண்டு தயாரிக்க வேண்டுமென


படிப்பகம்

# அணு ஆயுதப் போருக்கான அபாயம்

"அக்னி" ஏவுகணை வெற்றிகரமாக ஏவப்பட்டதைத் தொடர்ந்து, தெற்காசியப் பிராந்தியத்தில் சக்தி வாய்ந்த துணை வல்லரசாக இந்தியா மேலும் ஒருபடி வளர்ந்துவிட்டது. இந்தியத் துணைக்கண்டப் பகுதியில் எந்த இடத்திற்கும், எப்போது வேண்டுமானாலும் அணு ஆயுத ஏவுகணைகளைச் செலுத்தித் தாக்கும் திறன் கொண்ட நாடாக இந்தியா மாறிவிட்டதைக் கண்டு இப்பிராந்தியத்திலுள்ள சிறிய நாடுகள் அஞ்சுகின்றன. உலக நாடுகளோ, இந்தியாவின் அணு ஆயுத நோக்கங்கள் பற்றி அக்கறை கொண்டுள்ளன.

பிராந்திய வல்லரசாக வளர்ந்துவிட்ட இந்தியாவின் ஏவுகணை ஆற்றல் பின்வருமாறு.

**அக்னி:** இரண்டு முறை தோல்வியடைந்த பிறகு, கடந்த பிப்ரவரி 19-ம் நாளன்று "அக்னி" வெற்றிகரமாக ஏவப்பட்டுள்ளது. இந்த ஏவுகணை 1500 முதல் 2500 கி.மீ. தூரத்துக்கு ஒரு டன் எடையுள்ள குண்டுகளை ஏந்திச் சென்று தரை இலக்கைத் தாக்கக்கூடிய ஆற்றல் மிக்கது. சீனா, பாகிஸ்தான், நேபாளம், வங்க தேசம், பர்மா, இலங்கை மாலத்தீவு ஆகிய நாடுகளை அக்னியைக் கொண்டு தாக்க முடியும். ஒவ்வொரு முறையும் அக்னியைச் செலுத்த ரூ 8 கோடிக்கு மேல் செலவாகியுள்ளது. இதுவரை மூன்று முறை விண்ணில் செலுத்தி சோதிக்கப்பட்டுள்ளது.

**பிருத்வி:** மிக விரைவாக 150 முதல் 200 கி.மீ தூரம் வரை சென்று தரை இலக்கைத் தாக்கக்கூடிய சக்தி வாய்ந்த ஏவுகணை. அரை டன்னிலிருந்து ஒரு டன் வரை குண்டுகளை ஏந்திச் செல்லக் கூடியது. பாகிஸ்தானின் பெரும்பாலான பகுதிகள், இந்த ஏவுகணையின் தாக்குதல் வீச்சுக்குள் வந்துவிடுகின்றன. இதுவரை பிருத்வி 12 முறை ஏவப்பட்டு சோதிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு முறையும் ரூ 3 கோடிக்கு மேல் செலவாகியுள்ளது. இந்திய ராணுவத்தின் தரைப்படைப் பிரிவுக்கு 75 பிருத்வி ஏவுகணைகளும் விமானப்படைப் பிரிவுக்கு 25 ஏவுகணைகளும் இவ்வாண்டில் ஒதுக்க இந்திய அரசு தீர்மானித்துள்ளது.

**ஆகாஷ்:** தரையிலிருந்து வான் இலக்கைத் தாக்கக் கூடியது. அக்னிக்கு ஒரு வாரம் முன்பாக சோதனை முயற்சியில் வெற்றிகரமாக ஏவப்பட்டது. 25 கி.மீ. தூரத்தில் பறக்கும் விமானங்களைத் தாக்கும் திறன் கொண்ட இந்த ஏவுகணை, 50 கிலோ எடையுள்ள குண்டுகளைச் சுமந்து செல்லும் ஆற்றல் கொண்டது. இதுவரை 5 முறை விண்ணில் செலுத்தி சோதிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு முறை ஒரு கோடி ரூபாய்க்கு மேல் செலவிடப்பட்டுள்ளது.




**திரிசூல்:** குறுகிய தூரம் சென்று விமானங்களைத் தாக்கும் அதிவேக ஏவுகணை. தற்போது பரிசோதனை நிலையில் உள்ளது. வரும் ஜூலையில் 8 முறை விண்ணில் செலுத்தி சோதிக்கப்பட உள்ளது.

**நாக்:** டாங்கிகளைத் தாக்கி அழிக்கக் கூடிய சக்தி வாய்ந்த இந்த ஏவுகணை 4 கி.மீ. தூரம் வரை பாயக் கூடியது. பாகிஸ்தானிடமுள்ள காலித், எம்.பி.2000 ஆகிய டாங்கிகளை தூள் தூளாக்கும் திறன் மிக்கது என்று ராணுவ உயரதிகாரிகள் இந்த ஏவுகணையைப் புகழ்கின்றனர். இதுவரை 18 முறை ஏவப்பட்டு சோதிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு முறையும் ரூ 25 லட்சத்துக்கு மேல் செலவாகியுள்ளது.

அடுத்த மூன்றாண்டுகளில் திரிசூல், நாக், ஆகாஷ் ஆகிய மூன்று ஏவுகணைகளும் இந்திய ராணுவத்தில் சேர்க்கப்பட உள்ளன. இந்த ஏவுகணைகளில் அல்லி மலர் சூட்டப்படுமா, அல்லது அணுகுண்டு பொருத்தப்படுமா என்பது இன்னும் முடிவாகவில்லை.

நீண்ட காலமாகவே கோரி வருகின்றனர். போலிக் கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட எல்லா எதிர்க்கட்சிகளும் சீனா, பாகிஸ்தான், வங்கதேசம் மீது இந்தியா நடத்திய போர்களையும், ஈழ ஆக்கிரமிப்பு, மாலத்தீவு படையெடுப்பு ஆகிய விஸ்தரிப்பு - மேலாதிக்கக் கொள்கைகளையும் நியாயப்படுத்தியே வந்துள்ளன. இப்போது அமெரிக்காவின் மிரட்டலைத் தொடர்ந்து ஆளும் காங்கிரசோடு சேர்ந்து எல்லா எதிர்க்கட்சிகளும் ஏவுகணைத் திட்டத்தைக் கைவிடக் கூடாது; நாட்டின் பாதுகாப்பை துச்சமாகக் கருதக் கூடாது என்று கூச்சலிடுகின்றன.

ஏறத்தாழ பத்தாண்டுகளுக்கு முன்பு, ஆப்பிரிக்கக் கண்டத்திலேயே நன்கு பயிற்சி பெற்ற ராணுவத்தையும் அதிநவீன ஆயுதங்களைக் கொண்டதாக ஏழை நாடான எத்தியோப்பியா திகழ்ந்தது. அதன் போர்வெறியும் ஆயுதக் குவிப்பும் அந்நாட்டைப் பட்டினிச் சாவுக்குத் தள்ளியதை யாரும் மறந்துவிட முடியாது. கடனுக்காக ஏகாதிபத்தியங்களிடம் கையேந்தி நிற்கும் ஏழை நாடான இந்தியா, வெறி பிடித்து ஆயுதக் குவிப்பிலும் தயாரிப்பு - சோதனைகளிலும் கோடி கோடியாய் செலவிட்டால் அதன் விளைவு என்னவாகும் என்று சொல்லத் தேவையில்லை. ஒரிசாவின் சில பகுதிகளில் நிரந்தரமாகிவிட்ட பட்டினிச் சாவுகள் இனி நாடு முழுவதும் பரவுவதற்கே இது வழி வகுக்கும்.

மேலும், ஆட்சியாளர்களுக்கு எதிராக மக்களின் அதிருப்தியும் போராட்டங்களும் பெருகும் போது அவற்றை திசை திருப்பி, தமது ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ள நாட்டின் பாதுகாப்பு என்ற பெயரில் குறுகிய தேசியவெறியையும் போர்வெறியையும் கிளறிவிட்டு ஆதாயமடைவதென்பதை ஆளும் வர்க்கக் கட்சிகள் வழக்கமாகக் கொண்டுள்ளன. தற்போது நாடு ஏகாதிபத்தியங்களிடம் மறு அடகு வைக்கப்பட்டதற்கு எதிராகவும், "காட்" ஒப்பந்தத்துக்கு எதிராகவும் மக்கள் போராட்டங்கள் பெருகி வரும் நிலையில் ஆளும் ராவ் கும்பலுக்கு ஆயுதக் குவிப்பும் போர்வெறியும் மிக அவசியமாகி விட்டது.

எனவே, கோடிக் கணக்கான மக்களை பட்டினிச் சாவுக்குத் தள்ளிவிட்டு நமது வரிப் பணத்தை தண்ணீராய்ச் செலவிட்டு ஆயுதக் குவிப்பிலும், ஏவுகணைத் தயாரிப்புச் சோதனைகளிலும் இறங்கியுள்ள ஆளுங்கும்பலின் விரிவாக்க - மேலாதிக்க நோக்கங்களுக்கு நாட்டு மக்கள் துணை போக முடியாது. நாட்டின் பாதுகாப்பு, தொழில் நுட்ப சாதனை என்ற மாய்மாலங்களின் பின்னே மறைந்துள்ள போர்வெறிக் கொள்கையை ஆதரிக்கவும் முடியாது.

● பாலன்


www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

★ பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் ''சர்வதேச அழகிப் போட்டி'' மே மாத இறுதியில் நடைபெற்று முடிந்தது. அழகிப் போட்டிக்கு வந்த சர்வதேச பார்வையாளர்களுக்கு மணிலா ''எழில் நகரமாக''த் தோன்ற வேண்டும் என்பதற்காக மே மாத தொடக்கத்திலேயே நடைபாதைகளில் வசித்து வரும் 250-க்கும் அதிகமான அப்பாவி சிறுவர்களைப் பிடித்து சிறையில் அடைத்துவிட்டது, காவல்துறை. இதற்கு எதிராக மனித உரிமை அமைப்புகள் குரல் எழுப்பவே, விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது பிலிப்பைன்ஸ் அரசு. காவல்துறையோ சிறுவர்களை போதை மருந்து கடத்தல் பேர்வழிகள் எனப் புளுகி தனது இழிசெயலுக்கு நியாயம் கற்பிக்கிறது.

★ கடந்த வருடம் கோவில்பட்டியில் நடந்த விவசாயிகள் ஊர்வலத்தின் மீதான போலீசாரின் தடியடி பிரயோகத்தை விசாரித்து வந்த கமிஷன் தனது தீர்ப்பில், ''விவசாயிகள் வன்முறையில் இறங்கியதுதான் போலீசார் தடியடி நடத்தியதற்குக் காரணம்'' என அறிவித்துள்ளது. ''தாங்கள் கற்களால் தாக்கப்படும் பொழுதுகூட போலீசார் மிகுந்த பொறுமை காத்தனர்'' எனத் தீர்ப்பில் போலீசாருக்குப் புகழாரம் வேறு. இதோடு, அம்மோதலில் இறந்த இருவரில், ''ஒருவர் மட்டும்தான் போலீசின் தடியடியால் இறந்து போனார்'' என ஜெயா அரசு கூறியதையே அப்படியே வாந்தியெடுத்துமுள்ளது. வீடுகளில் புகுந்து தாக்கியும், விவசாயிகளின் டிராக்டர்களையும் சேதப்படுத்தியது போலீசு. ஆனால், நீதிபதியோ ''பொது மக்கள் சொத்துகளுக்கு மிகுந்த சேதம் எதுவுமில்லை'' எனக் கண்ணை மூடிக்கொண்டு தீர்ப்பு கூறியுள்ளார்.

★ கடந்த ஏப்ரல் 11-ம் தேதியன்று பீகார் மாநில போலீசு, மாவோயிச கம்யூனிச மையத்தின் 11 ஆதரவாளர்களை நேருக்கு நேர் நிற்க வைத்துச் சுட்டுக் கொன்றுள்ளது. தனது அத்துமீறலை மறைப்பதற்காக, ''மாவோயிச தீவிரவாதிகள் நூறுக்கும் அதிகமானோர் காடுகளில் மறைந்து கொண்டு தாக்கியதாகவும், அப்பொழுது நடந்த மோதலில் இவர்கள் இறந்து போனதாகவும் முதல் தகவல் அறிக்கை தயாரித்தது. இதை விசாரித்த மக்கள் சிவில் உரிமை கழகத்தினர், ''மோதல் நடந்ததாகக் கூறப்படும் இடத்தில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்ததற்கான எந்த அறிகுறியும் இல்லை; எந்தப் போலீசாருக்கும் சிறு காயமும் ஏற்படவில்லை'' போன்ற உண்மைகள் அடங்கிய அறிக்கையொன்றை வெளியிட்டு, போலீசாரின் மோதல் நாடகத்தை அம்பலப்படுத்தியுள்ளனர்.

★ ரசியாவை மையமாகக் கொண்டு இயங்கி வரும் சர்வதேச மாஃபியா கும்பல்கள் அணு ஆயுதக் கடத்தலில் ஈடுபட்டு வருவது தற்பொழுது அம்பலமாகியுள்ளது. இக்கும்பல்கள் சிறிய அளவிலான அணு ஆயுதங்களை சிதறிப்போன முன்னாள் சோவியத் யூனியன் நாடுகளில் இருந்து திருடி, கடத்திச் சென்று, பிற நாடுகளில் இயங்கும் ''தீவிரவாத'' அமைப்புகளுக்கு விற்றுள்ளன. மேலும், இக்கும்பலிடம் இருக்கும் பொருளாதார அரசியல் - ஆயுத பலத்தால் நாளடைவில் பெரிய வகையிலான அணு ஆயுதங்களைக்கூட கடத்திவிட முடியும். இதோடு லத்தீன் அமெரிக்கா, கொலம்பியா மாஃபியா கும்பல்கள் தங்கள் வலைப் பின்னலை ஐரோப்பா கண்டம் முழுவதும் விஸ்தரித்துள்ளன; ஆசியா கும்பலோ போதை மருந்தோடு மனித உறுப்புகளைக் கடத்துவதில் முக்கிய புள்ளியாக உள்ளது.

★ கடந்த மூன்று வருடங்களாக இராஜஸ்தான் மாநிலத்தில் மட்டும் தாழ்த்தப்பட்டோரின் மீதான தாக்குதல்கள் நாளொன்றுக்கு நூறு என்ற விகிதத்தில் பதிவு செய்யப்படுவதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. ஆனாலும் இதுவரை எந்தவொரு வழக்கிலும் மேல் சாதி வெறியர்கள் தண்டிக்கப்பட்டது கிடையாது; பாதிக்கப்பட்ட எந்தவொரு தாழ்த்தப்பட்டவருக்கும் அரசின் நஷ்டஈடும் கிடைத்ததில்லை. பல வழக்குகளில் போலீசார் தாழ்த்தப்பட்டோரின் சாதியை மாற்றி எழுதி மேல்சாதியினருக்கிடையேயான மோதல் என வழக்கையே திசைமாற்றி விடுகிறார்கள். இம்மாநிலத்தின் இவ்வருடத்தின் முதல் மூன்று மாதங்களில் மட்டும் பதிவான தாழ்த்தப்பட்டோர் மீதான தாக்குதல்களின் எண்ணிக்கை 887. இது தவிர மைய அரசின் அறிக்கையொன்று நாட்டின் ஒன்பது மாநிலங்களின் 83 மாவட்டங்களில் ஒருநாள் தவறாது தினந்தோறும் தாழ்த்தப்பட்டோர் மேல் சாதியினரால் தாக்கப்படுவதாக அறிவித்துள்ளது. தமிழ்நாட்டின் பத்து மாவட்டங்களும் இவற்றுள் அடங்கும்.

★ புதிய பொருளாதாரக் கொள்கையை அமுலாக்கி விவசாயத்திற்கான மின் கட்டணத்தை உயர்த்தி, உரத்திற்கும், பூச்சி மருந்திற்கும் மானியத்தைக் குறைத்து அவற்றின் விலையையும் உயர்த்திய மத்திய அரசு, அடுத்து நீர்ப்பாசன கட்டணங்களை உயர்த்தவும் முடிவெடுத்துள்ளது. இதன்படி இக்கட்டணங்கள், மாநில அரசுகளுடன் கூடி முடிவெடுத்தபின், ஒன்றரை மடங்கிலிருந்து 14 மடங்கு வரை உயர்த்தப்படும். ஏற்கனவே வறட்சியின் காரணமாக நீர்ப்பாசனத்திற்கு அரசு நிர்ணயித்துள்ளதை விடக் கூடுதலாக செலவழித்து வரும் விவசாயிகளுக்கு இக்கட்டண உயர்வு மேலும் ஓர் இடியாகும்.

★ ஹைதராபாத்தில் வெறிகொண்ட ராணுவ கும்பலொன்று உருட்டு கட்டைகளாலும் ''பெல்ட்டு''களாலும் தங்கள் குடியிருப்புக்கு அருகில் இருக்கும் லம்பாடி பழங்குடி மக்களை, வீடு புகுந்து தாக்கியுள்ளது. கர்ப்பவதியான இளம் பெண்ணைத் தூக்கிச் சென்று மானபங்கப்படுத்தியும் மயக்கமுறுமளவு அடித்துக் காயப்படுத்தியும் இருக்கிறது. தடுக்க வந்த போலீசாரையும் தாக்கியும் இரு சக்கர வாகனங்களை சேதப்படுத்தியும் வெறியாட்டம் போட்டுள்ளது. தங்கள் கேப்டனின் வாரிசுகள் மிதிவண்டியில் இருந்து கீழே விழுந்ததால், குறுக்கே வந்த இரு லம்பாடி சிறுவர்களை அடித்திருக்கிறான் கேப்டன் வீட்டு காவலாளி. இதைத் தட்டிக் கேட்டதற்குத்தான் இந்த வெறியாட்டம். கடந்த மூன்று மாதங்களுக்குள் அந்நகரில் ராணுவத்தினர் பொது மக்களைத் தாக்குவது இது 3-வது முறையாகும். ●

போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்ட மாவோயிச கம்யூனிச மையத்தினர்





படிப்பகம்

www.padippakam.com

# 'மார்வாடி' எதிர்ப்பில் மறைக்கப்படும் உண்மைகள்

"மார்வாடிக் கடை மறியல்" போராட்டத்தை தமிழ்த் தேசத் தன்னுரிமை முன்னணியினர் (பழ. நெடுமாறன், சுப. வீரபாண்டியன் - தியாகு, பெ. மணியரசன் தலைமையிலான குழுக்களின் கூட்டமைப்பு) கடந்த ஏப்ரல் 19-ந் தேதி தமிழகத்தில் 5 இடங்களில் நடத்தினர். "1956-க்குப் பின் தமிழகத்தில் நுழைந்த மார்வாரி - குஜராத்தி சேட்டுகளை வெளியேற்ற வேண்டும்; அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தொழில் உரிமங்களை ரத்து செய்ய வேண்டும்" என்பதே இவர்களின் கோரிக்கை. இதற்கான காரணத்தை விளக்கி "தமிழ்நாடு வந்தேறிகளின் வேட்டைக்காடு" என்ற தலைப்பில் பழ. நெடுமாறன் ஒரு சிறு பிரசுரத்தை வெளியிட்டுள்ளார். தன்னுரிமை முன்னணியினர் பல வடிவங்களில் இப்போராட்டத்திற்காக பிரச்சாரம் செய்தனர்.

பாரதிய ஜனதா கட்சியும் இந்து முன்னணியும் எதிர்பார்த்தபடி ரத்த பாசத்தோடு வரிந்து கட்டிக் கொண்டு வந்து மார்வாரி - குஜராத்தி பனியாக்களுக்கு ஆதரவாக குரல் கொடுத்தன. காங்கிரசு உட்பட தமிழர்களின் ஓட்டை எண்ணி பிற கட்சிகள் அப்பனியாக்களிடம் உள்ள பண உறவை முன்னிட்டு மௌனம் சாதித்தன. ஆனால் சி.பி.எம். கட்சி மட்டும் போராட்டத்திற்கு கண்டனம் தெரிவித்து "மார்வாடி கம்யூனிஸ்டு" என்ற பெயர் தேடிக் கொண்டது.

'மார்வாரி' - குஜராத்தி பனியாக்கள் தமிழ்த் தேச முதலாளிகளிலிருந்து கூலி உழைப்பாளி வரை — லாரி உரிமையாளர்களுக்கும் ரிக்ஷா வண்டிக்காரர்களுக்கும் — வட்டிக்கு கடன் கொடுத்து சுரண்டி வருகிறார்கள். காளிமார்க், வின்சென்ட் குளிர்பானங்கள், ஊர்வசி, பொன்வண்டு, வெண்ணிலா சோப்புகள் போன்ற தமிழ் முதலாளிகளின் தொழில்களும் கைத் தொழில்களும் குடிசைத் தொழில்களும் 'சேட்டுகளின்' பெருந் தொழில் - மூலதனத்துடன் போட்டியிட முடியாமல் நசிவுறுகின்றன. தோட்டத் தொழில், இன்ஜினியரிங் தொழில், திரைப்படத் துறை, சுற்றுலாத் துறை, வேதியியல் - ரசாயன பொருட்கள் உற்பத்தி, ஏற்றுமதி ஆடை - தோல் உற்பத்தி, ஆலைத்துணி - உணவு தானிய மொத்த வணிகம்... என பழ. நெடுமாறன் தனது பிரசுரத்தில் பட்டியலிட்டிருப்பவைகளில் 'சேட்டுகளின்' ஆதிக்கம் உள்ளது என்பது உண்மைதான். ஆனால் இந்நிகழ்ச்சிப் போக்கு இந்தியா முழுவதும் நிகழ்கிற ஒன்றாகவும் 'மார்வாரி' - குஜராத் பனியாக்களிடம் மட்டும் என்றில்லாமல் பார்சி, முஸ்லீம் மற்றும் பிற தேசிய இன - பனியாக்களிடம் இருந்து வருகிற தாக்குதலாகவும் உள்ளது. இதை மறைப்பதும் மறுப்பதும் எந்த தேசிய இனத்திற்கும் தன்னுரிமையை - விடுதலையை தேடித் தராது.

இந்து சனாதன - நால் வருண அடிப்படையில் நிலப் பிரபுத்துவச் சமுதாயத்தில் நிலவிய உழைப்புப் பிரிவினைப்படி வைசியர் என்ற பிரிவைச் சேர்ந்த சாதியினரே இந்தியா முழுவதும் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தனர். இவர்கள் ஆரம்பத்தில் சிறு - சில்லரை வியாபாரத்தின் மூலமே விவசாயிகளையும் கைவினைஞர்களையும் சுரண்டி வந்தனர். இதில் சிலர் முன்னேறி பெருவணிகர்களாகவும் லேவாதேவிக் காரர்களாகவும் மாறினார்கள். போர், படையெடுப்புக் காலங்களில் நிலவிய பஞ்சத்தைப் பயன்படுத்தி அதிகம் கொள்ளையடித்து சொத்து சேர்த்தனர். பலர் அரசின் கருவூலப் பிரதிநிதிகளாகி வரிவசூலிப்பவராகவும் இருந்தனர். கடன் திருப்பித்தராதவர்களின் நிலங்களையும் கைத்தொழில் பட்டறைகளையும் பறித்து நிலவுடமையாளர்களாகவும் பட்டறை முதலாளிகளாகவும் கூட விளங்கினார்கள். இதைப் பெரும்பாலும் நிதியாக மாற்றிக் கொள்வதிலேயே ஆர்வம் காட்டினர். நிலவுடமையாளர்கள் சிலரும் இத்தகைய வணிக, வட்டித் தொழிலை பக்கத் தொழிலாக செய்து வந்தனர். அதாவது ஆங்கிலேயர்கள் வருகைக்கு முன்பே வைசிய சாதியினர் சிலரிடம் நிதி திரண்டு உபரியாக இருந்தது.

18-ம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து இந்தியாவின் விவசாயம் பணப்பயிர் முறையாக மாறி வளர்ந்து வந்தது. பருத்தி, கரும்பு, கம்பளி, தேயிலை, புகையிலை, அவுரி, அபின், எண்ணெய் வித்துக்கள் முதலானவைகளின் ஏற்றுமதியும் கணிசமாக அதிகரித்து வந்தது. நிதி உபரியாக திரட்டி வைத்திருந்த வைசிய சாதியினர், பணப்பயிர் உற்பத்திக்கு நிலவுடைமையாளர்களை ஊக்குவித்து வட்டிக்கு பணம் கொடுப்பவர்களாகவும் உள்நாட்டு சந்தை மற்றும் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து தரும் பெரு வணிகர்களாகவும் செயல்பட்டனர். ஆங்கிலேயர்களுக்கும் பணப்பயிர் நிலவுடமையாளர்களுக்கும் இடையிலான தரகு வணிகர்களாக இருந்து மேலும் தமது செல்வத்தைப் பெருக்கினர். ஆங்கிலேயர் நுழைவுக்குப் பின் இந்திய சாதிய - நிலவுடமை முறையில் மாற்றம் ஏற்பட்டு விரைவாக சிதைவுறவே பார்ப்பன, சத்திரியப் பிரிவு சாதியினர் கூட தமது பெருஞ் செல்வத்தை இத்தகைய வணிகத்திலும் வட்டித் தொழிலிலும் திருப்பி விட்டனர். (எனினும் இச்சாதியினர் கணிசமானோர் ஆங்கிலேயர்களின் நிர்வாக 'குமாஸ்தா'க்களாகவே மாற்றப்பட்டார்கள்; மாறிப் போனார்கள்).

> **'மார்வாரி' - குஜராத் பனியாக்கள் மட்டும் என்றில்லாமல் பார்சி, முஸ்லீம் மற்றும் பிற தேசிய இன பனியாக்களும் இந்தியா முழுவதும் ஆதிக்கம் செலுத்துவோராக உள்ளனர்.**

பல்வேறு யுத்தங்களால் பருத்தி, அபின் ஏற்றுமதியில் சரிவு ஏற்படவே இவ்வைசியப் பிரிவினர் தமது மூலதனத்தை மாற்றிக் கொள்ள வேண்டியிருந்தது. கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சி மாறியதற்குப் பின் பிரிட்டிஷ் முதலாளிகளின் தேவைக்கேற்ப இங்கு ஆலைகள் நிறுவப்பட்டன. இந்த ஆலைகளுக்கு வேண்டிய கச்சாப் பொருட்களை - உற்பத்தி பொருட்களை ஏற்றுமதி, இறக்குமதி செய்தும் உள்ளூர் சந்தைக்கு வர்த்தகம் செய்தும்தரும் நம்பகமான தரகு முகவர்களாக இவர்களில் பலர் மாறினார்கள். உள்ளூர் சந்தையளவில் சர்க்கரை, எண்ணெய், துணி, செங்கல், இரும்பு முதலான ஆலைகளை ஆங்கிலேய முதலாளிகள் தொடங்கிய போது பங்குதாரர்களாகவும், நிர்வாகிகளாகவும், தரகு வணிகர்களாகவும் மாறினார்கள்; அதாவது இவர்கள் இளையப் பங்காளிகளானார்கள். எந்திரங்கள், மின்சார கருவிகள், மோட்டார் வாகனங்களின் உற்பத்தி மற்றும் இறக்குமதியில் கணிசமானோர் இடைத் தரகர்களாக இருந்து வந்தார்கள். முதல் உலகப் போருக்குப் பின்னே ஆங்கிலேய அரசு அளித்த தொழில் பாதுகாப்புகளைப் பயன்படுத்தி தமது மூலதனத்தை ஆலைகளில் அதிகம் கொட்டினர். ஆங்கிலேயனின் வெளியேற்றத்துக்குப் பின்னர் பல "பிரிட்டிஷ் கம்பெனி"களையும் கைப்பற்றிக் கொண்டார்கள்.

இப்படி சாதியமும் காலனிய ஆட்சியும் இந்திய மற்றும் தேசிய முதலாளித்துவத்தை வளரவிடாமல் தடுத்ததோடு தரகு வணிக - முதலாளித்துவ கும்பல் உருவாக்கத்திற்கும் காரணமாக இருந்தன. அதாவது நிலப்பிரபுத்துவ உற்பத்தியில் சுரண்டி வளர்ந்த வணிக - வட்டி மூலதனம், தொடர்ந்து முதலாளித்துவ



படிப்பகம்

www.padippakam.com

உற்பத்தியின் தொடக்கமாக இருந்த சிறு வீத பட்டறை - கைத்தொழில் உற்பத்தியிலிருந்து தேசிய முதலாளித்துவ உற்பத்தி வரை வளரவிடாமல் விழுங்கி தரகு வணிக - ஆலை மூலதனமாக மாற்றிக் கொண்டது. இத்தொழிலில் ஈடுபட்டவர்கள் பெரும்பாலும் வைசியப் பிரிவு சாதியினராக அமைந்து விட்டனர். (ஆங்கிலேய கம்பெனிகளுக்கு தரகு வேலை செய்ததால் இவர்களை பொதுவாக பனியாக்கள் - Banians - என்று அழைப்பர்). மூலதன திரட்சியில் நிகழ்ந்த இந்திய முதலாளித்துவத்தின் தனிச்சிறப்பான தன்மைக்கும் இதுவே காரணம்.

பனியாக்களின் மூலதனம் 18-ம் நூற்றாண்டிலிருந்து பிற மாநிலங்களுக்கும் நாடுகளுக்கும் இடம் பெயரத் தொடங்கி விட்டது. இதில் முதலில் குஜராத்தைச் சேர்ந்த பார்சிகள், முஸ்லீம்கள் மற்றும் வைசிய சாதியினரின் மூலதனம் முதன்மையாக பம்பாய்க்கும் இரண்டாம் பட்சமாக பிற மாநிலங்களுக்கும் சீனா, அரேபிய - ஆப்பிரிக்க நாடுகளுக்கும் விரிவடைந்தது. பம்பாயில் கப்பல் கட்டுமான - போக்குவரத்து தொழிலில், துணி ஆலைகளில், எண்ணெய் - பருப்பு மில்களில் டாடா, ஜீஜீபாய், ஈரானி, பனாஜி, பட்டேல், மோடி, வாடியா, பாண்டே, மெமோன் முதலான "பனியா" குடும்பங்கள் செல்வாக்கு செலுத்தின.

சென்னை மாகாணத்திலிருந்து இடம் பெயர்ந்த நாட்டுக் கோட்டைச் செட்டியார்களின் மூலதனத்தை இரண்டாவது நிகழ்வாக கூறலாம். இவர்கள் தமது வணிக - வட்டித் தொழிலை இலங்கை, பர்மா, மலேசியா, இந்தோனேசியா, பிஜி தீவுகள் மற்றும் தென் கிழக்கு ஆசிய நாடுகள் பலவற்றிற்கும் ஆங்கிலேயனின் இளைய பங்காளிகளாக சென்று விரிவுபடுத்தினர். அண்ணாமலை செட்டியார் குடும்பத்துக்கு மட்டும் பர்மாவில் 1 லட்சம் ஏக்கர் தோட்டமும் தென்பர்மா கார்ப்பரேசனும் சொந்தமாக இருந்தன. இலங்கையின் மொத்த அரிசி வணிகமும் செட்டியார்களின் கைவசமே இருந்தது. 1890-ல் செட்டியார்களின் மூலதனம் 10 கோடியாக இருந்தது. இது அன்றைய சென்னை மாகாணத்தின் ஓராண்டு வருமானத்தை விட அதிகம். 1929-ல் தொடங்கப்பட்டது "செட்டிநாடு வங்கி". இதை 10.9 கோடி ரூபாய் மூலதனத்தில் தொடங்கி கிளைகளை பரவிட்டார்கள்.

மூன்றாவதாக இடம் பெயர்ந்தது, ராஜபுதனத்தைச் சேர்ந்த பனியாக்களின் மூலதனம். ராஜபுதனத்தின் பிகானீர், மார்வார், சேகாவாத் ஆகிய மூன்று பகுதிகளிலிருந்து சென்றாலும் இப்பனியாக்களை பிற மாநிலத்தவர் மார்வாரிகள் என்றே அழைக்கத் தொடங்கினர். தமது வேலையாட்களாக சொந்தப் பகுதியின் உறவினர்களையும் பிற சாதியினரையும் உடன் அழைத்து வந்தனர். இவர்களும் 'மார்வாரிகள்' என்று அழைக்கப்படுவதால் "மார்வாரி பனியாக்கள்" என்ற பதமே சரியானதாக இருக்கும். குறிப்பாக முதல் உலகப் போருக்குப் பின்னரே 'மார்வாரி' பனியாக்களின் மூலதனம், பஞ்சாப், பீகார், கல்கத்தா, ஒரிசா, பம்பாய், வடகிழக்கு மாநிலங்கள், தென்னிந்தியா, பர்மா என பல பகுதிகளுக்கும் அதிகம் பரவியது. மஹேஸவரி, அகர்வால், ஆஸ்வால் சாதிகளைச் சேர்ந்த பனியா குடும்பங்கள்தான் ஏராளம். பிர்லா, டால்மியா, சிங்கானி, கோத்தாரி, பங்கூர், பஜாஜ், கெய்த்தான், கோயங்கா, பகாரியா, சமாரியா, ஜாலன், சோமனி, கனேரிவாலா, தாப்ரிவாலா, ஜுன் ஜுன்வாலா, ஜாதியா, ரியன்வாலா சேத், சரண்லால், லால்சந்த், டராசந்த், உக்கம் சந்த் முதலான குடும்ப பெயர்களைக் கொண்ட 'மார்வாரி' பனியாக்களே பல மாநிலங்களிலும் அகில இந்திய அளவிலும் செல்வாக்கு செலுத்துகிறார்கள்.



தொடக்கத்தில் வணிக - ஆலை மூலதனத்தில் செல்வாக்கு செலுத்திய பார்சி, முஸ்லீம்கள் மற்றும் வங்காளிகளையும் வட்டி மூலதனத்தில் செல்வாக்கு செலுத்திய செட்டியார்களையும் போட்டியிட்டு பின்னுக்குத் தள்ளியவர்கள்தான் இந்த 'மார்வாரி' பனியாக்கள். இவர்களோடு குஜராத்தைச் சேர்ந்த வைசிய சாதியினர் சிலரும், விதிவிலக்காக "டாடா" போன்ற பார்சிகளும் இன்று இந்திய உற்பத்தி - வணிகத்தைக் கட்டுப்படுத்துவதில் முன்னணியில் இருக்கின்றனர். இவர்களுடன் போட்டியில் தோல்வியுற்றவர்களும் இவர்களுக்கு அடுத்த நிலையில் இருந்தவர்களும் அடுத்தப்படியாக சந்தையைக் கட்டுப்படுத்துகின்றனர். இதற்கு பஞ்சாப்பின் அகர்வால் சாதியைச் சேர்ந்த சிறீராம், கத்ரி சாதியைச் சேர்ந்த தாப்பர், குஜராத்தின் ஜெயின் பிரிவைச் சேர்ந்த வால்சந்த், ஹிராசந்த், பட்டேல் சாதியைச் சேர்ந்த மபட்லால், தமிழ்நாட்டின் பார்ப்பனரான சேஷாயி, டி.வி. சுந்தரம், ஈசன், சிவசைலம், மராத்தி பார்ப்பனன் கிர்லோஸ்கர், வங்காளியான என்.சி. சர்க்கார் முதலியோரை உதாரணமாக குறிப்பிடலாம். இதற்கு அடுத்த நிலையில் உள்ளூர், உட்பகுதி சந்தையைக் கைப்பற்றியிருக்கும் பனியாக்கள்: பஞ்சாப்பின் அரோரா; குஜராத்தின் ஜாட், அனவில், கோலிபட்டேல், உ.பி - யின் பார்ப்பனர், தாக்கூர், உமர், கேசர்வாணி; தென்னிந்தியாவின் நாட்டுக் கோட்டை - கல்லிடைக் குறிச்சி செட்டியார், பேரி - கோமுட்டி செட்டி, பலிஜா - கம்மா நாயுடுகள், லிங்காயத்துகள், நாடார்கள், ரெட்டி, ராவ், பன்ஜிகர்கள் எனப் பல சாதியைச் சேர்ந்தவர்களாக உள்ளனர்.

'மார்வாரி' - குஜராத்தி பனியாக்கள் மேல் நிலைக்கு வந்ததற்கு காரணம் இல்லாமல் இல்லை. முகலாயர் காலத்திலேயே அபினி வியாபார - கள்ளச் சந்தையில் பணத்தைக் குவித்து வந்தனர். அடிக்கடி இப்பகுதியில் நடந்த யுத்தத்தைச் சாதகமாக்கிக் கொண்டு விவசாயிகளை ஒட்டச் சுரண்டி உற்பத்தியை முடக்கி, ராஜஸ்தானில் பஞ்சத்தை தோற்றுவித்ததில் இவர்களுக்கும் பங்குண்டு. இவர்கள் தமது பணத்தை தரகு வணிக - வட்டித் தொழிலில் இந்திய அளவில் திருப்பி விட்டதற்கு முகலாய, ஆங்கிலேய ஆட்சியாளர்களும் துணை புரிந்தனர். பல அரசு சலுகைகளை பெற்றதோடு கல்வியறிவு, தொழில் துறை தொடர்பு கிடைப்பதற்கும் இவர்கள் முக்கியத்துவம் கொடுத்தனர். இவற்றோடு தமது கிளை நிறுவனங்களின் கணக்கு வழக்குகளை சோதிப்பது, உறவினர்களை கண்காணிப்பு வேலைக்கும் ஊர்க்காரர்களை கீழ்பட்ட நம்பகமான வேலைகளுக்கும் நியமிப்பது, தமது வியாபார சூதாட்ட தந்திரம் - திறமை முதலிய காரணங்களாலேயே எளிதாக முன்னுக்கு வந்தனர். இன்று மின்சாரம், மோட்டார், மின்னனு சாதனங்களின் மொத்த விற்பனையில் மற்றும் 'ரியல் எஸ்டேட்' தொழிலில் சட்ட விரோதமாக செயல்படுவதன், பங்குச்சந்தை சூதாட்டத்தின் மூலம் பொதுத்துறை, தனியார் ஆலைகளை சூறையாடுவதன் சூட்சமமும் இதுதான்.

இவர்கள் தமது சந்தையை இந்திய அளவில் விரிவுபடுத்தி பெருக்கும் நோக்கில் பார்ப்பனக் கும்பல் முன் வைக்கும் சமஸ்கிருதத்தின் துணை மொழியான இந்தியை (தங்களது தேசிய இன மொழிகள் - குஜராத்தி, ராஜஸ்தானி - வேறாக இருந்தாலும்) இந்திய ஆட்சி மொழியாக ஏற்று பரப்ப பக்கபலமாக நிற்கிறார்கள். இதே நோக்கத்தில்தான் "இந்து - இந்தி கலாச்சாரத்தை" அனைத்து மக்கள் மீது திணிப்பதையும் ஏற்றுக் கொண்டனர். தொடக்கம் முதலே காங்கிரசிற்கும்,



படிப்பகம்

www.padippakam.com

ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்கும் நிதியளித்து வளர்த்து வருவதோடு அக் கட்சிகளில் சில பனியாக்களும் நேரடியாக பங்கேற்றுள்ளனர். இந்தி மொழியல்லாத மாநிலங்களில் தமது சொத்துக்களையும் உயிர்களையும் காங்கிரசு, ஆர்.எஸ்.எஸ். பக்கபலத்துடனேயே காத்து, பெருக்கி வருகிறார்கள்.

இருந்தாலும் ஒட்டு மொத்த தரகு முதலாளித்துவ கும்பலின் ஒரு பிரிவினரும் போட்டியின் விளைவாக முன்னணியில் நிற்பவருமே இந்த 'மார்வாரி' - குஜராத்தி பனியாக்கள். தன்னுரிமைக்குத் தடையாக இருக்கும் தரகு முதலாளித்துவ கும்பல் இவர்கள் மட்டுமல்ல. இவர்களோடு சேர்ந்து தமது சொந்த இனமக்களின் தன்னுரிமைப் போராட்டத்தை ஒடுக்குபவர்களாக பிற இன - சாதியைச் சேர்ந்த தரகு முதலாளிகளும் உள்ளனர்.

ஆனால் தன்னுரிமை முன்னணியினர், தமது குருட்டு தேசிய இனவாதப் பார்வையால் தரகு முதலாளிகளை குஜராத்தி - 'மார்வாரி' பனியாக்களாக குறுக்கிப் பார்க்கிறார்கள். தமிழகத்தின் தன்னுரிமைக்கு ''தமிழ் நாட்டிலுள்ள மார்வாடி - குஜராத்தி சேட்டுகளின் பொருளாதார ஆதிக்கத்தையும் சுரண்டலையும் அடியோடு தகர்த்து எறிவதற்கு நாம் உறுதி பூண வேண்டும். இல்லையென்றால் மார்வாடி - குஜராத்தி சேட்டுகளின் காலனி நாடாகத் தான் இருக்கும்'' என்றும் ''தமிழ் நாட்டைச் சுரண்டி வாழும் மார்வாடி - குஜராத்தி கும்பலை நாம் வெளியேற்றி விட்டால் பிற மாநிலங்களில் வாழும் தமிழர்களை நாமே திரும்ப அழைத்து அவர்களை நல்ல முறையில் வாழச் செய்ய முடியும். தமிழகம் தன்னுரிமை பெறுவதன் மூலமும் தமிழகத்தின் வளங்களைத் திட்டமிட்டுப் பயன்படுத்துவதன் மூலமும் நாம் இதைச் சாதிக்க முடியும்'' என்கிறார், பழ. நெடுமாறன்.

பிரிட்டிஷ், ஏகாதிபத்தியத்திலிருந்து இன்றைய அனைத்து ஏகாதிபத்திய வல்லரசு நாடுகளும் அதன் முதலாளிகளும் தொழில் நுட்பக் கூட்டு, மூலதனக் கூட்டு என்று வருவதே ஏழை நாடுகளை சுரண்டுவதற்குத்தான் என்பது அரிச்சுவடி. இந்திய, தமிழக ஆட்சியாளர்கள் அந்நிய நாடுகளின் - முதலாளிகளுக்குச் சேவகம் செய்து சொந்த மக்களுக்குத் துரோகம் செய்து வருவதும் வெளிப்படை. ஆனால் ''தன்னால் பெரும் தொழில்களை நடத்த சக்தியற்ற பட்சத்தில் அவற்றை தொடங்க வரும் வெளியாரை நிபந்தனைகளுடன் எந்த நாடும் அனுமதிக்கும். மேற்கண்டவற்றில் எதுவுமே மார்வாடி - குஜராத்திகளுக்குப் பொருந்தாது. தமிழர்களிடம் இல்லாத எந்தத் தொழில் நுட்பம் மார்வாடி - குஜராத்திகளிடம் உள்ளது?'' என்று கேட்கிறார் நெடுமாறன். அதாவது அந்நிய கம்பெனிகளுடன் தமிழகப் பனியாக்கள் கூட்டு சேர்ந்து கொள்ளையடிப்பதை ஆதரித்து நின்று அதையே செய்யும் சேட்டுகளை மட்டும் எதிர்க்கிறார். திராவிட இனவாதிகள் பார்ப்பனர்களுக்கு எதிராக ஆங்கிலேயர்களை ஆதரித்தது போல்தான் இதுவும். 'மார்வாரி' - குஜராத்தி பனியாக்களிடம் பறிபோன தமிழர் பெருந்தொழில்கள் என்று பட்டியலிடுகையில் அப்பட்டமாகவே தரகு முதலாளிகளான கருமுத்து செட்டியார் குடும்பம், முத்தையா செட்டியார் குடும்பம், எஸ். விசுவநாதன் (என்பீல்டு நிறுவனம்), கோவை ராமகிருஷ்ணன் (சவுத் இந்திய விஸ்கோஸ் லிட்), ஜி.கே. சுந்தரம் (லட்சுமி மில்ஸ்) போன்றவர்களுக்காக வக்காலத்து வாங்குகிறார்.



தமிழகத்தில் வணிக - ஆலை மூலதனத்தில் இறங்கிய செட்டியார் மற்றும் பார்ப்பனக் குடும்பங்கள் (ஏ.சி. முத்தையா செட்டியார், ஆர். கே. சண்முகம் செட்டியார், அண்ணாமலை செட்டியார், எஸ். என். சங்கரலிங்கம், சேஷாயி, டி.வி. சுந்தரம், குப்புசாமி அய்யர், எஸ். எஸ். வாசன், டி.டி. கிருஷ்ணமாச்சாரி, அனந்தராம கிருஷ்ணன், பார்த்தசாரதி அய்யர், சி.ஆர். சீனிவாசன் முதலானவர்கள்) ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் இளைய பங்காளிகளாகவே - இடைத் தரகர்களாகவே இருந்தனர். ஹார்வி, பாரி முதலிய ஏகாதிபத்திய நிறுவனத்துடன் கூட்டு சேர்ந்து தரகு வேலை செய்தவர்கள், போகப்போக சில ஆலைகளையும் சொந்தமாக்கிக் கொண்டனர். இன்றும் இவர்களின் குடும்பத்தினர் பல்வேறு அந்நிய ஏகாதிபத்திய முதலாளிகளுடன் கூட்டு சேர்ந்தே உள்ளனர். மேலும் இன்று 'மார்வாரி' - குஜராத்தி பனியாக்களுடன் தொழில் முறை கூட்டாளிகளாக தமிழின பனியாக்கள் உள்ளதையும் பார்க்கிறோம். இவை பற்றியெல்லாம் தன்னுரிமை முன்னணியினர் வாய் திறவாமல் மூடி மறைக்கிறார்கள்.

இதை விட ஒரு படி மேலே போய், ''வெளி நாடுகளுக்குச் சென்ற தமிழர்களும் சரி, வெளி மாநிலங்களுக்குச் சென்ற தமிழர்களும் சரி, அனைவரும் சுரண்டிப் பிழைக்கப் போனவர்கள் அல்லர். தங்கள் உழைப்பினால் அந்த நாடுகளின் வளத்தைப் பெருக்கி தாங்களும் வாழ்வதற்காகவே சென்றார்கள். அந்நாடுகளில் வட்டிக் கடை நடத்தி அல்லது தொழில் வணிக நிலையங்கள் நடத்தி கோடி கோடியாகச் சம்பாதிப்பதற்குச் சென்றவர்கள் அல்ல'' என்று புளுகுகிறார், நெடுமாறன். இதற்கு இவர்கள் உதாரணம் காட்டும் பம்பாய், பெங்களூரை எடுத்துக் கொண்டாலே புளுகை நிரூபிக்க முடியும். தமிழகத்திலிருந்து பணத்தை எடுத்துக் கொண்டு அந்த முன்னேறிய தொழில் நகரங்களில் வியாபாரம், சிறு உற்பத்தி நடத்தவே செட்டியார்களில், நாடார்களில் பலர் போனார்கள். பம்பாயில் தனியாகப் பல சாதிச் சங்கங்களைக் கட்டியும் மாதுங்கா, மேற்கு ஜார்ஜியான், சியோன், பொய்சர் போன்ற பகுதிகளில் வசதியாகவும் இருக்கும் நாடார்கள் பலரைப் பார்க்கலாம். இவர்கள் சிறு எண்ணிக்கையினர், சிறிய மூலதனக்காரர்கள் என்பதற்காகவே உண்மையை மறைத்து இனவாத பூதக் கண்ணாடியில் ''தராவி'' குடிசைகளை மட்டுமா காட்ட வேண்டும்?

மேலும் இவர்கள், வட்டி - லேவாதேவி முறையையே ஒழிக்க விரும்பவில்லை. அது தமிழனின் கையிலிருந்து பறிபோனது பற்றித்தான் கவலைப்படுகிறார்கள். ''தமிழ் நாட்டில் பரம்பரை பரம்பரையாக நாட்டுக் கோட்டை நகரத்தார் நடத்தி வந்த லேவாதேவித் தொழிலை மார்வாடி - குஜராத்திகள் அடியோடு நசுக்கி விட்டனர். முழுமையாகக் கைப்பற்றியும் விட்டனர்'' என்று எழுதுகிறார் நெடுமாறன்.

1956 -க்கு பின்னால் வந்த 'மார்வாரி' பனியாக்களை மட்டுமே வெளியேற்றக் கோருவது இன்னொரு மாபெரும் அபத்தம். இப்போராட்டம் ''இனவெறி'' என்று யாரும் முத்திரை குத்தி விடக் கூடாது என்ற அச்சத்தின் காரணமா



படிப்பகம்

www.padippakam.com

கவோ என்னவோ தன்னுரிமை முன்னணியினர் இது போன்றும், சௌராஷ்டிராக்காரர்களை (குஜராத்தியர்கள்), தெலுங்கர்களை வெளியேறச் சொல்லவில்லை என்றும் நியாய வாதங்களை முன் வைக்கின்றனர். 1956-க்கு முன்பு இங்கு வந்த ராம்நாத் கோயங்கா, டால்மியா போன்றவர்களின் சொத்துக்களையும் சுரண்டலையும் ஏற்றுக் கொள்வதாக மறைமுகமாக கூறி, தாமே தமது கருத்துக்கு குழி பறித்துக் கொள்கிறார்கள். 1890 -வாக்கில் கம்போடியா பருத்தி கொங்கு பகுதியில் அறிமுகமாகிய போதே பம்பாய் ஆலைக்கு சரக்கு கொள்முதல் செய்வதற்காக இங்கு பல 'மார்வாரி' பனியா குடும்பங்கள் குடியேறின. இவர்களில் பலர் ஈரோடு, தேனி, திருப்பூர், கோவை போன்ற பகுதிகளில் சிறு உற்பத்தியாளர்களாகவும் வணிகர்களாகவும் வட்டிக் கடை முதலாளிகளாகவும் நீடிக்கின்றனர்.

நிலப் பிரபுத்துவம் மற்றும் தரகு முதலாளித்துவத்தை அதன் சகல அரங்கிலும் எதிர்த்து முறியடிக்கும் போதே — இதை ஆயுதப் போராட்டப் பாதையிலேயே சாதிக்க முடியும் — தன்னுரிமையைப் பெற முடியும். திட்ட வகைப்பட்ட தன்னுரிமைப் போராட்டத்திற்கு உட்பட்ட ஒரு கோரிக்கையாக - செயல்தந்திர வழியாக தரகு முதலாளித்துவ கும்பலில் மேலாதிக்கம் செலுத்தும் ''இந்து - இந்தி - இந்தியா'' என்ற முழக்கத்தின் பாதுகாவலர்களுமான மார்வாரி - குஜராத்தி பனியாக்களை எதிர்ப்பது சரியானதே. ஆனால் இந்தக் கண்ணோட்டத்தில் தன்னுரிமை முன்னணியினர் ''மார்வாடி கடை மறியல்'' போராட்டத்தை முன்னெடுக்கவில்லை. தரகு முதலாளிகளை குறுகிய தேசிய இனவாதக் கண்ணோட்டத்தில் பார்த்தும் மாற்றாக தமிழ்த் தரகு முதலாளிகளோடு தமிழர்களின் பிற்போக்கு நிலபிரபுத்துவ கலாச்சார பண்பாடுகளையும் உயர்த்திப் பிடித்தே போராட்டத்திற்கு விளக்கங்களை முன் வைக்கிறார்கள். தன்னுரிமை கொள்கைக்கு ஒரு அரசியல் திட்டமில்லாததால் அதைச் சரிக்கட்ட இது போன்ற போராட்டங்கள் நடத்துகின்றனர் என்பதே உண்மை.

மேலும் தன்னுரிமைப் போராட்டத்தை வரம்புக்குட்பட்ட - சட்டவாதப் போராட்டமாகவே அணுகுகிறார்கள். தன்னுரிமை முன்னணியினர் தமது போராட்ட பாதையை எழுத்தாலோ, பேச்சாலோ ஒரு ஆயுதப் போராட்ட வழியாக அறிவித்ததில்லை. ஈழத்தின் ஆயுதப் போராட்டத்தை பகிரங்கமாக ஆதரிப்பதில்கூட தமிழக அரசியல் நிலைமைக்கேற்ப வளைந்து கொடுத்தே உரக்கவும் மௌனமாகவும் பேசுகிறார்கள். இவர்களின் நடைமுறையைப் பார்த்தால் ''கூட்டு அரசியல்'' நடத்துவதையே தமது அரசியல் மக்கள் திரள் பாதையாக்

> **'மார்வாரி' குஜராத்தி பனியாக்களிடம் பறி போன தமிழர் பெருந்தொழில்கள் எனப் பட்டியல் இடுகையில், அப்பட்டமாகவே தமிழகத்தைச் சேர்ந்த தரகு முதலாளிய குடும்பங்களுக்கு வக்காலத்து வாங்குகின்றார் நெடுமாறன்.**

கிக் கொள்வார்கள் போலிருக்கிறது! ஒரு பிரச்சினையில் ஒத்த கருத்துக்கு வராமல் ஏராளமான முரண்பாடுகளுடன் வெறும் வார்த்தையில் மட்டும் (தமிழ், தமிழினம், இந்தி திணிப்பு எதிர்ப்பு, சிறுபான்மையினர் மொழி பாதுகாப்பு) ஒற்றுமை கண்டு, கூட்டு சேர்ந்து 'மாநாடு'(?) நடத்தவே ஆர்வம் காட்டுகின்றனர்.

ஓட்டுக் கட்சி அரசியலில் இருந்து ஓரங்கட்டப்பட்டதால் ''தமிழ்த் தேசிய இயக்கம்'' என்ற பெயர் பலகையின் கீழ் அடைக்கலமாகி ''கௌரவ விருந்தினராக'' அரசியல் நடத்திக் கொண்டிருக்கிறார், பழ. நெடுமாறன். காவிரி நீர் பிரச்சினையில் ஜெயலலிதா ஆடும் உண்ணாவிரத நாடகத்தில் கூட ஒற்றுமையைக் கண்டு பிடித்து ஓடிப் போய் நலம் விசாரித்து விட்டு வந்தார். இவருடன் சேர்ந்து எப்படி சுப. வீரபாண்டியனும், பெ. மணியரசனும் தன்னுரிமையை சாதிக்கப் போகிறார்களோ.. தெரியவில்லை?! ''தெலுங்கர்களும் வெளியேற வேண்டும்; இன்று மார்வாடிகளை வெளியேற்றுபவர்கள் நாளை தெலுங்கர்களையும் வெளியேற்ற முன் வருவார்கள்'' என்று சொல்லிக் கொண்டு காத்திருக்கிறார் ''ரா ஏஜெண்ட்'' நகைமுகன். இவருடன் தமிழின உரிமைக்காக கூட்டு சேர்ந்து கொள்கின்றன, சில குழுக்கள். தன்னுரிமைப் போராட்டத்தில் தலித்துக்களின் தலைமையே வேண்டும் என்று கூறுகிறது, ஒரு குழு. அதனுடன் முடிவற்ற விவாதம் நடத்திக் கொண்டுள்ளனர். மார்க்சியம், லெனினிய சாயத்தை ஒவ்வொருவரும் பல்வேறு அளவுகளில் எடுத்துப் பூசிக் கொள்கிறார்கள். பாட்டாளி வர்க்கத் தலைமையில் தான் தன்னுரிமைப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளதாக கூறிக் கொண்டு பிற கூட்டாளிகளை அதற்கு வென்றெடுக்க முயல்கிறது, பெ. மணியரசனின் குழு. இப்படி ஏகப்பட்ட முரண்பாடுகள் இருந்தாலும் ''சிறிய கருத்து முரண்பாடுகள் தான்'' என்று தூசி தட்டிவிட்டுக் கொள்கிறார்கள்.

தன்னுரிமை முன்னணியினரின் குறுகிய - குருட்டு தேசிய இனவாத கண்ணோட்டத்தையும், குட்டி முதலாளித்துவ அரசியல் ஓட்டாண்டித்தனத்தையும் சுட்டிக் காட்டுவதற்காகவே இத்தகைய அம்பலப்படுத்தல்களை செய்கிறோமே ஒழிய அவர்களது ''மார்வாடி கடை மறியல்'' போராட்டத்தின் நியாயத்தை மறுப்பதற்காக அல்ல. குட்டி முதலாளித்துவ தலைமையிலான தன்னுரிமைப் போராட்டங்கள். அஸ்ஸாம், மணிப்பூர், ஈழம், பாலஸ்தீனம், தென் ஆப்பிரிக்கா போன்றவை பின்னடைவுக்கோ, சிக்கலுக்கோ, திரிபுகளுக்கோ, துரோகத்திற்கோ இலக்காகியுள்ளதைப் பார்க்கிறோம். இதற்கு முக்கிய காரணம் அவர்களிடம் சித்தாந்தம், கொள்கை, அரசியல் திசைவழி எதுவும் தெளிவாக - திட்டவகைப்பட்டதாக இல்லை என்பதே. இதே வகையில் தமிழகத்தில் தன்னுரிமைப் போரட்டத்தை எடுக்கும் நெடுமாறன், மணியரசன், சுப. வீரபாண்டியன் முதலான குட்டி முதலாளித்துவ தலைமைகளும் தமது ஓட்டாண்டி அரசியல் - வழி முறைகளில் இனப் போராட்டத்தை முட்டுச் சந்துக்குள் கொண்டு போய் நிறுத்தவே வாய்ப்புள்ளது.

● ராசு

முற்போக்கு நூல்களுக்கு ஒரு முகவரி

**கீழைக்காற்று**

நூல் வெளியீட்டகம், விற்பனையகம்

10, ஔலியா சாகிப் தெரு, எல்லீசு சாலை, சென்னை - 2.

நூல்கள், ஒலி நாடாக்கள், பத்திரிக்கைகள் கிடைக்கும்.



படிப்பகம்

www.padippakam.com

# தென்னாப்பிரிக்கா: ஆட்சி மாறியது அரசு எந்திரம் மாறியதா?

**நிறவெறி அதிகாரபூர்வமாக ஒழிக்கப்பட்டுள்ளது. ஆனால் வெள்ளையர்களின் அரசியல் - பொருளாதார ஆதிக்கமும் தொடர்ந்து நீடிக்கவே செய்கிறது.**

இருண்ட கண்டம் என்றழைக்கப்படும் ஆப்பிரிக்காவின் தென் கோடியிலுள்ளது, தென்னாப்பிரிக்கா. அங்கு 46 ஆண்டு காலமாக உரிமைக்காகப் போராடி வந்த தென்னாப்பிரிக்க கருப்பின மக்கள், இன்று நிறவெறிக் கொடுமையிலிருந்து விடுதலை பெற்றுள்ளார்கள். கருப்பின மக்களின் போராட்டத்தை வழிநடத்தியவரும் ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் முதுபெரும் தலைவருமான நெல்சன் மண்டேலா அந்நாட்டின் புதிய அதிபராகியுள்ளார். தமது சொந்த மண்ணில் முதன்முதலாக கருப்பினத்தவர் அதிகாரத்துக்கு வந்துள்ளதைக் கண்டு அந்நாடே மகிழ்ச்சி ஆரவாரத்தில் குலுங்கியது.

1652-ம் ஆண்டு முதலாக டச்சுக் காலனியாக இருந்த தென்னாப்பிரிக்கா, பின்னர் 1806-ல் ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தின் கீழே வந்தது. அன்றிலிருந்து இன்றுவரை வெள்ளையர்களின் நிறவெறி அடக்குமுறையின் கீழ் கருப்பின மக்கள் சிக்கித் தவித்தனர். கனிச் செல்வம் மிகுந்த தென்னாப்பிரிக்காவை வெள்ளை ஏகாதிபத்தியம் மட்டுமின்றி, அமெரிக்கா மற்றும் பிற ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களும் போட்டி போட்டிக் கொண்டு சூறையாடின. கருப்பின மக்களுக்கோ எவ்வித உரிமைகளும் கிடையாது. அவர்கள் வாழும் பகுதிகள் வெள்ளையரின் குடியிருப்பிலிருந்து தனியே பிரித்து வைக்கப்பட்டன. அனுமதிச் சீட்டின்றி வெள்ளையர் நகருக்குள் நுழையும் கருப்பர்கள் நடுவீதியில் சுட்டுக் கொல்லப்பட்டனர்; அல்லது சிறையிடப்பட்டனர். கருப்பின மக்கள் தங்கள் சொந்த மண்ணிலே குடியிருக்க வாடகை செலுத்த வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டனர். கல்வி, வேலை வாய்ப்பு, அரசு பதவிகள், சொத்துரிமை அனைத்திலும் கருப்பின மக்கள் புறக்கணிக்கப்பட்டு, இரண்டாந்திர குடிமக்களாகவே வைக்கப்பட்டார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக நாட்டின் ஆகப் பெரும்பான்மையான மக்களுக்கு வாக்குரிமையும் கிடையாது.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு பலவீனமடைந்த வெள்ளை ஏகாதிபத்தியம், தனது காலனி நாடுகளுக்குப் பெயரளவிலான சுதந்திரம் அளித்து தனது சுரண்டலையும் ஆதிக்கத்தையும் புதிய வடிவில் தக்கவைத்துக் கொண்டது. இந்தியாவைப் போலவே தென்னாப்பிரிக்காவிலும் பெயரளவிலான சுதந்திரம் - அதிகார மாற்றத்தைக் கொண்டு வர ஆங்கிலேயர்கள் ஆலோசித்து வந்தனர். ஆனால் தென்னாப்பிரிக்காவில் குடியேறி, சுரண்டிக் கொழுத்த வெள்ளையர்களோ இதை ஏற்க மறுத்து, 1948-ல் தென்னாப்பிரிக்காவை தமது சுதந்திரக் குடியரசாகப் பிரகடனப் படுத்தினர். பிரிட்டனின் நேரடிக் காலனி ஆட்சிக்குப் பதிலாக, குடியேறிய வெள்ளையர்களின் குடியரசாக தென்னாப்பிரிக்கா மாறியது. ஆனால் காலனிய காலத்தை விட கொடூரமாக சுரண்டலும் அடக்குமுறையும் நிறவெறிக் காட்டுமிராண்டித்தனமும் தொடர்ந்து நீ[illegible] தென்னாப்பிரிக்க கருப்பின ம[illegible] மீது நிறவெறி பயங்கரவாதத்தை ஏவிய வெள்ளை சிறுபான்மை அரசு, சிறிய அண்டை நாடான நமீபியாவையும் ஆக்கிரமித்துக் கொண்டது. இதுதவிர, விடுதலைப் போரில் அன்று ஈடுபட்டிருந்த மொசாம்பிக், ஜிம்பாப்வே, அங்கோலா முதலான நாடுகளுக்குள் தென்னாப்பிரிக்க ராணுவம் ஊடுருவி அந்நாடுகளின் விடுதலை இயக்கங்களை ஒடுக்கி வந்தது. கோடிக் கணக்கில் செலவிட்டு அதிநவீன ஆயுதங்களைக் குவித்துக் கொண்டு ஒருபுறம் கருப்பின மக்களை மிருகத்தனமாக ஒடுக்கியும், மறுபுறம் ஆப்பிரிக்க கண்டத்தில் சிறிய நாடுகளை அச்சுறுத்தி ஆக்கிரமிக்கும் ஏகாதிபத்தியங்களின் விசுவாச வேட்டை நாயாகவும் வெள்ளை நிறவெறி அரசு ஆட்டம் போட்டு வந்தது.

இக்கொடுமைகளுக்கும் அடிமைத்தனத்துக்கும் எதிராக நீண்டகாலமாக கருப்பின மக்கள் போராடி வந்துள்ளனர். ஆனால் எந்தவொரு சிறு எதிர்ப்பும் மிருக வெறியுடன் கடுமையாக அடக்கி ஒடுக்கப்பட்டது. கருப்பின மக்கள் ஆரம்பக் காலங்களில் காந்தீயப் பாதையில் அகிம்சை - சாத்வீக முறையிலான போராட்டங்களை மேற்கொண்டதால், அவர்களது போராட்டம் பெருந்தோல்வியையும் இழப்புகளையும் தொடர்ந்து சந்தித்து வந்தது. 1960-ம் ஆண்டில் ஷார்ப்வில்லே நகரில் நிறவெறி அரசுக்கு எதிராக ஆயிரக்கணக்கான கருப்பின மக்கள் ஆர்ப்பாட்டம் செய்த போது, நிராயுதபாணியான அம்மக்கள் மீது வெள்ளை நிறவெறி ராணுவம் கண் மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தி நூற்றுக்கணக்கானோரைக் கொன்றொழித்தது. சாத்வீகப் போராட்டத்தால் பலனேதும் இல்லை என்பதை இக்கொடிய நிகழ்ச்சி படிப்பினையாக உணர்த்தியது. கருப்பின மக்களின் போராட்டத் தலைவர்களான மண்டேலா, சிசிலு, தாம்போ முதலானோர் அகிம்சைப் போராட்டத்தை நிராகரித்து அன்றிலிருந்து ஆயுதப் போராட்டப் பாதையை மேற்கொண்டனர்.

இதையடுத்து விடுதலைப் போராட்டத் தீ பற்றிப் பரவியது. வெள்ளை நிறவெறி ராணுவம், போலீசுக்கு எதிராக கருப்பின மக்கள் கொரில்லாத் தாக்குதல்களில் இறங்கினர். நிறவெறி அரசு கருப்பின மக்களின் போராட்டங்களை வெறி கொண்டு ஒடுக்கியது. ஆயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டனர். மண்டேலா உள்ளிட்டு போராட்டத் தலைவர்கள் ரபென் தீவிலுள்ள தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டனர். பலர் சித்திரவதை செய்து கொல்லப்பட்டனர்.

குறிப்பாக '80-களின் இறுதியில் கருப்பின மக்களின் போராட்டம் உச்சநிலையை அடைந்தபோது, உலகமே தென்னாப்பிரிக்க நிறவெறிக் காட்டுமிராண்டித் தனத்தைக் கண்டு வெகுண்டெழுந்தது. உலக மக்களின் பொதுக் கருத்து - பொது நிர்பந்தம் காரணமாக, அமெரிக்கா உள்ளிட்டு உலகின் பல நாடுகள் தென்னாப்பிரிக்க வெள்ளை நிறவெறி அரசு மீது பொருளாதாரத் தடைகளை விதித்துப் புறக்கணித்தன. இந்த எதிர்ப்பைத் தாக்குப் பிடிக்க முடியாமல், அன்றைய வெள்ளை நிறவெறிக் காட்டுமிராண்டி அதிபர் போத்தா பதவி விலகியதும் 1991-ல் புதிய அதிபராக டி கிளார்க் பொறுப்பேற்றார். தென்னாப்பிரிக்கா குமுறும் எரிமலையாக இருந்த நிலையில், இனியும் நிறவெறியைப் பின்பற்றினால் அது சிறுபான்மை வெள்ளையரின் சொத்துக்கும் வாழ்வுக்கும் பேராபத்தாகி விடும் என்பதால், போராட்டத்தைத் தணிக்க, வேறுவழியின்றி சீர்திருத்த நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டார். இனவெறிச் சட்டத்தை ரத்து செய்து வெள்ளையருக்குள்ள எல்லா உரிமைகளும் கருப்பர்களுக்கும் உண்டு என்று பிரகடனப்படுத்தியதோடு, சிறையில் வாடிய மண்டேலாவையும் விடுதலை செய்தார்.

1992-லிருந்து மண்டேலாவும் அதிபர் டி கிளார்க்கும் நடத்திய சமாதானப் பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து, புதிய அரசியல் சட்டத்தை அமைக்கவும், எல்லா இனத்தவரும் சம உரிமையுடன் வாக்களிக்கும் வகையில் ஜனநாயகத் தேர்தல் நடத்துவது என்றும் முடிவாகி



படிப்பகம்

www.padippakam.com

யது. இதன்படி கடந்த ஏப்ரல் மாதம் 26-ந் தேதியிலிருந்து 29-ம் தேதி வரை நடந்த பொதுத் தேர்தலில் ஏறத்தாழ இரண்டரை கோடி பேர் தமது வாக்குரிமையைச் செலுத்தினர். தென்னாப்பிரிக்காவில் 9 மாகாண சபைக்கும், நாடாளுமன்றத்துக்கும் நடந்த இத்தேர்தலில் 27 கட்சிகள் போட்டியிட்டன. இவற்றில், மண்டேலாவின் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ், டி கிளார்க்கின் வெள்ளையர் தேசியக் கட்சி, நேடால் மாகாணத்தில் பெரும்பான்மையாக உள்ள கருப்பினத்திலேயே ஒரு பிரிவாகிய சுலு மக்களின் இன்கதா கட்சி, நவீன நாஜிகளான வெள்ளை நிறவெறியர்களின் ஆப்ரிகானர்ஸ் கட்சி, தென்னாப்பிரிக்க போலிக் கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன பெரிய கட்சிகளாகும்.

வெள்ளை நிறவெறியர்களுடன் கள்ள உறவு கொண்டுள்ள புத்தலேசி தலைமையிலான சுலு இன்கதா கட்சி, நீண்டகாலமாகவே சீர்குலைவு வேலைகளில் ஈடுபட்டு வந்துள்ளது. இதனால் ஆப்பிரிக்க தேசிய காங்கிரசுக்கும் சுலு இன்கதா கட்சிக்குமிடையே தொடரும் மோதலில் நூற்றுக்கணக்கான கருப்பின மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். தேர்தல் அறிவிப்பு வெளியானதும், புதிய கோரிக்கைகளை முன்வைத்தும், வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டும் இன்கதா கட்சி தேர்தலில் பங்கேற்க மறுத்தது. நேடால் மாகாணத்தில் அரசியல் சட்டரீதியாக சுலு இனத்தின் மன்னராட்சிக்கு - கூடுதல் சுயாட்சிக்கு ஒப்புக் கொண்ட பிறகே, இன்கதா கட்சி தேர்தலில் பங்கேற்றது. இடைப்பட்ட நாட்களில் இக்கட்சியினர் நடத்திய வன்முறை வெறியாட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் தொண்டர்களும் அப்பாவி கருப்பின மக்களும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இதேபோல, வெள்ளை நிறவெறியர்களின் நவீன நாஜிக் கட்சியான ஆப்ரிகானர்ஸ் இயக்கமும் வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டு தேர்தலைச் சீர்குலைக்க முயன்றது. தேர்தலுக்கு முன், ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் அலுவலகம் முன்பு காரில் வெடிகுண்டு வைத்து கணக்கற்றோரைக் கொன்று பயபீதியூட்டியது. புத்தலேசியின் இன்கதா கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து பயங்கரவாதத்தை ஏவிய நவீன நாஜிகள், கிழக்கு ட்ரான்ஸ்வால் மாகாணத்திலும், பிரிட்டோரியா நகரிலும் வெள்ளையருக்கு சுதந்திரமான சுயாட்சி உரிமை கேட்டு சீர்குலைவு, வன்முறையில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

இத்தனை எதிர்ப்புகள், சீர்குலைவு சதிகள், பயங்கரவாத வன்முறை வெறியாட்டங்களுக்கு மத்தியில் நடந்த தேர்தலில் மண்டேலாவின் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் 65% வாக்குகளைப் பெற்றுள்ளது. 7 மாகாணங்களில் பெரும்பான்மை வாக்குகளைக் கைப்பற்றியுள்ளது. சுமார் 22% ஓட்டுகளைப் பெற்ற டி கிளார்க்கின் தேசியக் கட்சி மேற்கு கேட் டவுன் மாகாணத்தில் மட்டுமே பெரும்பான்மை பெற்றுள்ளது. சுலு இன்கதா கட்சி நேடால் மாகாணத்தில் மட்டும் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது; நாடாளுமன்றத்துக்கு 12% வாக்குகளைப் பெற்றுள்ளது. அமெரிக்கப் பாணியிலான விகிதாச்சார அடிப்படையில் தேர்தல் நடத்தப்பட்டுள்ளதால், அதிக வாக்குகளைப் பெற்றுள்ள ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் சார்பில் அதன் தலைவர் மண்டேலா புதிய அதிபராகியுள்ளார்.

நீண்ட நெடுங்காலமாக தமது உரிமைக்கும் விடுதலைக்கும் போராடி வந்த கருப்பின மக்கள், இப்போது நிறவெறி ஆதிக்கத்திலிருந்து அதிகார பூர்வமாக விடுதலை அடைந்துள்ளார்கள். அதே சமயம் அரசியல் - பொருளாதார விடுதலையடைந்து விட்டதாக கருத முடியாது. வழங்கியுள்ள பெயரளவிலான சுயாட்சி உரிமையைப் போல - 1947-ல் இந்தியா அடைந்த போலிச் சுதந்திரத்தைப் போல - தென்னாப்பிரிக்காவிலும் ஓர் அதிகார மாற்றம்தான் நடந்துள்ளது.

உலகெங்கும் கண்டனக் குரல்கள் எழுந்து தென்னாப்பிரிக்கா மீது பொருளாதார - வர்த்தகத் தடைகள் விதிக்கப்பட்டதாலும், கிழக்கு ஐரோப்பிய, ரஷ்ய மாற்றங்களைத் தொடர்ந்து தாமும் ஜனநாயக நாடகமாட வேண்டியிருப்பதாலும், கருப்பின மக்களின் போராட்டத்தைத் தணித்து வடிகால் வெட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டதாலும்தான் வெள்ளையர்களும் ஏகாதிபத்தியங்களும் நிறவெறிக் காட்டு மிராண்டித் தனத்தைக் கைவிட முடிவு செய்தனர். மண்டேலாவுடன் நடந்த சமரசப் பேச்சு வார்த்தையில் வெள்ளையர்களின் சொத்துக்களும் நிறுவனங்களும் பறிமுதல் செய்யப்பட மாட்டாது என்ற உத்திரவாதத்துக்குப் பின்னரே தேர்தல்கள் அறிவிக்கப்பட்டன.



ஏனெனில், வெள்ளை நிறவெறியர்களால் பாசிச முறையில் கட்டியமைக்கப்பட்ட அதே அரசு எந்திரம் - அதிகார வர்க்கம், நீதித்துறை, போலீசு, ராணுவம் உள்ளிட்ட அனைத்தும் அப்படியே இன்னமும் நீடிக்கிறது. இத்தனை காலமும் கருப்பின மக்களைச் சுரண்டிக் கொழுத்த வெள்ளை நிறவெறியர்கள் அதிகாரத்திலிருந்து விரட்டியடிக்கப்படவில்லை. அவர்களது சொத்துக்களும், அன்னிய ஏகாதிபத்திய நிறுவனங்களும் நட்டஈடின்றி பறிமுதல் செய்யப்படவுமில்லை. அன்னிய ஏகாதிபத்திய தலையீடு ஏதுமற்ற சுயசார்பான தேசியப் பொருளாதாரத்தைக் கட்டியமைப்பதற்கான திட்டமும் மண்டேலா அரசிடம் இல்லை. அதிபராகப் பதவியேற்றவுடனேயே உலக வங்கியிடமும் சர்வதேச அமைப்புகளிடமும் மண்டேலா விண்ணப்பிக்கத் தொடங்கிவிட்டார். தென்னாப்பிரிக்காவில் முதலீடு செய்யுமாறு அவர் ஏகாதிபத்திய நாடுகளையும் அழைத்துள்ளார். சுருக்கமாகச் சொன்னால், பாலஸ்தீனியர்களுக்கு இஸ்ரேலிய இனவெறியர்கள் டன. கருப்பின மக்களுக்கு உரிமைகள் - நிறவெறி ஆதிக்கத்திலிருந்து விடுதலை என்ற மூடுதிரையின் பின்னே வெள்ளையர்களும் ஏகாதிபத்தியங்களும் தமது சுரண்டலையும் ஆதிக்கத்தையும் தொடருவதற்கான ஏற்பாடுதான் இது. எனவேதான் மண்டேலா அதிபரானதும் ஏகாதிபத்தியங்களும் அதன் எடுபிடி நாடுகளும் ஓடோடி வந்து வாழ்த்துத் தெரிவித்து ''பொருளாதார ஒத்துழைப்பு'', ''வர்த்தக உறவு'' என்ற பெயரில் தமது புதிய சுரண்டலைத் தொடர போட்டி போடுகின்றன.

இவற்றை நன்கறிந்தபோதிலும் மண்டேலாவும், அவரது ஆப்பிரிக்க தேசிய காங்கிரசும் தமது முதலாளித்துவத் தலைமையின் காரணமாக சமரசவாதப் பாதையிலே செல்கின்றன. அதிகார பூர்வமாக நிறவெறி ஒழிக்கப்பட்டுள்ள போதிலும் அது செயல்பூர்வமாக நடைமுறைப்படுத்தப்படுமா என்பது இன்னமும் கேள்விக் குறியாக உள்ளது. இந்தியாவில் தீண்டாமையும் சாதியப் பாகுபாடும் சட்டபூர்வமாக ஒழிக்கப்பட்டுள்ள



படிப்பகம்

www.padippakam.com

போதிலும், இன்னமும் நடைமுறையில் நீடிக்கத்தான் செய்கிறது. மேலும் தென்னாப்பிரிக்காவில் பல்வேறு பூர்வகுடி இனங்களும் அவற்றுக்கிடையே முரண்பாடுகளும் நீடிப்பதால் கருப்பின மக்களைப் பிளவுபடுத்தி மோதவிட்டு ஆதாயமடைய வெள்ளை நிறவெறியர்கள் ஒரு போதும் தயங்க மாட்டார்கள்.

குறிப்பாக, விடுதலைக்குப் பிறகு மண்டேலா, நிறவெறிக்கு எதிரான போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லவில்லை. பல்வேறு பூர்வகுடி இனங்களாக பிளவுபட்டுள்ள கருப்பின மக்களிடையே ஐக்கியத்தைக் கட்டி வளர்க்கவும் முயற்சிக்கவில்லை. மாறாக, தேர்தலுக்கான சமரசப் பேச்சு வார்த்தைகளில் அவர் மூழ்கிப் போனார். வெள்ளை நிறவெறியர்களுடன் கள்ளக் கூட்டு சேர்ந்திருந்தாலும், நேடால் மாகாணத்தில் பெரும்பான்மை பூர்வகுடி மக்கள் என்ற முறையில் சுலு இனத்தவருக்கு சுயாட்சி உரிமை அளித்து அங்கீகரித்து நிறவெறிக்கு எதிரான போரில் அவர்களை ஐக்கியப்படுத்த ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் தவறிவிட்டது.

இதேபோல், வெள்ளையர் அல்லாத கலப்பினத்தவரையும், இந்திய வம்சாவழியினரையும் தமது நியாயமான போராட்டத்திற்கு ஆதரவாகத் திரட்டவும் அது தவறிவிட்டது. இவற்றைச் சாதகமாக்கிக் கொண்டு, கருப்பர் ஆட்சிக்கு வந்தால் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பறித்து தாக்குவார்கள் என்று பீதியூட்டியும், நிறவெறியைக் கக்கியும் வெள்ளையர்கள் தேர்தலில் அவர்களது ஆதரவைப் பெற்றனர். குறிப்பாக, இந்தியர்களில் பெரும்பான்மையினர் டிகிளார்க்கின் கட்சிக்கே வாக்களித்துள்ளனர். அதுபோல, சுலு மக்கள் தமது இன்கதா கட்சிக்கே வாக்களித்ததால், மண்டேலாவின் கட்சி மூன்றில் இரு பங்கு பெரும்பான்மையைப் பெற முடியவில்லை. இதனால் தமது கொள்கைக்கேற்ப அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்தி அமைப்பதும் அக்கட்சிக்கு சிக்கலானதாகிவிட்டது. எனவே புதிய சட்டத்தை நிறைவேற்றவும், சீர்திருத்தங்களைக் கொண்டு வரவும் எதிர்த்தரப்புக்கு சலுகைகள் கொடுத்து சாந்தப்படுத்த வேண்டியதாகிவிடும். வெள்ளை நிறவெறியர்களுக்கு இதுமேலும், சாதகமானதாகிவிடும்.

இதுதவிர, பல்வேறு போராட்ட அமைப்புகளின் ஒருங்கிணைப்பாக உள்ள ஆப்பிரிக்க தேசிய காங்கிரசிலும் கோஷ்டி பூசல்களும் கருத்து வேறுபாடுகளும் அதிகரித்து வருகின்றன. துணை அதிபராக யாரை நியமிப்பது என்பதில் இது பகிரங்கமாகவே வெளிப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த உலகக் கண்ணோட்டமும் கட்டுப்பாடும் இல்லாவிட்டால் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் பல குழுக்களாகச் சிதறும் அபாயமே நிலவுகிறது.

● குமார்.

# மஃபியா ஆளுகையில் மாநகரங்கள் திணறல்

பம்பாய் மாநகரில் மட்டுமல்ல, டெல்லி, கான்பூர், பிலாய், தான்பாத், டாடாநகர், கல்கத்தா, விஜயவாடா, சென்னை, பெங்களூர் போன்ற பல நகரங்களிலும் அமைப்பு ரீதியில் திரண்ட மஃபியா கும்பல்களின் ஆதிக்கம் பெருகிவிட்டது. குறிப்பாக, சென்னையில் பின்னி ஆலையைக் கைப்பற்றி மூடிவிட்டு, அந்நிலத்தில் கட்டுமானத் தொழில் மூலம் கொள்ளையடிக்க முயலுகிறார், உடையார். தாவூத், கௌலி, அமர்நாயக்குடன் ஒப்பிடும் போது குட்டிதாதாக்களான வீரமணி, ''பாக்சர்'' வடிவேலு - 'எண்ணூர்' நாராயணன் ஆகியோர் சிறையிலிருந்து கொண்டே தமது கும்பலை இயக்குகின்றனர். பினாமிகளை வைத்து மஃபியா தொழில் புரியும் மதுசூதனன் மந்திரியாகவும் உள்ளார். இதேவேலைகள் செய்து கொல்லப்பட்ட ஏழுமலை அரசியல் ''தியாகி''யாகவும் ஆக்கப்பட்டார். ஆக, பம்பாய்க்கு சென்னை பின் தங்கிவிடவில்லை!

புகழ் பெற்ற கட்டாவ் வாயில் துணி உற்பத்தி செய்யும் 125 ஆண்டு கால பழைமை வாய்ந்த பம்பாய் ஆலையின் அதிபர் சுனீத் கட்டாவ் கடந்த மாதம், அலுவலக நேர வாகன நெரிசலில் 'சிக்னலு'க்காக காரில் காத்திருந்த போது, மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்த இரு கூலிக் கொலைக்காரர்களால் ஒரு கிரிமினல் ரௌடிக்குரிய முறையில் குரூரமாகச் சுட்டுக் கொள்ளப்பட்டார்.

அதற்கு ஒரு வாரத்துக்கு முன்பு, பலத்த போலீசுக் காவலுடன் ''தடா'' வழக்கு மன்றத்துக்குக் கொண்டு வரப்பட்ட ஒரு கிரிமினல் - மஃபியா கும்பல் தலைவன் அஸ்வின் நாயக் சிகப்பு மாருதிக் காரில் வழக்குரைஞரின் உடையில் வந்த கூலிக் கொலைகாரனின் துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்கப் பட்டு உயிர் ஊசலாடக் கிடக்கிறான்.

கடந்த ஆண்டு மார்ச் 12-இல் பம்பாயின் எட்டு முக்கிய குறியிடங்களில் நூற்றுக்கணக்கானோரைப் பலி கொண்ட தொடர் குண்டு வெடிப்புகளுக்குப் பிறகு, மேற்கண்ட இரு கூலிப் படைத் தாக்குதல்கள், பம்பாய் பெரு நகரம் கிரிமினல் - மஃபியா கும்பல்களின் கோரப் பிடிக்குள் சிக்கி வரும் பிரச்சினை. பரபரப்பை, பயபீதியை ஏற்படுத்தியிருக்கிறது.

கிரிமினல் குற்றங்களையே தொழிலாகக் கொண்ட பம்பாய் இரகசிய உலகை நிறுவிய பெருமைக்குரியவர்கள் கரீம்லாலா, யூசுப்பட்டேல், ஹாஜி மஸ்தான் மற்றும் வரதராஜ முதலியார் ஆகிய நால்வரும்தான். கடத்தல், போதை மருந்து - கள்ளச் சாராயம் - சூதாட்டம் - விபச்சார விடுதிகள் நடத்துவதும், இச்சமூக விரோதச் செயல்களுக்கு பாதுகாப்புத்தரக் கப்பம் வசூலிப்பதும், கட்டைப் பஞ்சாயத்து மூலம் கமிசன் பெருவதும் இவர்களது தொழில்களாக இருந்தன. இதற்குத் தேவையான அரசியல், போலீசு அதிகாரிகளின் தொடர்புகள், மாமூல்களைக் கொண்டு அவர்கள் தமது காரியத்தைச் சாதித்து வந்தார்கள். தொழில் பாதுகாப்புக்கென்று இவர்கள் தனித்தனி அடியாள் படையை வைத்துக் கொண்டிருந்தாலும், ஒருவர் மீது ஒருவர் ஆதிக்கம் செலுத்துவ்தற்கான கும்பல் சண்டைகள் - கொலைகளைச் செய்வது அரிதாகவே இருந்தது. அப்போதே இவர்களின் வருமானம் பல நூறு கோடிகளை எட்டி விட்டது. ஹாஜி மஸ்தானும், வரதராஜ முதலியாரும் பரோபகாரிகளாகவும், சமூக சேவைகளிலும் ஈடுபட்டு குடிசை வாழ் மக்களிடையே கணிசமான ஆதரவும் பெற்றிருந்தனர்.

அவசர நிலை ஆட்சியின் போது ஹாஜி மஸ்தானும், யூசுப் பட்டேலும் சிறையிலடைக்கப்பட்டனர். அவர்கள் விடுதலையான பின் ''சட்ட பூர்வ'' வாழ்க்கைக்கும், கட்டுமானத் தொழில்களுக்கும் மாறிக் கொண்டனர். சட்ட பூர்வத் தொழில் வியாபாரம் நடத்தவே கப்பம் வசூலிப்பது, ஒப்பந்தக் கூலிக் கொலைகள் புரிவது என்று கரீம்லாலாவும் வரதராஜ முதலியாரும் தமது தொழில்களை விரிவுபடுத்தினர். 1980-களின் ஆரம்பத்தில் வரதராஜ முதலியார் பம்பாயில் போலீசால் வேட்டையாடப்பட்டு சென்னைக்கு விரட்டப்பட்டு, மதிப்புக்குரிய வாழ்க்கைக்குத் திரும்பினார். கரீம்லாலாவுக்கும் வயதாகி ''ஓய்வு பெற'' எண்ணிய போதே, முந்தைய நான்கு ''மஃபியா தாதாக்கள்'' வாரிசு இடத்தைப் பிடிப்பதற்காக குழுச் சண்டைகள் வெடித்தன. அவர்கள் இரகசிய உலகப்பேர்வழிகள் தாம் என்றாலும் அக்குழுச் சண்டைகள் பகிரங்கமாக, நெரிசல் மிகு சாலைகளிலேயும் நடந்தன.

வாரிசு உரிமைக்கு முயன்ற கரீம்லாலாவின் உறவினர்களே ஒழித்துக் கட்டப்பட்டனர்; குழுச் சண்டைகளை நிறுத்தி சமாதானம் செய்துவிக்க ஹாஜி மஸ்தானும் கரீம்லாலும் மேற்கொண்ட முயற்சிகள் தோற்றுப் போயின. தாவூத் இப்ராகீம், ஷபீர் இப்ராகீம் சகோதரர்கள் ஒரு



படிப்பகம்

www.padippakam.com

புறமும் ஆலம் ஜீப், அமீர் ஜடா குடும்பத்தினர் மறுபுறமும் நின்று, ஆயிரம் கோடி ரூபாய் வருமானம் தரக்கூடிய பம்பாய் பெரு நகரின் இரகசிய உலக ஆட்சி - அதிகாரத்துக்காக போரிட்டனர். ''சாலைச் சந்திப்புகளில் துப்பாக்கிச் சண்டைகள், வழக்கு மன்றங்களிலேயே படுகொலைகள், மக்கள் நெரிசல் நிறைந்த தெருக்களில் குண்டுவீச்சுகள் நடந்தன. இரத்தம் காய்ந்து, புழுதி அடங்கி, புகை மூட்டம் தெளிவான போது, குறிப்பிடத்தக்க மஃபியா - தாதாக்கள் அனைவரும் ஏறக்குறைய மாண்டு போனார்கள். தாவூத் மட்டுமே உயிர் பிழைத்திருந்தான்'' என்கிறது ''சண்டே'' ஏடு.

இந்தக் குழுச் சண்டைகளுக்குப் பிறகு, போலீசு மற்றும் போட்டிக் கும்பலிடம் இருந்து தன்னுயிரைப் பாதுகாத்துக் கொள்வதற்காக தாவூத் இப்ராகீம் தனது தலைமையகத்தை துபாய்க்கு மாற்றிக் கொண்டான். ஆனால் பம்பாய் இரகசிய உலகின் முடிசூடா மன்னனாக தாவூத் உருவெடுத்தான். துபாயில் இருந்தபடியே அதை இயக்கினான். பம்பாயின் ஒவ்வொரு பிராந்தியத்துக்கும் தனது ''நவாப்''பை நியமித்தான். அவர்கள் தவறாது தாவூத்துக்குக் கப்பம் கட்டி வந்தனர். பெருநகரிலேயே தலைசிறந்த, குறி தவறாது சுடும் கூலிப் படை துப்பாக்கியாளர்களை தாவூத் வைத்திருந்தான்.

1988-இல், தாவூத் மஃபியா கும்பலின் முக்கிய புள்ளியான ராமா நாயக், பிரிந்து போட்டிக்குழுவைத் தொடங்கினான். தாவூத்தின் குறியில் இருந்து அவன் தப்பி வந்த போதும், போலீசு துப்பாக்கி அவனைப் பலி கொண்டது. தாவூத்துக்காக போலீசு செய்த கொலைதான் இதுவென்றும் கூறப்படுகிறது. ஆனால் ராமா நாயக்குக்குப் பிறகு அவன் கும்பலின் தலைமையை கைப்பற்றிய அருண் கௌலி, பம்பாய் இரகசிய உலகை நிம்மதியாக ''ஆள'' முடியாதவாறு தாவூத்துக்கு சவலாக வளர்ந்தான். 1988 முதல் 92 வரை நான்கு ஆண்டுகள், (சராசரி) நாள் தோறும் ஒரு மஃபியா குண்டனைப் பலி வாங்கும் கும்பல் சண்டைகள் பெரு நகரில் நடந்தன. அருண் கௌலி தனது சகோதரன் கிஷோர் உட்பட பல நம்பகமான விசுவாசிகளை இழந்தான். அதே சமயம் தாவூதின் முக்கிய ''வேட்டை நாய்''களையும் பலி வாங்கத் தவறவில்லை. சத்தீஷ் ராஜி, அனில் பம்புல்கர், மனோஜ் குல்கர்னி, ராஜ்ஜி ஆகியோர் கௌலி கும்பின் பதிலடிக்கு பலியான தாவூத்தின் முக்கியத் ''தளபதிகள்''

1990 இறுதியில் கருப்பு - சிவப்பு சீருடை அணிந்த 30 பேர் கொண்ட தாவூதின் ''படை'' அருண் கௌலியின் ''குகை'யை முற்றுகை இட்டு ஏழு பேரை ஒரே சமயத்தில் சுட்டு வீழ்த்தியது. இருந்தாலும் தான்யா, கோலி போன்ற ஒரிரு விசுவாசிகளுடன் தப்பிய கௌலி ஒரு நரியைப் போல கணிசமான காலம் பதுங்கிக் கொண்டான். இதற்கிடையே அருண் கௌலியின் வலதுகரமாக விளங்கிய அமர் நாயக், தனது தம்பி அஸ்வின், அவனது மாமனார் ஜெதா ஆகியோருடன் சேர்ந்து தனியான, போட்டி மஃபியா கும்பலைக் கட்டிக் கொண்டான். இந்த கும்பலை முளையிலேயே கிள்ளி விட தாவூதும், கௌலியும் தனித்தனியே முயன்றனர். ஆனால் மராத்தியன் என்கிற பிடிப்பும், ''நம்ம பசங்க'' என்கிற சிவசேனா துணையும் அமர்நாயக் கும்பலின் வளர்ச்சிக்கு உதவின.

எவ்வாறாயினும் 1985-க்குப் பிறகு பம்பாய் பெரு நகரில் தாவூதின் அதிகாரமே கொடி கட்டிப் பறந்தது. அவன் துப்பாக்கியால் பேசினான். யாரையும் விலை கொடுத்து வாங்க முடியும், யாரையும் எங்கும் கொலை செய்துவிட முடியும் என்று நிரூபித்துக் காட்டினான். அரசியல், சினிமா, கட்டுமானத் தொழில், ஓட்டல்கள், பணம் பட்டுவாடா செய்யும் ''ஹாவலா'' தொழில், குதிரைப் பந்தயம் என்று நகர வாழ்வின் சகல துறைகளுக்கும் தனது நடவடிக்கைகளை விரிவுபடுத்தினான். பம்பாய் பெரு நகரில் சொத்துக்கள் விற்பது, வாங்குவதற்குக் கூட தாவூத் கும்பலிடம் அனுமதி பெற்று, திட்டம் தீட்ட வேண்டும் என்றானது; சினிமா கதாநாயகன் - நாயகியாக, இயக்குநராக யாரைப் போடுவது என்பது கூட தாவூத் தீர்மனித்தான். அவனது பினாமிகளே பெரும்பாலும் இந்தி சினிமா நிதியாளர்களாக இருந்தனர்.

அடுத்தடுத்து வந்த மராட்டிய முதல்வர்களுடன் நெருக்கமான உறவு கொண்டிருந்தான். தற்போது ''தடா''வில் இருக்கும் சுரேஷ் ''பப்பு'' கலானி, ஹேமேந்திரா தாக்கூர் ஆகிய இரு காங்கிரசு எம்.எல்.ஏ.க்களும் தாவூதின் பினாமிகள். அரசியல்வாதிகள் பலரும் தாவூதின் சம்பளப் பட்டியலில் உண்டு. துபாயில் தாவூத் அடிக்கடி நடத்தும் ஆடம்பர விருந்து விழாக்களில் கலந்து கொள்வதையும், தாவூதுடன் படம் பிடித்துக் கொள்வதையும் பெருமைக்குரியதாக இந்தி சினிமாக்காரர்கள் உட்பட பம்பாய் பிரபலர்கள் பலரும் கருதினர். அவன் தனது சட்ட விரோதமான தொழில்களை துபாயில் இருந்தபடியே இயக்கியதோடு, சட்டபூர்வமான பல தொழில்களை துபாய், கராச்சி, லண்டன், போனஸ்அயர்ஸ், ஜெனிவா ஆகிய நகரங்களுக்கு விரிவுபடுத்தினான். இப்படி ஒரு புறம் மதிப்பும் மரியாதைக்கும் உரிய பெரிய மனிதனாக தாவூத் மாறியதும், மறுபுறம் பம்பாய் போலீசு பதிவேட்டில் கொலை, கடத்தல், பணம் பறிப்பு உட்பட பல கிரிமினல் குற்றங்களுக்காக தேடப்படும் (Wanted) சமூக விரோதியாகவே இருந்தான்.

கடந்த ஆண்டு மார்ச்-12 பம்பாய் குண்டு வெடிப்புகளுக்கு காரணமானவர்கள் என்று கைதாகி ''தடா''வில் தள்ளப்பட்டுள்ளவர்களும், தேடப்படுபவர்களும், குறிப்பாக ''டைகர்'' மமோனும் அவனது குடும்பத்தாரும் தாவூத் கும்பலைச் சேர்ந்தவர்கள் என்று போலீசு கூறுகிறது. தேடப்படுபவர்கள் பற்றித் தகவல் தருபவர்களுக்கு சுமார் ஒன்றரைக் கோடி



ரூபாய் பரிசு தருவதாக அரசு அறிவித்துள்ளது. பாக்.கிலும் அரபு நாடுகளிலும் தஞ்சம் புகுந்துள்ள அவர்களைக் கொண்டு வர முடியவில்லை. ஆனால் சிவசேனா - பாரதீய ஜனதா நிர்பந்தம் காரணமாகவும், சரத்பவர் தலைமையிலான மராத்திய ஆளும் காங்கிரசின் சுயநலன்கள் காரணமாகவும் தாவூத் கும்பலின் உள்ளூர் அடியாட்கள் மீது கடும் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. தாவூத் கும்பலுக்கு உதவியவர்கள் என்கிற பெயரில் நூற்றுக்கும் மேற்பட்ட ''அப்பாவிகள்'' சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். ஆனால்தாவூத் கும்பலைச் சேர்ந்தவர்கள் என்று நம்பப்படுபவர்கள் அனைவரும் போலீசால் இரகசியமாகவே தீர்த்துக் கட்டப்படுகின்றனர். தாவூத் கும்பலுடன் தனக்கிருந்த தொடர்புகள் தெரியக்



படிப்பகம்

www.padippakam.com

கூடாது என்பதற்காக முதல்வர் சரத்பவர் இப்படிச் செய்யும்படி போலீசுக்கு உத்தரவிட்டிருப்பதாக நம்பப்படுகிறது. அதனால்தான், பம்பாய் குண்டு வெடிப்புகள் சர்வதேச சதி, பாக். கைவரிசை என்று கூறினாலும் சி.பி.ஐ. விசாரணைக்கு விட சரத்பவர் மறுக்கிறார் என்றும் கூறப்படுகிறது. சரத்பவருக்கும் பம்பாய் இரகசிய உலகுக்கும் உள்ள நெருங்கிய தொடர்புகள் பற்றியும் சாட்சியங்கள் - ஆதாரங்களை ஒப்புதல் மூலமாக தற்போது ''தடா''வில் உள்ள காங். எம்.எல்.ஏ. தாக்கூர் அளித்துள்ளார்; அதை நரசிம்மராவ் தனது துருப்புச் சீட்டாகப் பயன்படுத்துகிறார் என்றும் கூட கூறப்படுகிறது. காங்கிரசோ, சரத்பவரோ இதை மறுக்கவில்லை.

எப்படியோ, தாவூத் இப்ராகீம் கும்பல் மீதான போலீசு நெருக்குதல் தற்போதைக்குக் கடுமையாகி உள்ளது. அவனது கும்பலைச் சேர்ந்தவர்கள் போலீசு தாக்குதலுக்கு பலியாகின்றனர்; அல்லது உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பதுங்குகின்றனர். இதைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு இதுவரை பதுங்கி வாழ்ந்த காங்கிரசு ஆதரவு பெற்ற அருண் கௌலி கும்பலும், சிவசேனாவின் வளர்ப்பு பிராணி அமர் நாயக் கும்பலும் தலை தூக்குகின்றன. அதே சமயம் தாவூத் தற்காலிகமாக காலி செய்த இரகசிய உலகின் அதிகாரத்தையுப் பிடிப்பதற்கு இந்த இரு கும்பல்களும் பம்பாய் பெரு நகரில் பகிரங்கச் சண்டைகள் நடத்துகின்றன. இவற்றின் விளைவுதான் சாலைச் சந்திப்பில் ஆலை அதிபர் கட்டாவ் சுட்டுக் கொல்லப்பட்டதும், ''தடா'' கோர்டிலேயே அஸ்வின் நாயக் சுட்டு வீழ்த்தப்பட்டதும் ஆகும்.

இத்தனைக்கும் அருண் கௌலி - பூனா எரவாடா சிறையில் ''அரசு விருந்தின''ராக தங்கியுள்ளான்; பிணையில் போக ''கோர்ட்'' அனுமதித்தும், தனது உயிருக்குப் பயந்து கொண்டு, பாதுகாப்பான இடம் சிறையே என்று தங்கி விட்டான். அமர்நாய்க் பம்பாய் பெரு நகருக்குள் நுழையவே கூடாதென்று தடை விதிக்கப்பட்டுள்ளான். எனவே தலைமறைவாக வாழ்கிறான். இருவரும் வெளியில் இருந்து கொண்டே பம்பாய் பெரு நகர ஆதிக்கத்துக்கான பதில் போர் நடத்துகின்றனர்.

சரி! ஆலை அதிபர் கட்டாவ் கொலைக்கும், இந்த மஃபியா கும்பல் யுத்தத்துக்கும் என்ன சம்பந்தம் என்ற கேள்வி எழக் கூடும். மஃபியா கும்பல் தனது ஆதிக்க எல்லையை விரிவு படுத்துவதுதான் காரணம். ஆலை அதிபர் கட்டாவை உருட்டி மிரட்டி பணம் பறிப்பதற்கான முயற்சியின் விளைவு அல்ல இந்தக் கொலை. கட்டாவ் தனது சுயநலனுக்காக மஃபியா கும்பலுடன் கூட்டு வைத்துக் கொண்டதுதான் காரணம்.



'தடா'வின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள மஃபியா கும்பல் தலைவன் அருண் கௌலி.

பம்பாய் பெருநகரில் சமீப ஆண்டுகளில் கொள்ளை லாபம் தரக் கூடியது கட்டுமானத் தொழில் (Real Estate) ஆகும். பூங்கா, விளையாட்டு மைதானம் போன்ற பொது இடங்கள், புறம்போக்கு நிலங்கள், குடிசைப் பகுதிகள், சிறு உடமையாளர்களுக்குச் சொந்தமான குடியிருப்புகள் ஆகிய அனைத்தும் அதிகார முறைகேடு, இரகசிய உலக பலாத்காரத்தினால் கைப்பற்றப்படுகின்றன. சில ஆண்டுகளுக்கு முன்பு நகரமைப்பு விதிகளைத் திருத்தி, கட்டுமானத் தொழில் முதலைகளுக்கு வசதி செய்து கொடுத்த வகையில் மட்டும் 1000 கோடி ரூபாய் லஞ்சம் பெற்றதாக சரத்பவர் மீது ஒரு புகார் உண்டு. அது விசாரிக்கப்படாமல் போனது.

''நகரின் முக்கியப் பகுதியில் உள்ள சொத்து தேவை; விலை எவ்வளவானாலும் தரத் தயார்'' என்று பம்பாய் பத்திரிக்கை விளம்பரங்கள் வருகின்றன. பம்பாய் பெரு நகரில் ஒரு சதுர அடி ரூ. 4000 முதல் 7000 வரை விலை போகிறது. மேலே குறிப்பிட்ட வகையிலான இடங்கள் கிடைப்பது அரிதாகி விட்ட நிலையில், இப்போது கட்டுமானத் தொழில் முதலைகளின் குறி வேறு செழிப்பான இரையின் மீது விழுந்துள்ளது. மத்திய, தென் மத்திய பம்பாய் நகரில் மட்டும் 58 நூற்பு - துணி ஆலைகள் உள்ளன. இவற்றில் சுமார் 50 ஆலைகள் நலிவடைந்தவை என்று அறிவிக்கப்பட்டுள்ளன; அல்லது மீட்கவே முடியாது என்று மூடப்பட்டுள்ளன. இந்த ஆலைகளில் அரசுடமையாக்கப்பட்ட தேசிய துணிக் கழகத்துக்குச் சொந்தமானவை 23. இப்படி நலிவடைந்த அல்லது மூடப்பட்ட ஆலைகளைக் காலி செய்தால் நகரின் முக்கியப் பகுதியில் 500 ஏக்கர் நிலம் கிடைக்கும். இதன் இப்போதைய மதிப்பு ரூ. 15,000 கோடி ஆகும். இவ்வளவு பெரும் கொள்ளை திடீர் என்று கிடைக்கிறது என்றால் சும்மா இருப்பார்களா - ஆலை அதிபர்களும், கட்டமானத் தொழில் முதலைகளும். இதில் கணிசமான தொகை தம் பங்காகக் கிடைக்கும் என்று அரசியல்வாதிகளும் - இரகசிய உலக மஃபியா தாதாக்களும் கூட களத்தில் இறங்கிவிட மாட்டார்களா?

பத்தாண்டுகளுக்கு முன்பு நடந்த மாபெரும் பம்பாய் மில் தொழிலாளர் போராட்டத்தை சாக்கு வைத்து, இழுத்தடித்து இரண்டரை லட்சம் தொழிலாளர்களின் ஒன்றரை லட்சம் பேரை வேலையைப் பறித்துக் கொண்டு விரட்டி விட்டார்கள், ஆலை அதிபர்கள். நலிவடைந்த ஆலைகளை நவீனப்படுத்துவதற்கான கடனாகவும், மானியமாகவும் பல கோடி ரூபாய்களை வாங்கி வேறு தொழில்களில் முதலீடு செய்து ஏப்பம் விட்டுவிட்டார்கள். இப்போது ஆலைகளை இடமாற்றம் செய்து, நகருக்கு வெளியே அமைப்பது, தொழிலாளருக்கு ஈட்டுத் தொகை வழங்குவது என்கிற திட்டத்தை முன்வைத்து நகர நிலத்தை விற்று சுருட்டிக் கொள்ள முனைகின்றனர். இதற்கு அரசு நிறுவன அனுமதியும், தொழிற்சங்கத்தின் சம்மதமும் பெற வேண்டும். அதிகாரத்தில் உள்ள அரசியல் தலைவர்களுடன் உறவு - லஞ்சம் மூலம் அரசு அனுமதி பெற்றுவிட முடியும்; தொழிலாளர்களை உருட்டி மிரட்டி பலாத்காரமாகப் பணியவைப்பதற்காக இரகசிய உலக மஃபியா தலைவர்களுடன் ஒப்பந்தம் வைத்துக் கொள்ள வேண்டும். இந்த நோக்கத்தோடு இட விற்பனையில் 5 சதவீத கமிசன் (ரூ 10 கோடி) தருவதாக அருண் கௌலி கும்பலோடு ஒரு ஒப்பந்தம் போட்டுக் கொண்

1988-க்குப் பிறகு பம்பாய் பெருநகரில் தாவூதின் அதிகாரமே கொடி கட்டிப் பறந்தது. அவன் துப்பாக்கியால் பேசினான். யாரையும் விலை கொடுத்து வாங்க முடியும். யாரையும் எங்கும் கொலை செய்துவிட முடியும் என்று நிரூபித்துக் காட்டினான்.



படிப்பகம்

www.padippakam.com

டார் கட்டாவ் ஆலை அதிபர் சுனித் கட்டாவ்.

பம்பாய் நகரின் ஒரே அங்கீகரிக்கப்பட்ட தொழிற் சங்கம் தேசிய மில் தொழிலாளர் சங்கமாகும். இது ஆளும் காங்கிரசின் நிரந்தர கருங்காலிச் சங்கமான ஐ.என்.டி.யு.சி. யுடன் இணைக்கப்பட்டது. இருந்தபோதும் அதன் தலைவர் அரிபாபு நாயக் ஆலையை மாற்றம் செய்வதை ஏற்கவில்லை; காரணம் அதற்குத் தொழிலாளரிடையே கடும் எதிர்ப்பு இருக்கிறது. அரிபாபு நாயக் வெளிநாடு சென்றிருந்த சமயத்தில் தேர்தல் நடத்தி, இதுவரை சங்கத்தின் பொதுச் செயலாளராக இருந்த சங்கர் ராவ் ஜாதவ் என்கிற கருங்காலியைத் தலைவராக்கிவிட்டனர், கட்டாவ் - அருண் கௌலி ஆகியோர். சங்கத்தின் புதிய செயற்குழு உறுப்பினர்களாக உள்ள விஜய் சுகிர், சச்சின் சுகிர் ஆகிய இருவரும் அருண் கௌலியின் ஒன்றுவிட்ட சகோதரர்கள். இந்தக் கும்பலின் கைப்பாவையாக உள்ளார் ஜாதவ். சரத்பவரின் உறவினரும் மந்திரியுமான அஜித் பவர், சரத்பவரின் வலதுகரமான இன்னொரு மந்திரி கோவிந்தராவ்அதிக், நெருக்கமான சட்டமேலவை உறுப்பினர் விஷ்ணு அண்ணா பட்டீல் ஆகியோரும் சங்க செயற்குழு உறுப்பினர்களுக்கான தனது பெயர் பட்டியலில் உண்டென இக்கும்பல் உரிமை பாராட்டியது. ஆளும் கட்சியுடன் இக்கும்பலுக்குள்ள உறவையே இது காட்டியது. தலைமையைக் கைப்பற்றியதும் இந்தக் கிரிமினல் மஃபியா கும்பல் மிரட்டியே ஆலை இடமாற்றத்துக்கான ஒப்புதலைத் தனித்தனித் தொழிலாளர்களிடம் எழுதி வாங்கிவிட்டது.

பம்பாய் இரகசிய உலகின் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக, அருண் கௌலி கும்பலுடன் வெறிநாய்ச் சண்டைகளை நடத்திக் கொண்டிருந்த அமர் நாயக் கும்பல் இதெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கவில்லை. கட்டாவ் ஆலை இடமாற்றம் செய்யப்பட்டு, நிலம் விற்கப்பட்டால், அது அருண்கௌலியின் அதிகாரம் நிலை நாட்டப்பட்டதாகிவிடும் என்கிற ஆத்திரத்தில் பொங்கியது. ஏற்கனவே அமர்நாயக்கின் தம்பி அஸ்வின் நாயக் "தடா கோர்ட்"டில் சுட்டு வீழ்த்தப்பட்டதற்குப் பலி வாங்கத் துடித்தது. எனவே கட்டாவ் ஆலை விவகாரத்தில் அருண்கௌலியின் கைப்பாவையாகச் செயல்படும் சங்கத் தலைவர் ஜாதவை சாலை சந்திப்பில் நின்ற காருக்குள் வைத்து சுட்டுக் கொல்ல முயன்றது. அவன் மயிரிழையில் உயிர் பிழைத்தான். அதே முறையில் அடுத்த மாதமே ஆலை அதிபர் கட்டாவை சுட்டுக் கொன்று அருண் கௌலி கும்பலின் திட்டத்தைக் குலைத்துவிட்டது, அமர் நாயக் கும்பல். இப்போது ஆலை இடமாற்றம், நில விற்பனைக்கு வெளியில் இருந்து கடும் எதிர்ப்பு கிளம்பி, சரத்பவரே அம்முடிவை தற்காலிகமாவது கிடப்பில் போட வேண்டியதாகியது.



குரூரமாக சுட்டுக் கொல்லப்பட்ட தாவூத் இப்ராகிமின் கூட்டாளிகள்: கிரிமினல் உலகம்

இருந்தாலும் கட்டாவ் ஆலையில் நிலைமை மாறவில்லை. "நிர்வாகத்தின் பார்வைக்குத் தெரிந்தே ஆலை குண்டர்களால் நடத்தப்படுகிறது. சுனீத் கட்டாவின் இறுதிச் சடங்கில் நிர்வாகி பேசவில்லை; சச்சின் அகிர்தான் பேசினான். சுனீத் கட்டாவின் கனவை நிறைவேற்றுவோம்; ஆலையை போரிவிலிக்கு மாற்றுவோம் என்று சொன்னான். இது ஒரு மிரட்டலைத் தவிர வேறில்லை. 500 தொழிலாளர்கள் கௌலிக்கு விசுவாசமாக உள்ளனர். மில்லில் உள்ள ஒவ்வொருவரும் பயந்து கிடக்கின்றனர். குண்டர்கள் எங்களைத் தொந்திரவு செய்கிறார்கள். ஆனால் நாங்கள் அதற்கெதிராகக் குரல் எழுப்பவும் முடியாது; ஏனென்றால் எங்களைச் சார்ந்து எங்கள் குடும்பமே உள்ளது" என்று தமது கையறு நிலையைச் சொல்லுகிறார், ஒரு தொழிலாளி.

**புதுடில்லி நமது நாட்டின் அரசியல் தலைநகர்தான், ஆனால் ஆட்டுவிக்கும் நிதி-தொழில் தலைநகரமாக விளங்குவது பம்பாய்தான் என்று பெயர் பெற்றுள்ளது; இப்போது பம்பாய்க்கு இன்னொரு பெயரும் வந்துவிட்டது; நாட்டின் கிரிமினல் தலைநகரம்!**

இப்போது பம்பாய் மற்றும் பிற பெருநகரங்களில் மிக வேகமாக உருவாகி வருவது, அரசியல்வாதிகள் - தொழிலதிபர்கள் - போலீசு அதிகாரிகள் - கிரிமினல் மஃபியா தாதாக்களின் கூட்டணிதான். அரசியல் மயமாவது, கிரிமினல் மயமாவது, தொழில் மயமாவது ஆகியவற்றின் மூலம் இவர்களது கூட்டணி இறுகி வருகிறது. இந்தக் கூட்டணியின் கிரிமினல் நடவடிக்கைகள் எல்லை மீறும் போதுதான் வெளியே தெரிய வருகிறது. அரசியல்வாதிகள், போலீசு அதிகாரிகள் லஞ்ச ஊழல் - அதிகார முறைகேடுகளாலும், தொழிலதிபர்கள் நிதி மோசடி - வெள்ளுடை குற்றங்களாலும் கொள்ளையடிக்கிறார்கள். மஃபியா தாதாக்கள் வன்முறை கிரிமினல் நடவடிக்கைகளால் கொள்ளையடிக்கிறார்கள். எப்படியாயினும் இவர்களுடைய ஐந்து நட்சத்திர ஆடம்பரக் களிவெறியாட்டங்கள், பிறந்த நாள் விருந்து - விழா கேளிக்கைகள், திருமணக் கொண்டாட்டங்கள், "பந்தா"வான வாழ்க்கை முறைகள் அடுத்து வரும் இளைய தலைமுறைக்கும் கூட கவர்ச்சிகரமானதாக விளங்குகின்றன.

இந்த ஆண்டு பள்ளி இறுதித் தேர்வுகள் முடிந்த நிலையில், பம்பாய் புறநகர் பகுதியான கோர்கோனில் உள்ள உயர்நிலைப் பள்ளி மாணவரிடையே அவர்களது எதிர்காலத் திட்டம் குறித்து ஒரு கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது. நகரில் செல்வாக்குப் பெற்று வளரும் கிரிமினல் - மாஃபியா கும்பல்களில் சேருவதுதான் தமது எதிர்கால விருப்பம் என்று 70 சதவீதத்துக்கும் மேலான மாணவர்கள் கருத்துக் கூறியுள்ளனர். "நிறையக் கொண்டாட்டமும், நிறையப் பணமும் கிடைக்கும்" என்று ஒரு ஒன்பதாம் வகுப்பு மாணவன் காரணம் கூறுகிறான்.

புதுடில்லி நமது நாட்டின் அரசியல் தலைநகர்தான். ஆனால் ஆட்டுவிக்கும் நிதி - தொழில் தலைநகரமாக விளங்குவது பம்பாய்தான் என்று பெயர் பெற்றுள்ளது. இப்போது பம்பாய்க்கு இன்னொரு பெயரும் வந்துவிட்டது; நாட்டின் கிரிமினல் தலைநகரம்! பொருளாதாரத் தாராளமயமாக்கும் கொள்கை விரைவில் பம்பாய் பெருநகரை சிங்கப்பூர், ஹாங்காங் மட்டுமல்ல, டோக்கியோவுக்குப் போட்டியாக கிழக்கின் செல்வச் செழிப்பு மிக்க நகரமாக்கிவிடும் என்று ஆட்சியாளர்கள் கனவு காண்கின்றனர். அதன் இன்னொரு அம்சமாக அந்நகரங்களில் ஆதிக்கம் வகிக்கும் கிரிமினல் மஃபியாக்களின் இரகசிய உலகம் பம்பாயில் இப்போதே உருவாகிவிட்டது.

● ஆர்.கே.



படிப்பகம்

www.padippakam.com

# பெரியாரை வீரமணியிடமிருந்து விடுதலை செய்வோம் வாரீர்!

சந்தப்பவாதமாகப் புரட்டிப் புரட்டிப் பேசுவதுதான் பகுத்தறிவு வாதம் என்று தி.க.வின் 'விடுதலை' வீரமணி மற்றும் அவரது கொத்தடிமை எழுத்தாளர் அசுரனின் அகராதி போலிருக்கிறது. தர்க்கத்துக்கு வெறும் எதிர் தர்க்கவாதம் வைத்து இறுதியில் குதர்க்கமாக முடிப்பது தான் அவர்களது ஆய்வு முறையாக இருந்து வருகிறது.

''பிறவிக்குணம்'' என்கிற கோட்பாடு அடிப்படையிலேயே தவறானது என்பதைப் பின்வருமாறு நாம் எழுதியிருந்தோம்.

''பிறவிக்குணம் என்று எதுவும் கிடையாது. ஒருவரது குணநலன்கள் அவரது சமூக வாழ்வால் தான் உருவாகிறது; தீர்மானிக்கப்படுகிறது. பிறவியினால் அல்ல. பிறப்பு என்பது ஒரு விபத்தைப் போன்றது, தற்செயலாக நிகழ்வது அதை வைத்துக் கொண்டு அவரது குணநலன்களையும் சமூக, அரசியல் தகுதியையும் தீர்மானிக்கக் கூடாது. இதுதான் பகுத்தறிவு அரசியல், மார்க்சிய - லெனினியக் கண்ணோட்டம். குறிப்பிட்ட வர்ண, சாதி பிறப்புதான் மனிதர்களது குணநலன்களையும் சமூக - அரசியல் தகுதியையும் தீர்மானிப்பதற்கு அடிப்படையாக வைக்க வேண்டும் என்பது உண்மையிலேயே பார்ப்பன சனாதன சித்தாந்தம் ஆகும்'' ('93 ஆக, புதிய ஜனநாயகம்')

நமது இந்த மார்க்சிய - லெனினியப் பகுத்தறிவு வாதத்தை மறுக்கப் புறப்பட்ட வீரமணியும் அவரது கொத்தடிமை எழுத்தாளர் அசுரனும் நாம் அம்பலப்படுத்திய அதே பார்ப்பன சனாதன சித்தாந்தத்தில் தஞ்சம் புகுந்துகொண்டனர். அந்த நிலையிலிருந்து நமக்கு எதிரான அவதூறு வாதங்களையும் வைக்கின்றனர். மேற்கண்ட பகுதியை புதிய ஜனநாயகத்தில் இருந்து மேற்கோள் காட்டிவிட்டு பின்வருமாறு எழுதுகிறார் அசுரன், அதுவும் கொட்டை எழுத்துக்களில்:-

**''இந்து சமுதாயத்தில் ஒருவரது சமூக அந்தஸ்தை அவரது சாதியே தீர்மானிக்கிறது. சாதியோ பிறப்பால் நிர்ணயிக்கப்படுகிறது. எனவே, ஒருவரது சமூக அந்தஸ்தை அவரின் பிறப்பே தீர்மானிக்கிறது. இந்தத் தொடர்பைத் துண்டித்து 'பிறப்பு என்பது ஒரு விபத்தைப் போன்று தற்செயலாக நடைபெறுகிறது. இதை வைத்துக் கொண்டு ஒருவரது சமூக, அரசியலை தீர்மானிக்கக் கூடாது' என்று திரிப்பதுதான் பகுத்தறிவு - மார்க்சிய கண்ணோட்டமா?''** என்று கேட்கிறார், அசுரன்.

உண்மையில் இங்கே திரித்துச் சொல்வது, அசுரன்தான்? சமூக அந்தஸ்து - சாதி - பிறப்பு ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பைத் துண்டித்து ''பிறப்பு என்பது ஒரு விபத்தைப் போன்று தற்செயலாக நடைபெறுகிறது'' என்று நாம் எழுதியதாக புளுகுகிறார், அசுரன். ஆனால் இப்படி புளுகி எழுதியுள்ளதற்கு முன்புதான் அவரே புதிய ஜனநாயகத்தில் இருந்து மேற்கோள் காட்டியிருக்கும் பகுதி பின்வருமாறு முடிகிறது. ''குறிப்பிட்ட வர்ண சாதிப்பிறப்புதான் மனிதர்களது குணநலன்களையும் சமூக - அரசியல் தகுதியையும் தீர்மானிப்பதற்கு அடிப்படையாக வைக்க வேண்டும் என்பது உண்மையிலேயே பார்ப்பன சனாதன சித்தாந்தம் ஆகும்'' என்று நாம் எழுதியிருக்கிறோம். இப்படி ஒரு மேற்கோளையும் காட்டிவிட்டு, நாம் தான் சமூக அந்தஸ்து - சாதிக்கும் பிறப்புக்கும் இடையிலான தொடர்பைத் துண்டித்து விட்டு ஏதோ திரித்துக் கூறுவதாக புளுகுவதை அசுரனின் துணிவு என்பதா, இல்லை விடுதலை வாசகர்கள் மீது அவருக்குள்ள குருட்டு நம்பிக்கை என்பதா?

சமூக, அந்தஸ்து - சாதிக்கும் பிறப்புக்கும் இடையே இயற்கையான தொடர்பு எதுவும் கிடையாது. பார்ப்பன சனாதனிகள் தமது சொந்த ஆதாயம் கருதி சமூக அந்தஸ்து, சாதி பிரிவினைக்கு பிறப்பே அடிப்படைக் காரணம் என்பது பொய்யாக, செயற்கையாக இட்டுக் கட்டியதாகும். ''முற்பிறவியின் கருமங்கள் காரணமாக ஒவ்வொருவனும் ஒரு சாதியில் - வர்ணத்தில் பிறக்கிறான். அதனால் அவன் அவனுக்குரிய பிறவிக் குணங்களையும் சாதித் தகுதியையும் பெறுகிறான். அதை மாற்ற முடியாது; அதை மீறுவது கடவுள் குற்றம்'' என்கிறது பார்ப்பன சனாதன சித்தாந்தம். இந்தப் பார்ப்பன பித்தாலட்டத்தை எதிர்ப்பதும் மீறுவதும், ஒழிப்பதும்தான் சரியான, அவசியமான பகுத்தறிவுக் கண்ணோட்டம்.

இந்த அடிப்படையில் ''சமூகத்தகுதி - சாதிக்கும் பிறப்புக்கும் தொடர்பு கிடையாது; பிறப்பு என்பது ஒரு விபத்தைப் போன்றது; தற்செயலாக நிகழ்வது அதை வைத்துக் கொண்டு அவரது சமூக, அரசியல் தகுதியைத் தீர்மானிக்கக் கூடாது'' என்கிற கருத்தைப் பெரியாரே கூறியிருக்கிறார்; வீரமணியும்கூட இதை எடுத்தாண்டிருக்கிறார். ஏன் இதே கட்டுரையின் அடுத்த பத்தியிலேயே விடுதலை பின்வருமாறு எழுதுகிறது: ''பிறப்பை அடிப்படையாக வைத்து தங்களை உயர்ந்த சாதி (பிரம்மாவின் நெற்றியிலிருந்து பிறந்தவர்கள்) எனக் கூறிக் கொண்டு உயர்வு - தாழ்வு பேதத்தை கற்பித்து நிலை நாட்டி, பாதுகாத்து வருவது பார்ப்பனர்கள்தானே! இந்த நாட்டு பூர்வகுடிகள் (திராவிடர்கள்) அல்லவே! பார்ப்பனரல்லாத (திராவிட) சமுதாய மக்களுக்கு சரிசமமான சமூக அந்தஸ்து தர மறுப்பவர்கள் பார்ப்பனர்கள்தானே! அரசியலிலும் அதே நிலைதானே. அதிகார பீடங்கள் என்று அழைக்கப்படும் நீதித்துறை, நிர்வாகத்துறை இன்னும் அக்கிரகார மயமாகத்தானே உள்ளது! மறுக்கிறதா புதிய ஜனநாயகம்?'' என்று கேட்கிறது (5/1/94) விடுதலை.

இதை புதிய ஜனநாயகம் எங்கே, ஏன் மறுக்கிறது! விடுதலைதான், சாதி உயர்வு - தாழ்வு பேதத்துக்கும், சமூக - அரசியல் தகுதிக்கும் பிறப்பே அடிப்படையாக உள்ளதென்று பார்ப்பனர்கள் கற்பித்து, பாதுகாத்துவரும் கோட்பாட்டை ஏற்று, நியாயப்படுத்துகிறது. புதிய ஜனநாயகத்துக்கு எதிராக செய்து வரும் அவதூறுகளுக்கு முட்டுக் கொடுக்கும் வகையில் விடுதலை வீரமணி கும்பல் தனது ''பிறவிக்குணம்'', ''சாதிப்புத்தி'' ஆகிய கோட்பாட்டை நியாயப்படுத்துவதற்கு அந்த பார்ப்பன சனாதன சித்தாந்தத்தையே பகுத்தறிவுக் கோட்பாடு என்று திரித்து வாதம் புரிகின்றது:

''பிறவிக்குணம் என்பது உண்டு. இது நடைமுறையில் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதே! இதையே கொச்சையாக கிராமப்புறங்களில் ''சாதிப்புத்தி'' என்று கூறுவர். அதாவது சாதிகளிடையே உள்ள அல்லது ஒவ்வொரு இனத்தை சார்ந்த மக்களுக்கிடையே உள்ள அல்லது பொதுவான குணநலன்களையே பிறவிக்குணம் என்கிறோம்'' (5/1/94) விடுதலை.

''எல்லோராலும்'' ஏற்றுக் கொள்ளப்பட்ட ''பிறவிக்குணம்'', கிராமப்புறங்களில் கொச்சையாகக் கூறப்படும் ''சாதிப்புத்தி'' என்பதை ஏற்று அங்கீகரிப்பதுதான் பகுத்தறிவா? இது பார்ப்பனர்களால் தமது சனாதன, வருணாசிரம சாதி ஆதிக்கத்துக்காகக் கற்பிக்கப்பட்டு, பாதுகாத்துவரும் கோட்பாடல்லவா? ''சாதிப் புத்தி'' என்பது அவர்கள் ஏற்படுத்திய வருணாசிரம சாதி அமைப்பில் வெவ்வேறு பிரிவின் சமூகத் தகுதியை நியாயப்படுத்தவும், அவர்களிடையே பகை



படிப்பகம்

www.padippakam.com

உணர்வை, உயர்வு - தாழ்வை ஏற்படுத்தச் சொன்ன இழிவான சூழ்ச்சியின் ஒரு பகுதி அல்லவா? இப்படிச் 'சாதிப்புத்தி' என்று பார்ப்பனர்களால் சூழ்ச்சியோடு கற்பிக்கப்பட்ட கோட்பாட்டை எடுத்து வைத்துக் கொண்டு ''பிறவிக்குணம்'' என்பதற்கு விடுதலை தானே ஒரு அகராதி - உரை எழுதி தனது விதண்டாவாதத்தை அடுக்கிக் கொண்டே போகிறது. ''சாதிகளிடையே உள்ள அல்லது ஒவ்வொரு இனத்தைச் சார்ந்த மக்களுக்கிடையே உள்ள அல்லது பொதுவான குணநலன்களையே பிறவிக்குணம் என்கிறோம்'' (5/1/94 விடுதலை) - இதுதான் ''பிறவிக்குணம்'' என்பதற்கு விடுதலை தரும் உரை.

ஒவ்வொருவரும் அவருடைய தாயின் கருவில் இருக்கும் போதே அல்லது பார்ப்பன சனாதன சித்தாந்தப்படி அதற்கு முந்தைய பிறவியிலேயே தமது குணநலன்களைப் பெற்று விடுவதாகக் கூறப்படுவதுதானே ''பிறவிக்குணம்''? ஆனால் விடுதலையோ, சாதிகளுக்கிடையே உள்ள அல்லது ஒவ்வொரு இனத்தை சார்ந்த மக்களுக்கிடையே உள்ள உறவுகளையும் அல்லது அவற்றுக்குப் பொதுவான குணநலன்களைப் ''பிறவிக்குணம்'' என்பதாக திரித்துச் சொல்கிறது.

புதிய ஜனநாயகத்துக்கும் விடுதலைக்கும் இடையிலே நடக்கும் வாதப் பிரதிவாதம், ''பார்ப்பனிய எதிர்ப்பு அமைப்புகளில் பார்ப்பனர்களை சேர்ப்பது சரியா?'' என்பதுதான். அப்படிச் சேர்க்கக் கூடாது, அவர்கள் அனைவருமே நம்பிக்கைத் துரோகம் செய்து விடுவார்கள், அடுத்துக் கெடுக்கும் நரித்தனமும் சூழ்ச்சியும் அவர்களது ரத்தத்திலேயே ஊறிய பிறவிக்குணம் என்பதுதான் வீரமணிகள் செய்துவரும் பிரச்சாரம். இதன் பொருள் என்ன? ஒவ்வொரு பார்ப்பனனுடைய பிறவிக்குணமும் அவனது தாயின் கருவிலேயே உருவாகி விடுகிறது. அதாவது பிறக்கும் போதே மேற்படிக் குணங்களோடு பிறக்கிறான்; அவை அவனுடைய பூர்வகுடி (ஆரிய) தோற்றம் காரணமாக, ரத்தத்திலேயே ஊறி பரம்பரை பரம்பரையாக தொடர்ந்து அக்குணம் பார்ப்பனனுக்கு இருந்து வருகிறது என்பதுதான் வீரமணிகள் கூறிவரும் வாதம். அவர்களுக்குப் புரியும் விதத்தில் சொல்வதானால் அவர்கள் செய்துவரும் வாதத்தின் சாராம்சம் இதுதான்: ஒவ்வொரு பார்ப்பனனுடைய குணமும் கருவின் (Genetic) குற்றத்தினால் ஏற்பட்டது; வளர்ப்பினால், மற்ற பிற சாதியினரோடு கலந்துறவாடுவதால், கல்வி - அனுபவ அறிவால் ஏற்படக் கூடியதோ, மாறக் கூடியதோ அல்ல; இதை மேலும் வக்கிரமாக - ஆணித்தரமாகக் கூறுவதுதான், ''வாயில், நாக்கில் குற்றம் இருந்தாலொழிய வேம்பு இனிக்காது, தேன் கசக்காது. பிறவியில் மாறுதல் இருந்தாலொழிய - புலி புல்லைத் தின்னாது, ஆடு மனிதனைத் தின்னாது. அது போலவே பார்ப்பனர்கள் தன்மையும் ஆகும்'' என்பது விடுதலை (5/1/94) -யின் வாதம்.

ஒரு மனிதனுடைய குணநலன்கள் அவனுடைய கருவிலேயே (Genetic) உருவாகிவிடுகிறது; அது பூர்வ குடிப் பிறப்பில் இருந்து பரம்பரை பரம்பரையாக தொடர்கிறது என்கிற இந்தக் கோட்பாடு நாஜிக்களின் சித்தாந்த குரு நீட்சே, மனோதத்துவ நிபுணர் எட்மண்ட் சைமன் ஃபிராய்டு, சமீபத்தில் இறந்த ''அறிவு ஆய்வு மேதை'' எரிக் எரிக்சன் போன்ற முதலாளித்துவ 'அறிஞர்'களுடையது. இதன் அடிப்படையிலானதுதான் பூர்வகுடிவாதம் (Racialism) ஆகும். இத்தகையதுதான் கறுப்பு - வெள்ளை இனத்தவரிடையேயான பாகுபாட்டை நியாயப்படுத்தும் நிறவாதம் (Apartheid) ஆகும். இந்த பூர்வ குடி இன வெறி - நிறவெறி (ஆரிய பூர்வகுடி, வர்ண - நிற பாகுபாடுதான் வருணாசிரமம்) அடிப்படையிலானதுதான் பார்ப்பன சனாதன சித்தாந்தம்.

> ஒரு மனிதன்து ''சமூக வாழ்வு'' என்பது சேரிக்குள்ளோ, அக்கிரகாரத்துக்குள்ளோ அடங்குவதில்லை. அதையும் தாண்டி அமைவதால் அவரது சமூக-சாதி வரம்புகளையும் கடந்து அவரது குணநலன்கள் உருவாகும் வாய்ப்புகள் நிறையவே உள்ளன.

இதே சித்தாந்தத்தை வெறும் தர்க்க ரீதியிலும் கொச்சையாகவும் முன்வைத்து புதிய ஜனநாயகத்துக்கு எதிராக அவதூறு செய்வதை நியாயப்படுத்துகிறார், விடுதலை அசுரன்.

''ஒருவரது குணநலன்கள் அவரது சமூக வாழ்வால் உருவாகிறது என்று 'புதிய ஜனநாயகம்' கூறுவது சரியே. ஆனால், ஒருவரது சமூக வாழ்வு நிலை சாதியால் நிர்ணயிக்கப்படுகிறது என்பதை மட்டும் 'புதிய ஜனநாயகம்' மறைப்பது ஏன்? இதைத்தான் பார்ப்பனியம் என்பது. ஒருவரது குணநலன்கள் அவரது சமூகத்தால் உருவாகிறது. ஒருவரது சமூக வாழ்வு அவரது சாதியால் தீர்மானிக்கப்படுகிறது. ஒருவரது சாதி அவரது பிறப்பால் நிர்ணயிக்கப்படுகிறது. எனவே, ஒவ்வொருவருக்கும் வேறுபட்ட குணநலன்கள் (பிறவிக்குணம்) உண்டு. இதை மாற்றி சமத்துவம் காண்பதே பெரியாரியலாகும்'' என்கிறது விடுதலை (5/1/94)

''ஒருவரது குணநலன்கள் அவரது சமூக வாழ்வால் உருவாகிறது'' என்று நாம் எழுதும் போது குறிப்பிடும் ''சமூக வாழ்வு'' என்பது வேறு; மேலே விடுதலை குறிப்பிடும் ''சமூக வாழ்வு'' என்பது வேறு. ''சமூகவாழ்வு'' என்கிற சொல் மட்டுமே இருவரது வாதத்திலும் உள்ள பொதுவானது. ஆனால் இருதரப்பும் அச்சொல்லால் குறிப்பிடும் பொருள் வேறுவேறானவை. இந்த உண்மையை மூடிமறைத்து ''ஒருவரது குணநலன்கள் அவரது சமூகவாழ்வால் உருவாகிறது'' என்கிற நமது கருத்து சரியானது என்று ஒப்புக் கொள்வது போல நடித்து, 'சமூக வாழ்வு'' என்பதற்கு தனக்கு வசதியான வேறொரு பொருள் கொடுத்து, சமூக வாழ்வு நிலை சாதியால் நிர்ணயிக்கப்படுவதை நாம் மறைப்பதாகவும் அதுதான் பார்ப்பனியம் என்றும் அவதூறு செய்கிறது விடுதலை. ''பிறவிக் குணம்'', ''சாதிப்புத்தி'' ஆகிய பகுத்தறிவற்ற வாதத்துக்கு தர்க்க நியாயம் கற்பிப்பதற்காக ''சமூகம்'', ''சமூக வாழ்வு'' ஆகியவற்றை வெட்டிச் சுருக்கிக் கொண்டு அந்த நிலையில் இருந்து நம்மீது பார்ப்பன முத்திரை குத்துகிறது, விடுதலை.

ஒருவரது பிறப்பால் விதிக்கப்பட்ட சாதி, அச்சாதிக்குரிய சமூகத் தகுதி, அதனால் அச்சாதிக்கும், அவர் உட்பட அச்சாதியினருக்கும் வரையறுக்கப்பட்ட சமூக வாழ்வு - இவற்றை மட்டுமே அவரது சமூகம், சமூகவாழ்வு என்று விடுதலை குறிப்பிடுகிறது; அதைப் பொருத்தே ஒருவரது குணநலன்கள் உருவாகின்றன. ஆகவே அது பிறவிக்குணம் தான் என்கிறது. ஒவ்வொருவரும் ஒரு சாதியில் பிறப்பதால் அச்சாதிக்குரிய, அச் ''சமூக''த்துக்குரிய குணநலன்களைத்தான் பெற முடியும்; ஏனென்றால் அதுதான் அவரது சமூகநிலை, சமூக வாழ்வு என்கிறது, விடுதலை.

ஒவ்வொருவரும் ஒரு சாதியில் பிறப்பதால் அந்தச் சாதிய சூழ்நிலையில், அந்தச் சாதியப் பண்புகள், குணநலன்கள், பழக்க வழக்கங்கள், வாழ்க்கை நெறிமுறைகள் போதிக்கப்பட்டு அந்த வரையறைக்குள்தான் பயிற்றுவிக்கப்பட்டு, வளர்க்கப்படுகிறார். ஆனால் அவரது சமூகவாழ்வு என்பது அந்த வரையறைக்குள் மட்டும் அடங்குவதில்லை. அவரது கல்வி - பண்பாடு, தொழில் - பொருளாதாரம், அரசியல் நடவடிக்கைகள் காரணமாகப் பல்வேறு சாதிகளையும் சேர்ந்த மக்களுடன் உறவு கொள்கிறார். அவர் நேரடியாக அரசியலில் ஈடுபடாவிட்டாலும் அரசியல் அவரது வாழ்



படிப்பகம்

www.padippakam.com

வைப் பாதிக்கிறது; பத்திரிக்கைகள், வானொலி, வானொளி, சினிமா போன்றவையும் மறைமுக - நேரடிப் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. ஒரு மனிதனது ''சமூக வாழ்வு'' என்பது சேரிக்குள்ளோ, அக்கிரகாரத்துக்குள்ளோ அடங்குவதில்லை. அதையும் தாண்டி அமைவதால் அவரது சமூக-சாதி வரம்புகளையும் கடந்து அவரது குணநலன்கள் உருவாகும் வாய்ப்புகள் நிறையவே உள்ளன.

ஒவ்வொரு சாதிக்கும் சாதிப்பெருமை, கௌரவம், சாதி ஆதிக்க உணர்வு (தாழ்த்தப்பட்ட சாதிகளில்கூட அவர்களுக்குக் கீழே உள்ள அச்சாதிகளின் முடிதிருத்துவோர், சலவையாளர் ஆகிய பிரிவுகளுக்கு எதிராக ஆதிக்க உணர்வு), கீழ் நிலையில் உள்ள சாதிகளில் தாழ்வு மனப்பான்மை, அடிமை உணர்வு போன்ற பொதுவான குணநலன்கள் உண்டு. ஒவ்வொரு சாதியிலும் பிறந்தவர்களுக்கு அந்தந்தப் பொதுக் குணநலன்கள் போதிக்கப்பட்டு பயிற்றுவிக்கப்படுகிறது. அதனால் அந்தந்த சாதிகளைச் சேர்ந்த பெரும்பாலானவர்கள் அதிலிருந்து மீளாமல், அதை ஏற்றுக் கொண்டிருக்கும் போதே, தனி நபர்கள் என்கிற முறையில் சிலர் அந்தந்த சாதி வரம்புகளை மீறி, அந்தந்த சாதிக்குரிய பொதுக் குணங்களைக் கடந்து சிந்திக்கவும் செயல்படவும் முடியும்.

அவ்வாறின்றி ஒவ்வொருவரது சமூக - சாதி வரம்புக்குட்பட்ட சமூக வாழ்வும் குணநலன்களும் மட்டுமே அவருக்கு இருக்கும் என்றால் சேரியில் பிறந்த ரெட்டமலை சீனிவாசன், அம்பேத்கார், மீனவக் குப்பத்திலே பிறந்த சிங்காரவேலர் போன்றவர்கள் தாம் அடைந்த நிலையை எட்டியிருக்க முடியாது. மதுரை சண்முகவடிவின் மகள் சுப்புலட்சுமி 'கல்கி' சதாசிவத்தின் மனைவி - மடிசார் மாமியாகவும், அக்கிரகாரத்தில் பிறந்த சவிதா அம்பேத்காரின் மனைவி - தலித் தலைவர்களில் ஒருவராகி இருக்க முடியாது. பெரியார், கடவுள் மறுப்பு, சாதி ஒழிப்பு, பெண்ணடிமை எதிர்ப்பு, தமிழின தலைவராகி இருக்கவும், அரச குடும்பத்தில் பிறந்த வி.பி. சிங் 'சமூக நீதிக் காவலரா'கவும் மாறி இருக்க முடியாது. இதுவே பார்ப்பன சாதியில் பிறந்தாலும் பார்ப்பன எதிர்ப்பு இயக்கங்களில் தம்மை இணைத்துக் கொண்டவர்களுக்கும் பொருந்தும்.

அதாவது பார்ப்பன சாதி அதற்கே உரிய குணநலன்களுடன் நீடிக்கும் அதே சமயம், தனி நபர்கள் என்கிற முறையில் சிலர் அக்குணநலன்களை எதிர்ப்பவர்களாக மாறிவிட்டார்கள் என்கிறோம். பார்ப்பனர்கள் அனைவருமே தமது குணநலன்களை மாற்றிக் கொண்டு விட்டார்கள்; ஆகவே அவர்களை ஒரு குழுவாகவோ, சாதிப்பிரிவாகவோ நட்புச் சக்தியாகக் கருத வேண்டும் என்பது நமது நிலைப்பாடு அல்ல. அது 'மார்க்சிஸ்ட்', 'கம்யூனிஸ்ட்' போன்ற போலிக் கம்யூனிஸ்டு கட்சிகளின் நிலைப்பாடு. அதற்கு மாறாக பார்ப்பனீயம், பார்ப்பன சாதி, ஆதிக்கம் ஆகியவற்றை எதிர்த்துப் போராடுவது உட்பட மார்க்சிய லெனினியப் புரட்சியை ஏற்கும் தனிநபர்களிடம் பார்ப்பனர்களாகப் பிறந்தாலும் தகுதிகள் இருப்பின் அவர்களை எமது அமைப்பில் சேர்ப்பது தவறில்லை என்கிறோம்.

அப்படி ஒரு சிலரைச் சேர்த்துக் கொள்வதற்காக 'புதிய ஜனநாயகம்' மீது பார்ப்பன முத்திரை குத்தும் விடுதலை. பின்வருமாறு எழுதுகிறது: ''ம.க.இ.க -வில் உள்ள பார்ப்பனர்கள் சரத்ஜோஷியாகவும், பி. ராமமூர்த்தியாகவும் ஒரு காலத்தில் அம்பலமானால் ஆச்சரியமில்லை. பார்ப்பனரல்லாத மக்களின் இன விடுதலைக்கு ஆதரவு காட்டும் முக்கியப் பொறுப்புக்கும் தலைமைக்கும் வர முயற்சிக்கும் முற்போக்கு பார்ப்பனர்கள் சங்கராச்சாரியை விட ஆபத்தானவர்கள்'' ''தக்க சூழ்நிலை வரும்பொழுது அவர்களது ஆதிக்க உணர்வு வெளிப்படும்'' (விடுதலை 5.1.94) இதற்கு விடுதலை கூறும் காரணம் பார்ப்பனர்களின் ''பிறவிக்குணம்'', ''சாதிப்புத்தி'' என்பதுதான்.

> ஒவ்வொருவரது சமூக-சாதி
> வரம்புக்குட்பட்ட சமூக
> வாழ்வும் குணநலன்களும்
> மட்டுமே அவருக்கு
> இருக்கும் என்றால்
> [illegible]
> சாதி ஒ[illegible]
> பெண்ணடிமை எதிர்ப்
> தமிழின தலைவராகி
> இருக்கவும், அரச
> குடும்பத்தில பிறந்த
> வி.பி.சிங் சமூக நீதிக்
> காவலராக மாறி
> இருக்கவும் முடியாது.

5.1.94 அன்று மேற்கண்டவாறு ஆணித்தரமாக எழுதிய விடுதலை அசுரன், அடுத்த நாளே, 6.1.94 அன்றே 'திடீர் பல்டி' அடித்து விட்டார். அதாவது ''பிறவிக்குணம்'' - ''சாதிப்புத்தி'' பார்ப்பனர்களாகப் பிறந்த அனைவருக்கும் உண்டு, அதற்கு விதிவிலக்கே கிடையாது; ஆகவே பார்ப்பனிய எதிர்ப்பு அமைப்புகளில் பார்ப்பனர்களை சேர்ப்பதே தவறு என்று முதல் நாள் எழுதி விட்டு அடுத்த நாளே, ''பார்ப்பனராய் இருந்தாலும் மனிதாபிமானிகளையும், நேர்மையானவர்களையும், ஒழுக்கமானவர்களையும் மதிக்கத் தவறுவதில்லை - திராவிட இனத்தவர் என்பதற்கு புதிய ஜனநாயகத்தின் எடுத்துக்காட்டு பட்டியலே போதுமானதாகும்'' என்று ஒப்புக் கொள்கிறது விடுதலை (6.1.94)

இதன் மூலம் விடுதலையின் சுயமுரண்பாடு அம்பலமாகிறது.

ஒருபுறம், பார்ப்பனர்கள் அனைவருக்குமே ''பிறவிக்குணம்'' சாதிப்புத்தி'' அடுத்துக் கெடுக்கும் நயவஞ்சகம், நரித்தனம், சூழ்ச்சி ஆகியவை ரத்தத்திலேயே ஊறியவை; ஆகவே தான் பார்ப்பன எதிர்ப்பு அமைப்புகளில் பார்ப்பனர்கள் எவரையும் சேர்க்கவோ, தலைமைக்கும் முக்கிய பொறுப்புகளுக்கும் அனுமதிக்கவோ கூடாது என்கிறது விடுதலை.

மறுபுறம், பார்ப்பனராய் இருந்தாலும் அவர்களில் மனிதாபிமானிகளும், நேர்மையானவர்களும், ஒழுக்கமானவர்களும் உண்டு; அப்படிப்பட்டவர்களைத் தாம் மதிக்கத் தவறுவதில்லை என்கிறது, விடுதலை.

''அடுத்துக் கெடுக்கும் நரித்தனம் பார்ப்பனர்களுக்கு உண்டு. எனவே, பார்ப்பனர்களோடு எச்சரிக்கையோடு இருங்கள் என எச்சரிப்பதில் என்ன தவறு?'' என்றும் கேட்கிறது, விடுதலை, (6.1.94). இது எச்சரிக்கை மட்டும் தானா? விடுதலையின் நிலைப்பாடுதான் என்ன? பார்ப்பனர் எதிர்ப்பு அமைப்புகளில் பார்ப்பனர்களை சேர்க்கக் கூடாது என்பதா? சேர்க்கலாம், ஆனால் தலைமைக்கும் முக்கியப் பொறுப்புகளுக்கும் அனுமதிக்கக் கூடாது எச்சரிக்கையாக இருங்கள் என்பதா? பார்ப்பனர் அல்லாதவர்களுக்குள்ளும் துரோகிகள் உண்டென்று அனுபவம் காட்டுகிறதே, அவர்களிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டாமா?

பதில் சொல்ல முடியாத இந்தக் கேள்விகளுக்குள் விடுதலை சிக்கிக் கொண்டதற்கே காரணம், அவர்களது பார்ப்பன எதிர்ப்பில் உள்ள இரட்டை நாடகத்தை, சுயமுரண்பாட்டை நாம் அம்பலப்படுத்தியதுதான்.

''பார்ப்பனர்களின் அடுத்துக் கெடுக்கும் நரித்தனம் பற்றித் தமிழர்களை எச்சரித்து வரும் பல்வேறு கட்சிகளும், குழுக்களும் தமது வசதிக்கேற்ப பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொள்வதுடன் ஆலோசகர்களாகவும் முக்கியப் பொறுப்புகளிலும் அமர்த்திக் கொள்கின்றன'' என்று சொல்லி, அதற்குச் சான்றாகப் புதிய ஜனநாயகம் ஒரு பட்டியலும் தந்திருக்கிறது ('93 ஆக இதழ்).

இவ்வாறு அம்பலப்படுத்தியதை ''புதிய ஜனநாயகப் பார்ப்பனர்களின் நரித்தனம்'' என்று ஆத்திரத்துடன் துணைத் தலைப்பு முத்திரை குத்துகிறது, விடுதலை. ''பார்ப்பனர்களைப் பற்றி விமர்சிக்கும் தலைவர்கள் தான் சொந்த



படிப்பகம்

www.padippakam.com

நலனுக்கு பார்ப்பனர்களை நம்பியே உள்ளார்கள் என்று குத்தலாக புதிய ஜனநாயகம் சொல்கிறது. இது ரொம்ப விஷமத்தனமானதாகும்'' என்கிறது, (6.1.94)

இது அவர்களின் இரட்டை வேடத்தை அம்பலப்படுத்துவதோ, பார்ப்பன நரித்தனமோ, குத்தலான விஷமத்தனமோ - எதுவாக வேண்டுமானாலும் இருக்கட்டும்; ஆனால் இது உண்மையானது என்பதை விடுதலை மறுக்கிறதா? இல்லையே ! மறுக்க இயலாத நிலையில் பின்வருமாறு எழுதி மழுப்புகிறது.

''முதலில் தனிப்பட்ட முறையில் எந்த ஒரு பார்ப்பனர் மீதும் நீதிக் கட்சித் தலைவர்களாகட்டும், மற்றும் திராவிடர் கழகத்தினராகட்டும் வெறுப்புக் கொண்டதில்லை என்பதும், அது திராவிடர் (பூர்வ குடி) மரபு அல்ல என்பதும் முக்கால் நூற்றாண்டு காலமாக கடைப்பிடித்து செயல்படுத்தி வரும் காரியமாகும் '' என்று பின்வாங்குகிறது விடுதலை.

''மேலும் பார்ப்பனராய் இருந்தாலும் மனிதாபிமானிகளையும் நேர்மையானவர்களையும், ஒழுக்கமானவர்களையும் மதிக்கத் தவறுவதில்லை - திராவிட இனத்தவர் என்பதற்கு புதிய ஜனநாயகத்தின் எடுத்துக்காட்டுப் பட்டியலே போதுமானதாகும். பார்ப்பனர்களுக்கு முன்புத்தி கிடையாது என்பார் பெரியார். திராவிட இயக்கங்களை இட்லரின் நாசிசத்துடன் ஒப்பிட்டு விட்டு அதற்கு எதிர்மாறான (மனிதாபிமான) கருத்துக்கு ஆதரவான நிகழ்வுகளையும் விவரங்களையும் குறைகளாக கொடுத்துள்ளது, புதிய ஜனநாயகம். ஏன் இந்தக் குழப்பம் என்பது அவர்களுக்கே வெளிச்சம்'' என்று புலம்புகிறது விடுதலை (6.1.94)

இதில் குழப்பம் ஒன்றும் இல்லை. எல்லோருக்கும் வெளிச்சமாகத்தான் இருக்கிறது. பார்ப்பனர்கள் அனைவருமே நயவஞ்சகம், அடுத்துக் கெடுக்கும் நரித்தனம், சூழ்ச்சி ஆகியவற்றை ''பிறவிக்குணமாகவும்'' ''சாதிப்புத்தி''யாக கொண்டவர்கள் என்று ஒரு புறம் வீரமணிகள் கூறுகின்றனர். இது நாசிச பூர்வ குடிவாதம் (Racialism) தான். இப்படிக் கூறிக் கொண்டே மறுபுறம், பார்ப்பனர்களை ஆலோசகர்களாகவும், முக்கியப் பொறுப்புகளிலும் அமர்த்தியுள்ளார்கள். இது அவர்களின் சுயமுரண்பாடு, இரட்டை வேடம் என்றும் ஆதாரமாக ஒரு பட்டியலும் தந்துள்ளோம். வெறுமனே தனிப்பட்டவர்களிடம் பகைமை பாராட்டுவதில்லை, அவர்களை மதிக்கத் தவறுதில்லை என்று மழுப்புவதேன்? நமது குற்றச்சாட்டு அதுவல்ல. பார்ப்பனராய்ப் பிறந்தவர்களை நமது அமைப்புகளில் சேர்த்துக் கொள்வதிற்காக அவதூறு செய்யும் அவர்கள் பார்ப்பனர்களை ஆலோசகர்களாகவும், முக்கியப் பொறுப்புகளிலும் அமர்த்திக் கொண்டுள்ளார்கள் என்பதுதான். இதை மறுக்க முடியாததால் முன்புத்தி இல்லாமல், குழப்புவதாக நம்மீதே பாய்கிறது, விடுதலை. இருந்தாலும் பார்ப்பனர்களுடன் அவர்களுக்குள்ள ''உறவை'' மழுப்புவதற்காக, பார்ப்பனர்களின் ''பிறவிக்குணம்'', ''சாதிப்புத்தி'' என்று வரிந்து கட்டிக் கொண்டு எழுதிய கோட்பாட்டைத் தாமே மறுக்கும் நிலை எடுக்கிறது, விடுதலை.

''பார்ப்பனராகப் பிறந்த அனைவருமே நம்பிக்கை துரோகம் செய்து விடுவார்கள். அடுத்துக் கெடுக்கும் நரித்தனமும் சூழ்ச்சியும் அவர்களது ரத்தத்திலேயே ஊறியவை. இதற்கு விதிவிலக்கே கிடையாது'' - என்பதுதான் வீரமணி போன்றவர்களின் வாதம். ஆனால், திராவிடர் கழகத்தின் அனுபவமும் அணுகுமுறையுமே அதற்கு மாறானது என்பதற்கு சான்றுகள் கூறமுடியும் என்று புதிய ஜனநாயகம் எழுதியுள்ளது.



**தி.க.வின் பார்ப்பனீய எதிர்ப்பு ஒரு கலங்கிய குட்டை; அதில் ஒருக்காலும் மீன் கிடைக்காது! -**

''பார்ப்பனர்களைப் பற்றி கற்பனையோடு தானே எழுதி கொண்டு அவ்வாறு பேசுவதுதான் வீரமணி போன்றவர்களின் வாதம் என்பது புதிய ஜனநாயகம் கூறுவது என்ன வகை அறிவோ? புதிய ஜனநாயகத்திற்குத்தான் வெளிச்சம் ! இது போன்ற வாசகங்களை எங்காவது பேசியிருந்தால் அல்லது எழுதியிருந்தால் அதனை வெளியிட்டு விமர்சனம் செய்வதனை நாம் வரவேற்போம் ! 'ஆனால் இது போன்ற இனவாதம்' என்று 'புதிய ஜனநாயகமே' எழுதிக் கொண்டு நம்மிடம் பதிலை எதிர்பார்ப்பது அறிவீனமே !'' என்று புளுகுகிறது, விடுதலை (6.1.94)

வீரமணி போன்றவர்களின் வாதம் என்று மேலே எடுத்துக் காட்டிய வாசகம் நாமே கற்பனையாக எழுதியதா? பார்ப்பன எதிர்ப்பு அமைப்புகளில் பார்ப்பனர்களை ஏன் சேர்க்கக் கூடாது என்பதற்கு, தனது 2000 ஆண்டு கால அனுபவமாக வீரமணிகள் கூறும் காரணம் என்ன? இந்தத் தொடர் முழுவதும், குறிப்பாக, இந்தப் பதிலில் நாம் எடுத்துக் காட்டியுள்ள மேற்கோள்கள் பலவும் காட்டுவது என்ன? நமது அமைப்பில் உள்ள ''பார்ப்பனர்கள்'' துரோகம் செய்து விடுவார்கள் என்று ஆரூடம் சொல்வது, எந்த அடிப்படையில்? இந்தக் கேள்விகளுக்கான பதிலே போதும், பார்ப்பனர்களைப் பற்றி வீரமணி போன்றவர்களின் வாதம் என நாம் எழுதியது நமது கற்பனை அல்ல, பார்ப்பனர்களுடனான உறவில் அவர் இரட்டை வேடம் போடுவதை மழுப்பும் சமயம் தவிர மற்ற எப்போதும், எங்கும் அவர்கள் எழுதியும், பேசியும் வருவது இதுதான்.

ஆனால் இங்கே கையும் களவுமாக சிக்கிக் கொண்ட நிலையில், ஆதாரத்துடனான நமது குற்றச்சாட்டை மறுக்க முடியாத நிலையில் பார்ப்பனர்களின் ''பிறவிக்குணம்'', ''சாதிப்புத்தி'' என்று தானே பெற்றெடுத்த இனவாதத்தை அனாதையாக்கி விட்டு பின்வருமாறு எழுதுகிறது, விடுதலை:

'இனநலன்' என்ற அடிப்படையில் பார்ப்பனர் பற்றி குறிப்பிடுவதை தனிப்பட்ட முறையில் ஏற்றித் திரிப்பது தவறு. தனிப்பட்ட முறையில் இருப்பதை விட இன அடிப்படையில் பார்ப்பனர்களை இனவாதிகள் (Communally Communal) என்பது பெரியாரின் எச்சரிக்கை ஆகும்'' என்று புது விளக்கம் தருகிறது, விடுதலை.

சரி, விடுதலையின் இந்த விளக்கப்படியே பார்ப்போம். பார்ப்பனர்களின் ''பிறவிக் குணம்'', ''சாதிப்புத்தி'' என்பது அவர்களின் இனநலன் அடிப்படையில் குறிப்பிட்டதுதான் என்றால், பார்ப்பனர்கள் வகுப்பு ரீதியாகத்தான் வகுப்புவாதிகள் (Communally Communal) என்றால், அதாவது அடுத்துக் கெடுக்கும் நரித்தனம், சூழ்ச்சி, நம்பிக்கை துரோகம் ஆகியவை செய்வது அவர்களின் சாதிக்குரிய பொது குண நலன்கள்தான் என்றால், அவற்றைத் தனிப்பட்ட முறையில் ஏற்றித் ''திரிப்பது'' தவறு என்றால் புதிய ஜனநாயகத்தில் உள்ள தோழர்களைப் பற்றி எதுவுமே தெரியாத நிலையில், கண்ணை மூடிக் கொண்டு, அவர்கள் நம்பிக்கை துரோகம் செய்து விடுவார்கள் என்று ஆரூடம் சொல்வதும், புதிய ஜனநாயகத்துக்கு பார்ப்பன முத்திரை குத்தி அவதூறு செய்வதும் சரியா?

— தொடரும்



படிப்பகம்

www.padippakam.com




## அந்நியர்கள் தொழில் தொடங்கினால் என்ன? நமக்குத்தானே நல்லது?

● பல வெளிநாட்டு தொழில் அதிபர்கள், பல வெளிநாட்டு இந்தியர்கள் இந்தியாவில் தொழில் தொடங்க முன்வருகிறார்கள் அப்படி உற்பத்தி செய்து, வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதால் நமக்கு (இந்தியாவுக்கு) அன்னிய செலாவணி கிடைக்கிறது, பலருக்கு நம் நாட்டில் வேலை வாய்ப்பும் கிடைக்கிறது. உலக நாடுகள் மத்தியில் நமது நாட்டின் நிலை உயருகிறது. அப்படி இருக்கும் போது அதனை ஏன் எதிர்க்கிறார்கள்? வெளிநாட்டு தொழில் அதிபர்களுக்கு எதிராக கோஷம் எழுப்புவது ஏன்?

— தா. பாண்டியன், மதுராந்தகம்.

★ தனிப்பட்ட தொழில் அதிபர்கள் எவரும், வாசகர் குறிப்பிடும் நல்ல நோக்கத்தோடு இங்கு முதலீடு செய்ய வரவில்லை. இந்த நாட்டைக் காலனியாக்கிய கிழக்கிந்தியக் கம்பெனியைப் போன்று பல ஆயிரம் மடங்கு பூதாகரமான, சக்தி வாய்ந்த தேசங்கடந்த, பன்னாட்டுத் தொழில் கழகங்களும் அவற்றின் பினாமிகளாக வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களும் இங்கு தொழில் தொடங்க வருகிறார்கள். அவற்றில் பலவும் மேற்கில் வளர்ந்த முதலாளி நாடுகளை விட அதிகமான வரவு செலவும், நிதி, போக்குவரத்து, செய்தித் தொடர்பு, நிர்வாக ஆராய்ச்சி எந்திரம் உட்பட ஒரு தனி அரசின் வலுவோடு, வலைப்பின்னலோடு இயங்கும் சர்வதேசக் கொள்ளை நிறுவனங்கள். உலக வங்கி, ஐ.எம்.எஃப், 'காட்'டின் - உலக வர்த்தக அமைப்பு போன்ற ஏகாதிபத்திய நிறுவனங்களின் மிருக பல ஆதரவோடு செயல்படுகின்றன. இந்த நாட்டின் பொருளாதாரத்தை தமது சர்வதேச மயமாக்கப்பட்ட மூலதனம், உழைப்பு, உற்பத்தியோடு இணைப்பதன் மூலம் தமது சுரண்டல், கொள்ளையை மேலும் விரிவுபடுத்திக் கொள்வதே அவற்றின் நோக்கம். இந்த நாட்டின் கச்சாப்பொருள், மலிவான உழைப்பு, விரிவான சந்தையை கொள்ளையிடுவதோடு, இதன் சுற்றுச் சூழல் - உயிரியல் அமைப்பை நாசமாக்கி, மேலும் பல போபால் விஷவாயுப் படுகொலைகளை செய்யும்; இந்த நாட்டை எத்தியோப்பியா, சோமாலியா போன்ற நிரந்த பஞ்ச பூமியாக்கி பட்டினிச்சாவுகள் ஏற்படுத்தும்; இந்த நாட்டின் பண்பாடுகளை சீரழித்து ஆபாச - உல்லாச - களி வெறியாட்டக் கலாச்சாரத்தைத் திணிக்கும். இந்த நாட்டு மக்களுக்கென்று அரசியல் உரிமைகள் இன்றி முழு அடிமைகளாக்குவதே அந்த நிறுவனங்களின் நோக்கமாகும். ஏகாதிபத்திய உளவுப் படைகளைக் கொண்டு அரசியல் படுகொலைகளைக் கூட இந்நிறுவனங்கள் செய்கின்றன. தொழில் - உற்பத்திப் பெருக்கம், அன்னிய செலாவணி அதிகரிப்பு என்பதும் கூட பெரும்பாலும் அந்நிறுவனங்களுக்கு இடையிலான பொருளாதார - நிதி பங்கீட்டிற்கானதாகவே இருக்கும். இடுப்புத் துணியைப் பறிகொடுத்து, கஞ்சிக்குக் கையேந்தி நிற்கும் இந்த நிலை நமது நாட்டுக்குத் தேவையா?

● ''மாவோ நூற்றாண்டு விழா''வை யொட்டி, சி.பி.எம் -ன் 'தீக்கதிர்' ஒரு சிறப்பிதழ் வெளியிட்டது. அதில் மாவோவை நக்சல்பாரிகள் சரியானபடி பின்பற்றத்தவறிவிட்டனர்; சி.பி.எம். மட்டுமே தவறுகளை விமர்சித்து சரியானவற்றை எடுத்துப் பின்பற்றியது என்று பொருள்பட எழுதியுள்ளனர். அதுபற்றி உங்கள் கருத்து என்னவென்று விளக்குவீர்களா?

— சு. பரமசிவம், சென்னை - 58.

★ ''மாவோ சிந்தனை''யைக் கிரகித்துக் கொண்டு, இந்த நாட்டின் பருண்மையான நிலைமைகளுக்குப் பிரயோகிப்பதில் ''நக்சல்பாரிகள்'' ஆரம்ப காலத்தில் முக்கியமான சில தவறுகள் செய்துவிட்டனர் என்பது உண்மை. ஏகாதிபத்தியத்தின் முழு வீழ்ச்சியும் உலகு தழுவிய சோசலிச வெற்றிக்கான சகாப்தத்தில் உலகம் நுழைந்து விட்டதாகக் கருதியது; புரட்சியில் வர்க்கங்களுக்கு இடையிலான உறவு, மக்கள் யுத்தப் பாதை, கட்சி - படை - ஐக்கிய முன்னணி உறவு, 'உழுபவருக்கே நிலம்' என்கிற விவசாயத் திட்டத்தின் முக்கியத்துவம், கலாச்சாரப் புரட்சியின் படிப்பினைகளை இந்திய நிலைமைகளுக்கு பிரயோகிப்பது போன்றவற்றில் ''நக்சல்பாரிகள்'' தவறிழைத்தனர். இப்போது அத்தவறுகளைத் திருத்திக் கொண்டு விட்டனர்.

ஆனால், மார்க்சியம் - லெனினியத்தை வளர்த்தெடுக்கும் சர்வவியாபகமான தன்மையுடையது ''மாவோ சிந்தனை'' என்று சி.பி.எம். ஒரு போதும் ஏற்றுக் கொண்டதில்லை. புதிய ஜனநாயகப் புரட்சி மற்றும் மக்கள் யுத்தப் பாதை ஆகியவற்றின் சர்வதேச முக்கியத்துவம்; சமூக ஏகாதிபத்தியம் பற்றிய வரையறுப்பு, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடரும் கலாச்சாரப் புரட்சி, மற்றும் சோசலிசக் கட்டுமானம் பற்றிய கோட்பாடு, மேல்நிலை வல்லரசு - மேலாதிக்க எதிர்ப்பு சர்வதேசப் புரட்சிக் கோட்பாடு ஆகிய எதையும் சி.பி.எம். ஏற்கவில்லை. அவரது புதிய ஜனநாயகப் புரட்சி மற்றும் மக்கள் யுத்தக் கோட்பாடுகள் சீனாவுக்கு மட்டுமே பொருந்துவன; மற்ற கோட்பாடுகள் அனைத்தும் தவறானவை, இடதுசாரி தீவிரவாத அடிப்படையிலானவை என்று நிராகரிப்பதோடு அவதூறும் செய்கிறது, சி.பி.எம். சரியானவை என்று சொல்லி மாவோவின் கோட்பாடுகள் எதையும் சி.பி.எம். பின்பற்றுவதில்லை. ஆனால் ஏகாதிபத்தியங்களும் சி.பி.எம். போன்ற போலிக் கம்யூனிஸ்டுகளும் தொடர்ந்து பல ஆண்டுகளாகக் கடும் அவதூறுப் பிரச்சாரங்கள் செய்து வந்த போதும் உலகப் பாட்டாளி மக்களும் ஒடுக்கப்பட்ட மக்கள் - தேசங்களும் மாவோவின் மீது வைத்துள்ள நன்மதிப்பைக் கேடாகப் பயன்படுத்திக் கொள்ளவே ''மாவோ நூற்றாண்டு விழாக்கள்'' நடத்தியும் சிறப்பிதழ்கள் போட்டும் புளுகுகிறது, சி.பி.எம். மார்க்ஸ் - லெனினைப் போலவே மாவோவையும் அவர்கள் இன்னொரு பூசை அறைப் படமாக வைத்துக் கொண்டுள்ளார்கள்.

● நாட்டில் 24 கோடி ஏக்கர் நிலம் பயன்படுத்தப்படாமல் உள்ளது; இதில் பத்து சதவீதத்தைப் பயன்படுத்தினால் கூட ஆண்டுக்கு 10 கோடி பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கலாம் என மேக்ஸ்வொர்த் நிறுவன தலைவர் ஆர். சுப்பிரமணியம் கூறியுள்ளார். (பார்க்க-தினமணி பிப் 5, '94). இம்மாதிரி நல்ல திட்டங்களை ஏன் இந்திய அரசு செயலாக்குவதில்லை? இதனால் என்ன நஷ்டம்? இப்படிப்பட்ட வறுமை ஒழிப்புத் திட்டங்களை பல நிறுவனங்கள், தனி நபர்கள் எடுத்துச் சொல்லியும் இந்திய அரசியல்வாதிகள் கண்டு கொள்ளாமல் இருப்பதற்கு காரணம் என்னவென்று எனக்குப் புரியவில்லை - விளக்கவும்.

— டி. ரமேஷ், வடலூர்.



படிப்பகம்

www.padippakam.com

★ இந்திய விவசாயத்தின் பல நூறாண்டு வரலாறில் இரண்டு முக்கிய கூறுகள் இருந்தன. அவை நீர்ப்பாசனமும், வரிவசூலும். இயற்கையான நீர்ப்பாசன வசதி இல்லாத இந்திய கிராமங்களுக்கு செயற்கை நீர்ப்பாசன வசதிகளை உருவாக்கிப் பாதுகாப்பது உயிராதாரமானது. ஆங்கிலேய ஏகாதிபத்தியவாதிகள் அதை முற்றாகப் புறக்கணித்து, வரிவசூலில் கொடூரமாக நடந்து கொண்டதால் அடுத்தடுத்து பல பஞ்சங்களும் பட்டினிச் சாவுகளும் நிகழ்ந்தன. காலனிய ஆட்சியாளர்களிடம் அதிகாரத்தைக் கை மாற்றிக் கொண்ட தரகு ஆட்சியாளர்கள், விவசாயத்துக்கு உரிய முக்கியத்துவமளிக்கவில்லை. ஜமீன் ஒழிப்பு, நில உச்சவரம்பு போன்ற போலிச் சீர்திருத்தங்களால் நிலப்பிரபுக்களிடம் குவிந்திருந்த நிலம் பகிர்ந்தளிக்கப்படவும் இல்லை. புறம்போக்கு - தரிசு நிலங்கள் கூட விவசாயிகளிடையே விநியோகிக்கப்பட்டு அவர்களின் சுய முயற்சி அடிப்படையிலான சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்படவில்லை. பெருமளவு நிலங்களை குவித்துள்ள நிலப்பிரபுக்களின் வசதிக்காக (பரம்பிக்குளம் — ஆளியாறு, பவானி ஆறு அணைத் திட்டங்கள் போன்றவை) சில திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. காங்கிரசு தரகு ஆட்சியாளர்களின் விவசாயத் திட்டம் விரைவிலேயே உணவு பற்றாக்குறைக்கும், மேற்கத்திய நாடுகளிடம் தானியத்திற்காக கையேந்தும் நிலைக்கும் தள்ளியது. இந்நிலைக்கு தீர்வு காண, சுயதேவைப் பூர்த்திக்காக இந்திரா தலைமையில் சி. சுப்பிரமணியம் அமெரிக்க எஜமானர்களின் கட்டளையை ஏற்று பசுமைப் புரட்சித் திட்டத்தைக் கொண்டு வந்தார். அதுவும் ஏற்கனவே பாசன வசதி பெற்ற லூதியானா, மித்னாபூர், கோதாவரி, தஞ்சை, பாலக்காடு போன்ற நிலப்பிரபுக்கள் ஆதிக்கமுடைய 42 மாவட்டங்களில் மட்டுமே அமுலாக்கப்பட்டது. நாட்டின் பெரும்பாலான பகுதிகள் பஞ்சபூமிகளாகவே நீடிக்கையில் சில திட்டுதிட்டான தீவுகள் செல்வச் செழிப்பு மிக்கவைகளாக வளர்க்கப்பட்டன. இதனால் உணவு உற்பத்தியில் தன்னிறைவு ஏற்பட்டாலும் ஏராளமான நிலங்கள் தரிசாகவும், பெரும்பான்மையான மக்கள் வறுமைக் கோட்டுக்கு கீழே வாழ்வதும் மாறவில்லை. இப்போது அரசு தீட்டியுள்ள புதிய ''காட்'' பொருளாதாரக் கொள்கையின் கீழ் தொடர்ந்து பெரு நிலப்பிரபுக்களே ஆதாயம் அடைவர்; மானிய வெட்டு, சர்வதேச விவசாய சந்தைப் பொருட்களுடன் போட்டி (அரிசி, கோதுமை, சர்க்கரை, பருத்தி இறக்குமதிகள்) காரணமாக ஏழை, நடுத்தர விவசாயிகள் நிலத்தை இழந்து, அவை நிலமுதலைகளிடம் குவியும் அல்லது தரிசாகிவிடும். ஏற்கனவே உள்ள தரிசு நிலங்கள் கருங்கல் வெட்டியெடுத்து ஏற்றுமதி செய்யவும், நன்செய் நிலங்களில்கூட பழத் தோட்டங்கள், காடுவளர்ப்பு என்று ஏகாதிபத்திய கொள்ளைக்கும் பயன்படும். புதிய வகை பயிரிடு முறைகளால் விளை நிலங்களும் நாசமாகி தரிசாகும். இவையும்கூட நிரூபிக்கப்பட்டவை தாம். இருந்தாலும் இந்திய அரசு ஏகாதிபத்தியத் தரகர்களுடையது. ஆதலால் விவசாயத்தை, விவசாயிகள் நலன் கருதி முன்னேற்றுவதற்கான திட்டங்கள் அமுலாக்கப்படுவதில்லை. விவசாயிகள் சுயசார்புடைய பொருளாதாரத்தை அமைத்துக் கொள்வதற்கு பதிலாக, நேரு வேலைவாய்ப்பு, சத்துணவு போன்ற பல இலவச திட்டங்கள் அமுலாக்கப்பட்டு தற்காலிகத் ''தீர்வுகள்'' காண்பதே வறுமை ஒழிப்புத் திட்டங்களாக உள்ளன. இவற்றை எடுத்துச் சொல்லும் தனிநபர்களும், நிறுவனங்களும் இப்போதைய அரசு அமைப்பின் கீழே ''தீர்வுகள்'' காண விழையும் வரை இந்த நிலையே நீடிக்கும். பாட்டாளி வர்க்கத் தலைமையில் உழைக்கும் மக்களின் அரசு ஏற்பட வேண்டும். அதன் கீழ் விவசாயிகளுக்கு நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். விவசாயிகளின் கமிட்டிக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும். உற்பத்திக்கான குழுக்கள் கட்டப்பட வேண்டும். அதன் முன் முயற்சி, உழைப்பினால் தான் பாலைவனங்கள் சோலைகள் ஆகும்; தரிசுகளும் - பொட்டல்களும் காடு கழனிகளாகும்.

● விவசாயத்தில் ''டங்கல்'' திட்ட அமலாக்கத்தினால் கூலி, ஏழை, நடுத்தர விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு இந்தியாவின் காலனிய தன்மை கூடுதலாகிறது. ''டங்கல்'' திட்டத்தினால் நிலப்பிரபுத்துவத்திற்கு அனுகூலமா? பாதிப்பா? ஏனென்றால் விதைகள், கால்நடைகள், பதிவுரிமைச் சட்டம் அவர்களுக்கும்தானே பாதிப்பு? இந்தியாவின், தமிழகத்தின் நிலப்பகுதியில் குறிப்பிட்ட அளவு நிலப் பண்ணைகளிடம் உள்ளதால், அடுத்த போகத்திற்கு விதை எடுத்து வைக்க முடியாத சூழ்நிலை அவர்களுக்கும் பாதிப்புத்தானே? அப்படி இருக்க இந்தத் திட்டத்தை அவர்கள் எப்படி ஏற்பர்? அல்லது தங்களைப் பாதிக்காமல் பார்த்துக் கொள்வார்களா? (உதாரணமாக நில உச்சவரம்புத் திட்டம் வந்தபோது செய்ததைப் போல) இந்தியா எதிர்காலத்தில் அரைக்காலனிய, அரை நிலப்பிரபுத்துவ நாடாக நீடிப்பதில் ஏதேனும் மாற்றம் நிகழுமா? டங்கல் திட்டத்தில் நிலப்பிரபுக்களுக்கு விதிவிலக்கு இருப்பது போல ஒன்றும் தெரியவில்லை. எனவே மூப்பனார், பூண்டி வாண்டையார் போன்றோரின் கருத்து என்ன?

— சங்கர், திருச்சி-8.

★ ''டங்கல்'' திட்டத்தில் நிலப்பிரபுக்களுக்கென்று தனியே விதிவிலக்கு எதுவும் இல்லை. அதனால் அவர்களுக்குப் பாதகமானவை எதுவும் இருக்காது. ''பசுமைப் புரட்சி'' விவசாய முறையை இந்திய நிலப்பிரபுக்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டதைப் போலவே ''டங்கல்'' திட்டத்திலும் அவர்களுக்கு பலன்கள் உண்டு. எனவேதான் அவர்களின் அரசியல் பிரதிநிதிகளான ஆளும் கட்சியினர் அதை ஆதரிக்கின்றனர். சர்வதேசியமயமாகிவரும் ஏகாதிபத்தியப் பொருளாதாரத்துடன் தனது விவசாயத்தையும் நிலப்பிரபுக்கள் இணைத்துக் கொள்வர். ஏகாதிபத்தியச் சந்தைக்கு, தேசங்கடந்த, பன்னாட்டு தொழில் கழகங்களின் தேவைக்கேற்ப விவசாய உற்பத்தியை மாற்றி அமைத்துக் கொண்டு அதிக இலாபம் பெறுவர். ''டங்கல்'' திட்ட அமலாக்கத்தால், மானிய வெட்டு போன்றவற்றால் விவசாய உள்ளீட்டுப் பொருட்கள் விலையேறுவதையும், ஏகாதிபத்திய நாடுகளின் விவசாயப் பொருட்கள் இறக்குமதியால் தமது விளை பொருட்களின்

## 'டங்கல்' திட்டத்தால் நிலப்பிரபுகளுக்கும் பாதிப்புதானே?

விலை வீழ்ச்சியால் ஏற்படும் பாதிப்புகளையும் தாங்கிக் கொள்ளும் சக்தி இந்திய நிலப்பிரபுக்களுக்கு உண்டு. ஆனால் இவற்றால் நடுத்தர, ஏழை விவசாயிகள் மேலும் நிலங்களை இழப்பர்; இது நிலப்பிரபுக்கள் நிலங்களை மேலும் குவித்துக் கொள்ளப் பயன்படும்; ஏற்கனவே நில உச்சவரம்புச் சட்டத்தை நீக்கி வரைமுறையின்றி நிலங்களை வைத்துக் கொள்ளுமாறு தாராளமயமாக்கும் முயற்சி நடந்து வருகிறது; கூலி விவசாயிகளின் வேலையில்லாத பட்டாளம் பெருகுவதால் அவர்கள் முன்னிலும் மலிவான கூலிக்கு ஏராளமாகக் கிடைப்பர். இந்த நிலைமைகளைப் பயன்படுத்திக் கொண்டு, வழமையான நிலப்பிரபுத்துவ சாதி ஆதிக்கம், செல்வாக்கு ஆகியவற்றோடு மேலும் கூடுதலான அரசியல் அதிகாரம், பொருளாதார பலமிக்க புதிய வகை முதலாளித்துவ நிலப்பிரபுக்களாக அவர்கள் முன்னேறுவார்கள். இதனால் இந்தியாவின் அரைக்காலனிய, அரைநிலப்பிரபுத்துவ அமைப்பில் உடனடியான பெரும் மாறுதல் ஏற்படா விட்டாலும் தென் அமெரிக்காவில் உள்ள நாடுகளைப் போல ஏகாதிபத்திய நேரடி அரசியல், இராணுவத் தலையீட்டை ஏற்கும் மறுகாலனிய நிலைக்கு இந்தியாவும் தள்ளப்படும்.


படிப்பகம்

www.padippakam.com

## ருவாண்டா: கருப்பர் பூமியில் இரத்த ஆறு

மத்திய ஆப்பிரிக்காவில் உள்ள சின்னஞ்சிறு நாடுகளான ருவாண்டாவிலும் புருண்டியிலும் கடந்த ஒரு மாத காலமாகத் தொடரும் இனவெறி மோதலில் 5 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். ஹுடு, டுட்சி ஆகிய இரு பழங்குடி இனங்களுக்கிடையே நடக்கும் இக்காட்டுமிராண்டித் தனமான போரில், ஒரு இனத்தை அழிக்க மற்றொரு இனம் போட்டி போடுகின்றனர். குழந்தைகள் முதல் முதியவர் வரை கண்ணில் பட்டவர்கள் அனைவரும் கண்டதுண்டமாக வெட்டிக் கொல்லப்பட்டு வருகிறார்கள். நாடெங்கும் பிணக்குவியல்; கருப்பர் பூமியெங்கும் ரத்த ஆறு; எங்கு திரும்பினாலும் மரண ஓலம். தப்பிப் பிழைத்த மக்கள் அண்டையிலுள்ள தான்சானியாவுக்கும் உகாண்டாவுக்கும் அகதிகளாக ஓடிக் கொண்டிருக்கிறார்கள். மனித இனம் இதுவரை காணாத மிகக் கொடூரமான இனவெறி பயங்கரவாதமும் படுகொலைகளும் ருவாண்டா - புருண்டி நாடுகளை மயான பூமியாக்கி விட்டது.

ருவாண்டாவும் புருண்டியும் 1962 வரை பெல்ஜியத்தின் காலனி நாடுகளாக இருந்தன. அதன் பிறகு பெயரளவிலான சுதந்திரமடைந்ததும் இரு நாட்டு ராணுவ ஆட்சியாளர்களும் அரசியல் ஆதாயம் கருதி இனவெறித் தீயைக் கிளறிவிட்டு குளிர் காய்ந்தனர்.



பிணங்கள் மிதக்கும் ஆற்று நீரும் நஞ்சாகிப் போனதால் எல்லைப் பகுதியில் குடிக்க நீரின்றித் தவிக்கும் ருவாண்டா அகதிகள்.

ருவாண்டாவில் ஹுடு இனம் பெரும்பான்மையாகவும் டுட்சி இனம் சிறுபான்மையாகவும் உள்ளது. அண்டைநாடான புருண்டியில் டுட்சி பெரும்பான்மையாகவும், ஹுடு சிறுபான்மையாகவும் உள்ளது. ஒரு நாட்டில் இன மோதல்கள் வெடித்தால் அது அடுத்த நாட்டில் கலவரமாகப் பரவும்.

கடந்த ஏப்ரல் மாதத்தில் ருவாண்டாவில் இவ்விரு இனங்களுக்கிடையே கலவரம் வெடித்ததும் இருநாட்டு அதிபர்களும் தான்சானியாவில் அமைதிப் பேச்சு வார்த்தை நடத்திவிட்டு தனி விமானத்தில் ருவாண்டாவுக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர். தலைநகர் கிகாலியை நெருங்கும் போது டுட்சி தீவிரவாதிகளால் அந்த விமானம் குண்டு வீசித் தகர்க்கப்பட்டு இரு அதிபர்களும் சாம்பலானார்கள்.

அதைத் தொடர்ந்து ருவாண்டாவில் உள்நாட்டுப் போர் மூண்டது. அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்குடன் ஹுடு இனத்தவர் பெரும்பான்மையாக உள்ள ராணுவம் டுட்சி இனத்தவர் மீது பயங்கரவாதத்தை ஏவி படுகொலைகளைக் கட்டவிழ்த்துவிட்டது. ராணுவத்துக்கு ஆதரவாக ஹுடு இளைஞர் கும்பலும் திரண்டு கொண்டு டுட்சி இனத்தவரை நரவேட்டையாடத் தொடங்கியது. ருவாண்டாவில் ரத்த ஆறு பெருகியோடிய பின்னர், ஐ.நா. மன்றத்தின் ஏற்பாட்டின்படி இரு இனத்தவர்களும் சமரசப் பேச்சு வார்த்தை நடத்தி ஓர் இடைக்கால அரசு நிறுவப்பட்டது. அடுத்த சில நாட்களில் புதிய அரசின் பிரதமரும் அமைச்சர்களும் குடும்பத்தோடு ஹுடு ராணுவத்தால் கொன்றொழிக்கப் பட்டனர். ஒவ்வொரு வீடாகத் தேடிச் சென்று டுட்சி இனத்தவரை கண்ட துண்டமாக வெட்டிக் கொன்றனர். தப்பியோடி மருத்துவமனை, விளையாட்டரங்கங்களில் பதுங்கியிருந்த டுட்சி இனத்தவரை ஹுடு ராணுவம் குண்டு வீசிக் கொன்றொழித்துள்ளது. இதேபோல டுட்சி பெரும்பான்மையாக உள்ள பகுதிகளில் ஹுடு இனத்தவர் வெட்டிக் கொல்லப்படுகிறார்கள். ருவாண்டாவில் தொடரும் இனப்படுகொலையால் தான்சானியாவை ஒட்டியுள்ள கிகிரா ஆற்றிலும், ஏரிகள் குளங்களிலும் பிணங்களே மிதக்கின்றன. ஹுடு ராணுவத்துக்கு எதிராகப் போரிட்டுவரும் டுட்சி தீவிரவாதிகள் தலைநகர் கிகாலியைக் கைப்பற்றி விட்டதாக செய்திகள் வருகின்றன. இதன் விளைவாக இனப்படுகொலை சற்றே ஓய்ந்து, ராணுவத்துக்கும் டுட்சி தீவிரவாதிகளுக்குமிடையே போர் உக்கிரமடையும் என அரசியல் பார்வையாளர்கள் மதிப்பிடுகின்றனர்.

இத்தனைக்கும் பிறகும், ஜனநாயகம், மனித உரிமை பற்றி வாய் கிழியப் பேசும் ஐ.நா. மன்றமோ, மேற்கத்திய ஏகாதிபத்தியங்களோ இனப்படுகொலையைத் தடுத்து நிறுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. உலக நாடுகள் ஒத்துழைக்காததால் அமைதிப் படைக்கு போதிய ஆட்களில்லை என்று கூறி ஐ.நா. மன்றம் கையைக் கட்டிக் கொண்டு வேடிக்கை பார்க்கிறது. அதே சமயம் ஐரோப்பாவிலுள்ள போஸ்னியாவில் தொடரும் இனப்படுகொலையைத் தடுத்து நிறுத்த பெருமளவில் அமைதிப்படை என்ற பெயரில் ஏகாதிபத்தியப் படைகளும், வான்வழித் தாக்குதல்களும் நடத்தப்பட்டு நிவாரண நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகிறது. ஏனெனில் போஸ்னியாவில் இருப்போர் வெள்ளையர்கள். ஆனால் ருவாண்டாவில் பாய்வது, கேவலம் கருப்பின மக்களின் ரத்தம் தான் என்கிற ஏகாதிபத்திய இனவெறியும் புறக்கணிப்பும்தான் இதற்குக் காரணம்.

## பாம்பும் சாகாமல் தடியும் நோகாமல் புரட்சி செய்யும் போலிகள்

''காட்'' ஒப்பந்தத்தில் ராவ் அரசு கையெழுத்திட்டதை எதிர்த்து கடையடைப்புப் போராட்டம் நடத்துவதால் பயனேதும் இல்லை. அதனால் உற்பத்தி பாதிக்கப்பட்டு நமது மாநிலத்துக்குத் தான் நட்டமாகும். மேலும் நாம் ''பந்த்'' நடத்துவதால் மத்திய அரசு ''காட்'' ஒப்பந்தத்தை ரத்து செய்துவிடாது. கடையடைப்புப் போராட்டத்தால் சட்டம் - ஒழுங்கு சீர்குலையும்; போராடுவோர் மீது அரசு நடவடிக்கை எடுக்க நேரிடும் —— இப்படி திருவாய் மலர்ந்தவர் வேறு யாருமல்ல. காட் உடன்பாட்டை எதிர்த்து வெற்றுச் சவடால் அடிக்கும் 'மார்க்சிஸ்ட்' கட்சியின் மே. வங்க முதல்வர் ஜோதிபாசுதான்!


படிப்பகம்

www.padippakam.com

மே. வங்க 'இடதுசாரி' கூட்டணி அரசில் அங்கம் வகிக்கும் வலதுகளும், பார்வர்டு பிளாக் கட்சியினரும் மற்றும் 'மார்க்சிஸ்டு' கட்சியைச் சேர்ந்த சிலரும் ''காட்'' எதிர்ப்புப் போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்தும் நோக்கத்துடன் மாநிலம் தழுவிய கடையடைப்பு நடத்தலாம் என மே மாத துவக்கத்தில் 'மார்க்சிஸ்டு' முதல்வர் ஜோதிபாசுவிடம் விவாதித்தனர். இப்போராட்டத்தை நிராகரித்து பாசு மேற்கண்டவாறு அவர்களிடம் விளக்கமளித்துள்ளார்.

பாசுவின் ஆலோசனையை ஏற்க மறுத்த அவர்கள், ''அப்படியானால் மாநிலம் தழுவிய சிறை புகும் போராட்டத்தையாவது நாம் நடத்தலாம்'' என்று ஆலோசனை கூறினர். ''எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் இத்தகைய போராட்டத்தால் பலன் இருக்காது. மாநில அரசுக்கு எதிராகப் போராட்டம் நடப்பதாக மக்கள் கருதிவிடுவார்கள்'' என்று பாசு அந்த ஆலோசனையையும் மறுத்துவிட்டார். 'இடதுசாரி' கூட்டணியில் அங்கம் வகிப்பதாலும் சிறுபான்மையாக இருப்பதாலும் ஆலோசனை கூறிய இக்கட்சிகள் வேறுவழியின்றி பாசுவின் முடிவை ஏற்றுக் கொண்டு காட் எதிர்ப்புப் போராட்டத்தைக் கிடப்பில் போட்டு விட்டன.

பக்ரேஷ்வர் அனல் மின் திட்டம், ஹால்டியர் இரசாயன உரத் திட்டம் ஆகியவற்றுக்கு அன்னிய மூலதனத்தைப் பெருமளவுக்கு நம்பியிருக்கும் பாசு, மே. வங்கத்தில் ''காட்'' எதிர்ப்புப் போராட்டங்கள் நடப்பதை விரும்பவில்லை. இதனால் அன்னிய முதலாளிகள் முதலீடு செய்ய முன்வரமாட்டார்கள் என்று நியாயவாதங்களை அடுக்குகிறார்.

''காட்'' உடன்பாட்டை எதிர்த்து வெற்றுக் கூச்சல் போடும் போலிக் கம்யூனிஸ்டுகள், ஆகஸ்ட் 15 அன்று காங்கிரசுத் துரோகிகளுக்குப் போட்டியாக, இணையான 'சுதந்திர' தின விழாவைக் கொண்டாடப் போகிறார்கள். தியாகிகளின் பெயரால் சுதந்திரத்தைக் காக்க உறுதிமொழி ஏற்பது, காட் எதிர்ப்பு பேரணிகள் நடத்துவது என்பதாக 'சுதந்திர' தினத்தை கடைபிடிக்கப் போகிறார்களாம்!

## அகாலிகளின் புதிய கட்சி
## புதிய மொந்தையில் பழைய கள்ளு

பஞ்சாபில் நீண்ட காலமாகப் பிளவு பட்டுக் கிடந்த அகாலிதளக் குழுக்கள் மீண்டும் ஐக்கியத்துக்கான புதிய முயற்சியில் இறங்கியுள்ளன. கடந்த மே முதல் நாளன்று 6 அகாலிதளக் குழுக்களும் — பாபர், தல்வாண்டி, மான், பாந்திக், பாய் மன்ஜித் ஆகியன — இவற்றின் மாணவர், இளைஞர் அமைப்புகளும் ஒன்றிணைந்து சிரோமணி அகாலிதளம் (அமிர்தசரஸ்) என்ற புதிய கட்சியை நிறுவியுள்ளன. மே 6 பைசாகி தினத்தன்று அனைத்து அகாலி குழுக்களின் தலைவர்களும் பொறுப்பாளர்களும் தமது குழுக்களைக் கலைத்து பதவிகளிலிருந்து விலகுவதாகவும் அறிவித்தனர். சீக்கிய மதத் தலைவர்களின் ஆலோசனைப்படி உருவான இப்புதிய கட்சியில் பாதல் பிரிவு சேரவில்லை. எனினும் மதக் கட்டளைகளை ஏற்பதாகவும் தாங்கள் தனிக்குழுவாக நீடிக்க அனுமதிக்குமாறும் அது கோரியுள்ளது.

ஐக்கியப்பட்டுள்ள 6 குழுக்களும் பஞ்சாபுக்கு கூடுதல் அதிகாரம் - மாநில சுயாட்சி கோரும் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளன. இந்தியக் கூட்டாட்சிக்குள் பஞ்சாபில் மாநில சுயாட்சி எனும் இக்கோரிக்கையை இந்திய அரசு ஏற்காவிடில், சீக்கியர் - இந்துக்கள் உள்ளிட்ட பஞ்சாப் மக்களின் விருப்பப்படி பஞ்சாப் தனி நாடாகப் பிரிய நேரிடும் என்றும் எச்சரித்துள்ளன. முன்னாள் பஞ்சாப் முதல்வரும் முன்னாள் தமிழக கவர்னருமான பர்னாலா உட்பட பல முக்கிய பிரமுகர்கள் இத்தீர்மானத்தில் கையெழுத்திட்டு ஆதரித்துள்ளனர்.

உடனேயே மத்திய அரசும் உள்துறை அமைச்சர் சவானும் 'பஞ்சாபில் மீண்டும் பிரிவினை சக்திகள் தலைதூக்கத் தொடங்கி விட்டன'' என்று பயங்கரவாத பீதியூட்டத் தொடங்கிவிட்டனர்; ஆளும் கும்பலோடு சேர்ந்து கொண்டு போலிக் கம்யூனிஸ்டுகளும் பாரதீய ஜனதாவும் அகாலிகளைச் சாடுகின்றனர்.

ஆனால் அகாலி தலைவர்களோ, ''நாங்கள் நாட்டின் ஐக்கியத்தைச் சீர்குலைக்கும் பிரிவினைவாதிகள் அல்ல; பஞ்சாபுக்கு கூடுதல் அதிகாரங்களைத் தான் கோருகிறோம். நேரு முதலாக எல்லா பிரதமர்களும் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றத்தான் கோருகிறோம்'' என்று விளக்கமளித்துள்ளனர்.

பஞ்சாபுக்கு கூடுதல் அதிகாரம் - மாநில சுயாட்சி கோரும் அகாலிகளின் தீர்மானம், அவர்களது நீண்டகால கோரிக்கையாகும். மிகச் சாதாரணமான இம்முதலாளித்துவ ஜனநாயக உரிமையைக் கூட ஏற்க மறுத்து, பிரிவினைவாதம் என்று முத்திரை குத்தி, இந்திய அரசு தொடர்ந்து பயங்கரவாத அடக்குமுறையை ஏவி வருகிறது.



அகாலிகளின் புதிய கட்சி நிறுவப்பட்டதை பிரகடனப் படுத்தும் மன்ஜித்சிங்: மீண்டும் மதமும் அரசியலும் கலந்த புதிய கூட்டு.

அதேசமயம் அகாலிகளோ பஞ்சாபிலுள்ள சீக்கியர்களையும் இந்துக்களையும் ஐக்கியப்படுத்தி இக்கோரிக்கைக்காகப் போராடுவதற்குப் பதிலாக, அரசியலையும் மதத்தையும் கலந்து போராட்டத்தை குறுக்கிச் சுருக்கி வருகிறார்கள். அகாலிகளின் தற்போதைய ஐக்கியமும் சீக்கிய மதத் தலைவர்களின் கட்டளைப்படியே நடந்துள்ளது. அரசியலிலிருந்து மதத்தைப் பிரித்து, மதச்சார்பற்ற - ஒருங்கிணைந்த சித்தாந்தக் கண்ணோட்டத்துடன் கூடியதாக இந்த ஐக்கியம் அமையவில்லை. வேறுபட்ட கொள்கைகள், நலன்கள், கோஷ்டிப் பூசல்களைக் கொண்ட அகாலிக் குழுக்கள் ஏறத்தாழ பத்தாண்டுகளுக்குப் பிறகு மீண்டும் ஒரு சந்தர்ப்பவாத ஐக்கியத்தை மதக் கட்டளைப்படி அமைத்துள்ளன. எனவே இச்சந்தர்ப்பவாத புதிய கட்சி தொடர்ந்து நீடிக்கவும் அடிப்படை இல்லை. மதவாத அடிப்படையிலான அகாலிகளின் திசைதவறிய போராட்டமும் பஞ்சாப் மக்களின் நீண்ட கால கோரிக்கையை நிறைவேற்றப் போவதில்லை.


படிப்பகம்

## பீகார்: பழங்குடி மக்களின் போர்க்கோலம்

ஒரிஸ்ஸாவின் பாலியாபால் பகுதி பழங்குடி மக்களைத் தொடர்ந்து, பீகாரின் பாலமு மாவட்டத்தைச் சேர்ந்த பழங்குடியினரும் தாங்கள் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து வரும் பூமிக்காகவும் அதன் இயற்கை வளங்களைக் காப்பாற்றவும் மத்திய அரசுக்கும் இந்திய இராணுவத்திற்கும் எதிராக போராடத் துவங்கியுள்ளனர்.

1956-லிருந்தே பீகாரின் நேதர்ஹாத் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளை இந்திய இராணுவம் தனது சுடுதிறன் சோதிக்கும் களமாகப் பயன்படுத்தி வந்துள்ளது. அந்நாட்களில் எல்லாம் அறிவிப்பு வந்தவுடனேயே அப்பழங்குடி மக்கள் நோய்வாய்ப்பட்டோர், வயது முதிர்ந்தோர், பச்சிளங் குழந்தைகள் என வேறுபாடின்றி, ஆடு - மாடுகள் என முடிந்தவற்றை கையில் பிடித்துக் கொண்டு அப்பகுதியிலிருந்தே வெளியேறிவிட வேண்டும்; வெட்ட வெளியிலோ, பொட்டல் காடுகளிலோ அல்லது அருகிலுள்ள காட்டிற்குள்ளோ ஓடிச் சென்று, காதைப் பிளக்கும் குண்டு மழைகளுக்கு மத்தியில் உயிரையும், உடமைகளையும் காத்துக் கொள்ள வேண்டும். துப்பாக்கி முழக்கங்கள் ஓய்ந்த பின்தான் வாழும் பூமிக்குத் திரும்ப முடியும்.

இச்சோதனைப் பயிற்சிகள் ஒரே நாளில் முடியலாம்; அல்லது ஒரு வாரங்கூட ஆகலாம். யாரும் எதுவும் கேட்க முடியாது. திரும்பிய பிறகு அவர்களுக்குக் கிடைப்பதோ ''நாளொன்றுக்கு ஒரு நபருக்கு ஒண்ணரை ரூபாய்'' என்ற அற்ப தொகை மட்டும்தான். இதைத்தவிர பீரங்கி குண்டுகளினால் அவர்களது வீடு இடிந்து போயிருந்தாலோ, பயிர்கள் அழிந்து போயிருந்தாலோ அல்லது இராணுவத்தினர் திருடி தின்னும் கோழிகளுக்கோ கூட எந்த நஷ்ட ஈடும் கிடையாது.




ராணுவ சுடு பயிற்சித் தளத்துக்கு எதிராக முரசு கொட்டி டெல்லியில் பேரணி நடத்தும் பழங்குடி மக்கள்

தற்பொழுது மத்திய அரசும் இராணுவமும் நிரந்தரமாகவே பழங்குடி மக்களை வெளியேற்றிவிட்டு, அப்பகுதியில் ஆசியாவிலேயே இரண்டாவது மிகப் பெரிய சோதனைக் களன், இராணுவக் குடியிருப்புகள், ஆயுதப் பயிற்சி சாலைகளை நிர்மாணிக்க இரகசியமாகத் திட்டம் தீட்டியுள்ளன.

இத்திட்டத்தினால் இரண்டு லட்சத்துக்கும் அதிகமான பழங்குடி மக்களின் வாழ்வு பறிபோவதோடு, பீகாரின் எஞ்சியுள்ள சால் காடுகளும் அழிந்துவிடும் அபாயமுள்ளது. இதனால் இக்காடுகளில் வாழும் 85,000-க்கும் அதிகமான வனவிலங்குகளும், ''பேட்லா தேசியப் பூங்காவும்'' மறைந்து போவதைத் தவிர வேறு வழியில்லை.

இதை அறிந்து கொண்ட அப்பழங்குடி மக்கள், சென்ற முறை இராணுவம் சோதனைப் பயிற்சிக்கு வந்தபொழுது தங்களது பூமியை விட்டு வெளியேற மறுத்துவிட்டனர். அதோடு, 50,000-க்கும் அதிகமான அப்பழங்குடி மக்கள் சோதனைப் பயிற்சிகளை செய்யவிடாது இராணுவத்தினரை முற்றுகையிட்டு, திரும்ப ஓடச் செய்துள்ளனர். இத்திட்டத்தினால் பாதிக்கப்படும் 245 கிராமங்களிலும் ''மக்கள் போராட்டக் குழுக்களை'' அமைத்து, கடந்த 6 மாதங்களாக தொடர்ந்து ஊர்வலம், ஆர்ப்பாட்டம் எனப் போராடி வருகின்றனர்.

மாநில அரசு அனுமதி தந்தால்தான் இராணுவம் அப்பகுதியை சோதனைக் களமாகப் பயன்படுத்த முடியும்; பீகார் மாநில அரசோ ஒருபுறம், ''இத்திட்டம் பற்றி தனக்கு எதுவுமே தெரியாது'' என கையை விரித்துவிட்டது. மறுபுறம் 92-ம் வருடத்தோடு காலாவதியாகிவிட்ட இராணுவத்திற்கான அனுமதியை 2002-ம் ஆண்டு வரை நீட்டித்துக் கொடுத்திருக்கிறது. இதோடு, 80 கோடி ரூபாய் அளவிற்கு நஷ்டஈடு வழங்குவதற்கான திட்டம் ஒன்றையும் மத்திய அரசுடன் சேர்ந்து தீட்டியுள்ளது.

## மாஃபியா - 'மார்க்சிஸ்டு' கள்ளக்கூட்டு

கடந்த ஆண்டில் நடந்த பம்பாய் குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து, 60 பேரைப் பலி கொண்ட கல்கத்தாவின் போபஜார் குண்டு வெடிப்புச் சம்பவத்திற்குக் காரணமான மாஃபியா தலைவன் ரஷீத் கான் கைது செய்யப்பட்டான். அவனுடன் மே. வங்க ஆளும் 'மார்க்சிஸ்ட்' தலைவர்களும் கள்ள உறவு வைத்திருந்தனர். போலீசு - மாஃபியா - 'மார்க்சிஸ்டு' கூட்டு அம்பலமானதால், 'மார்க்சிஸ்டு' தலைவர்கள் உத்தம நாடகமாடி, சில இரண்டாம் மட்டத் தலைவர்களைக் கட்சியிலிருந்து தற்காலிக நீக்கம் செய்தனர். மற்றவர்கள் மீது விசாரணையும் ஒழுங்கு நடவடிக்கையும் மேற்கொண்டனர்.

ஆனால் அண்மையில் கூடிய 'மார்க்சிஸ்ட்' கட்சியின் மாநிலக் கமிட்டிக் கூட்டத்தில், தற்காலிக நீக்கம் செய்யப்பட்ட மாநில மகளிர் அமைப்பின் செயலாளர் சியாமளி குப்தா, கல்கத்தா மாவட்டக் கமிட்டி உறுப்பினர் அஷின் தேவ், செயலாளர் லட்சுமி சென் முதலானோர் எந்த விளக்கமுமின்றி மீண்டும் கட்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். மற்ற உறுப்பினர்கள் மீதான விசாரணையும் கைவிடப்பட்டு விட்டது. மேலும் ரஷீத் கானை ''தடா'' சட்டத்தின் கீழ் குற்றம் சாட்ட முடியாது என்று கல்கத்தா உயர்நீதி மன்றமும் தீர்ப்பளித்து விட்டது.

மக்கள் விரோத நடவடிக்கையில் ஈடுபட்டு அம்பலப்பட்டுப் போன கட்சி ஊழியர்களை, வேறு வழியின்றி தற்காலிக நீக்கம் செய்வதும், சிறிது காலம் கழித்து மக்கள் இச்சம்பவத்தை மறந்து போயுள்ள நிலையில் மீண்டும் அவர்களைச் சேர்த்துக் கொள்வதென்பதும் முதலாளித்துவ - பிழைப்புவாதக் கட்சிகளின் நடைமுறை. கொள்கைபூர்வ - கட்டுப்பாடு மிக்க கட்சி என்று பீற்றிக் கொள்ளும் போலிக் கம்யூனிஸ்டுகளும் இப்போது அதே வழியில் கிளம்பி விட்டார்கள். நல்ல முன்னேற்றம்தான்!



படிப்பகம்

www.padippakam.com

# விசைத்தறி தொழிலாளர்கள் மீது போலீசின் காட்டுமிராண்டித்தனம்

தமிழ் நாட்டி
லேயே மிகப் பெரிய
அளவில் விசைத்தறி
நெசவுத் தொழில் நடந்து
வருவது கோவை, பெரி
யார் மாவட்டங்களில்
தான். கிட்டத்தட்ட 3 லட்சத்துக்கும் அதிக
மாக குடும்பங்கள் இத்தொழிலை மட்
டுமே நம்பி பல ஆண்டுகளாக வாழ்ந்து
வருகின்றன. நூல் விலை உயர்வினா
லும், ஜெயா கும்பல் ஆட்சிக்கு வந்த
மூன்று ஆண்டுகளுக்குள் அடுத்தடுத்து
மூன்று முறை மின் கட்டணம் உயர்த்தப்
பட்டாலும், கூலிக்கு துணி நெய்து
கொடுக்கும் இவ்விசைத்தறி உரிமையா
ளர்களின் நெசவுத் தொழில் மிகுந்த
பாதிப்படைந்துள்ளது. இதனால் இவர்
கள் அரசை மின் கட்டணத்தை குறைக்க
கோரி, முதல் கட்டமாக தொடர் உண்ணா
விரதப் போராட்டமும், அடுத்து ஊர்வல
மாகச் சென்று கோவை மாவட்ட ஆட்சி
யாளரிடம் மனு கொடுப்பது என்றும் முடி
வெடுத்து, காவல்துறையிடம் அனுமதி
யும் பெற்றுள்ளனர்.

கடந்த மே-10 அன்று கோவையில்
பல்லடம், சோமனூர், அவினாசி, கண்
ணம்பாளையம், கருமத்தம்பட்டி முத
லான பகுதிகளிலிருந்து நடந்த ஊர்வலத்
தில் 25,000-க்கும் அதிகமான விசைத்
தறி தொழிலாளர்களும் உரிமையாளர்க
ளும் கலந்து கொண்டனர். ''இவ்வளவு
அதிகமாக கூட்டத்திற்கு நாங்கள் பாது
காப்பு தர முடியாது'' என்ற காரணத்
தைக்(!) கூறி, போலீசார், ஊர்வலம்
மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை
அடையுமுன்பே செஞ்சிலுவை சங்க கட்
டிடத்தின் அருகிலேயே தடுத்து
நிறுத்தியுள்ளனர். உடனே சங்க நிர்
வாகிகளும், எதிர்க்கட்சிப் பிரமு
கர்களும், ''நால்வர் மட்டும்தான்
அலுவலகத்திற்குள் செல்வோம்;
எனவே ஊர்வலத்தை அனுமதி
[யு]ங்கள்'' எனக் கோரியுள்ளனர்.
[அ]தன்பின் ஊர்வலத்தை அனும
[தி]த போலீசு, மறுபடியும் போலீஸ்
[கமி]ஷனர் அலுவலகம் முன்பு தடுத்
[தி]ட்டது. இதனால் கூட்டத்தில்
...ம் உருவாக, தாங்கள் எண்
...கையில் குறைவாக இருந்த
...த்தினால் மீண்டும் பின்
... கொண்டுள்ளனர் போலீ
...னிடையே, கண்ணீர் புகை
... தண்ணீர் பீய்ச்சியடிக்க
...ப்பு வண்டி, ஆயுதப் படை
... ஆகியவற்றுக்கு அதிகாரி
... ஏற்பாடுகள் செய்யப்
...
...வக் கொடுக்க
...ட்சியாளர் அலுவலகத்
... நிர்வாகிகள் சென்ற
...ர்வம் மிகுதியால் 50
...ம் உடன் சென்றுள்
ளனர். இதனால் போலீசார் வெளிக் கத
வைத் தாழிட, ஊர்வலத்தினருக்கும்
போலீசாருக்கும் வாக்குவாதம் ஏற்பட்
டுள்ளது. இது ஒன்றையே காரணமாக
வைத்து, உடனடியாக மிருகத்தனமான
தாக்குதலைக் கட்டவிழ்த்துவிட்டுள்ள
னர்.

அரைமணி நேரத்துக்கும் மேலாக
நடந்த அத்தாக்குதலை, ''ஜாலியான்
வாலாபாக்கை விடக் கொடூரமானது''
எனக் குரல் ஒடுங்கிப் போய்க் கூறுகிறார்
காயமடைந்த ஒருவர். ''ரவுண்டு கட்டி
அடிக்கணும் என்றே மண்டையைக் குறி
வைத்து லத்தியால் தாக்கினார்கள்'' என்
கிறார் மற்றொருவர். போலீசாரின் காரண
மற்ற வன்மத்தை எடுத்துக்கூற
இவையே போதும். கமிஷனர் அலுவல
கம் வழியாக ஓடியவர்களை வழி மறித்
துத் தாக்கியுள்ளனர், அங்கு தயாராக
இருந்த ஆயுத போலீசார். ரெயில்
நிலைய ரோடு வழியாக தப்பிக்க பார்த்த
வர்களைத் துரத்தி பிடித்தும், அருகில்
இருந்த தபால் நிலையத்தினுள் நுழைந்த
வர்களை உள்ளே சென்று கதவைத்
தாழிட்டுக் கொண்டு அவ்வூழியர்கள்
முன்பேயும் தாக்கியுள்ளது போலீசு.

இத்தடியடி பற்றியெல்லாம் ஒன்றும
றியாது ஊர்வலம் மாவட்ட ஆட்சியாளர்
அலுவலகத்தை அடைந்ததுமே, ஊருக்
குக் கிளம்புவதற்காக தாங்கள் வந்த
வேன்களிலும், லாரிகளி
லும் வ.உ.சி. மைதானத்
தில் காத்திருந்தவர்களை
யும் விட்டுவைக்க
வில்லை போலீசார்.
பெண்கள், குழந்தைகள்
என்றும் பாராமல் நிழலில் ஒதுங்கி நின்ற
வர்களையும் வண்டியில் அமர்ந்திருந்த
வர்களையும் மைதானத்தினுள் சுற்றி
சுற்றி ஓடவிட்டு அடித்துத் துரத்தியுள்ள
னர். இத்தாக்குதலில் காயமடைந்த 100
பேரில் இருபந்தைந்து பெண்களும்
உண்டு.

தடியடி நடத்தி முடிந்தபின் தாங்கள்
கைப்பற்றியிருந்த வாகனங்களை
போலீசு பயிற்சி மைதானத்தில் வரிசை
யாக நிற்க வைத்து உரிமையாளர்களின்
முன்னாலேயே கண்ணாடிகளை அடித்து
நொறுக்கியுள்ளனர். கைது செய்யப்பட்ட
ஐநூறு பேரில், ரத்தம் சொட்ட சொட்ட
நின்றவர்களுக்கு உடனடியாக எந்த முத
லுதவியும் செய்யவில்லை. தாக்குதல்
முக்கிய சந்திப்பில் நடந்தபொழுது,
பேருந்துகளிலும் ரோட்டின் இருமருங்கி
லும் பதைபதைத்து நின்றிருந்த மக்க
ளைக் கண்டும் போலீசார் எந்த அச்சமும்
கொள்ளவில்லை —— இவையெல்லாம்
போலீசின் தன்னை யாரும் ஒன்றும் செய்
துவிட முடியாது என்ற அதிகார மமதைக்
கான ஆதாரங்கள். விசைத்தறி தொழிலா
ளர்கள் மீதான இத்தாக்குதலைக் கண்டித்
தும் ஆணையாளர் கணேசனைக் கைது
செய்து தண்டிக்கக் கோரியும், பாதிக்கப்
பட்டவர்களுக்கு நிவாரணம் கோரியும்
கோவை மக்கள் கலை இலக்கியக் கழகம்
சுவரொட்டிகளை ஒட்டியது.

போலீஸ் மிருகங்கள் பாய்ந்து குதற போராடுவோர் ஒன்றும் ஆட்டு மந்தைகளல்ல.



போலீசு வெறிநாய்களுக்கு
அதிகார மமதை அடிக்கடி தலைக்
கேறிப் போவதற்கு ஜெயா கும்பல்
தரும் ஊக்கம்தான் காரணம்.
கோவில்பட்டியில் விவசாயிகளின்
மீதும் புகளூர் தொழிலாளர்கள்
மீதும் நடத்திய தடியடி - துப்பாக்
கிச் சூட்டில் பல அப்பாவிகள்
இறந்து போயினர். ஆனாலும்,
''குறைந்தபட்ச அடக்குமுறைதான்
பயன்படுத்தப்பட்டது'' என சட்ட[ச]
பையிலேயே அறிவித்து போலீ[சு]
க்கு கொம்பு சீவிவிட்டது ஜெயா
கும்பல். போலீசாரால் கற்பழிக்கப்
பட்ட அபலைப் பெண்களை
''பணம் பிடுங்குபவர்கள்'' என
பழிபோட்டது. இதனால்தான் த...
களை ஊர்வலத்தினர் எதிர்த்தவு...
னேயே மூன்றாந்திர ரௌடி கு[ம்ப]
லைப்போல தாக்கியிருப்பதோ[டு]
இதன் மூலம் தனது எஜமானி...
யும் திருப்தி செய்ய முடியும் ...
கணக்கு போட்டு வெறியாட்...
போட்டுள்ளது கோவை நகரப்...
லீசு.

தகவல் : ம.க.இ.க. கோ[வை]

...d and owned by R.SHANMUGARAJ, 4, Samiyar Thottam, Alandur Road, Saidapet, Madras - 600 015
...rinted by him at EZHIL PRINTS, 321, ... Road, Madras - 600 024, Editor: R.SHANMUGARAJ

படிப்பகம்

R.N. 42648/85

Regd.No. TN/MS

www.padippakam.com



# இதுதான் இன்றைய இந்தியா

சிறு பிள்ளைகளுக்கு கவலையே கிடையாது என நாம் நினைக்கிறோம். ஆனால் பம்பாயில் நடந்த தெருவோரக் குழந்தைகளின் மாநாட்டில் கலந்து கொண்ட இச்சிறுவர் - சிறுமிகளின் வாழ்க்கையோ நம்மில் பலர் அறிந்திராத அளவு பரிதாபகரமானது. தொடர்ச்சியான வறுமை, தாய்-தந்தையரின் அக்கறையின்மை - இவர்களின் துள்ளித்திரிய வேண்டிய இளமையை வஞ்சித்ததென்றால், அரசும் அதிகார வர்க்கமும் போலீசும் இவர்களைக் கனவிலும் அச்சுறுத்தும் கொடிய பூதங்கள். "கையில் காசிருந்தால் பிடுங்கிக் கொள்வதும்; திருடச் சொல்வது; பொய் வழக்கு போடுவது; 'பெரிய மனிதர்கள்' யாரும் வந்தால் வேனில் அள்ளிக் கொண்டு போய் நகரத்திற்கு வெளியே வீசியெறிவது; இளம் பெண்கள் என்றால் விபச்சாரியாக்குவது" என போலீசாரின் - அதிகாரிகளின் 'அக்கறை'யைத் தான் இச்சிறார்கள் ஒவ்வொருவராய் பத்திரிகையாளர்களிடம் எடுத்துச் சொல்கிறார்கள்.

இதோ இப்படம் "சிறுவர்கள் மிகைப்படுத்திக் கூறுகிறார்களோ?" என்ற எண்ணத்தையே எழவிடாமல் செய்துவிடும். போலீசு பிடித்துச் செல்லும் இந்த நாலு சிறுவர்களும் ஒண்டக் குடிசையின்றி டெல்லி தெருக்களில் வாழ்ந்து வந்ததுதான் அவர்கள் செய்த ஒரே குற்றம். "சிறுவர்களை பிச்சை எடுக்க வைக்கும் கும்பலைப் பிடிப்பது" என்ற பெயரில் ஆயிரத்துக்கும் அதிகமான சிறுவர்களை சிறைப்பிடித்து அரசு காப்பகங்களில் அடைத்துவிட்டது போலீசு. "பார்த்து வந்த வேலையும் போச்சு; புதிதாக எதுவும் கற்றும் தர மாட்டார்கள்" எனும் சிறுவர்கள் "இனிவெளியே போன பின்னும் வெட்ட வெளியில் தான் வாழ்க்கை" என்கிறார்கள்.

வயிற்று பசிக்கு சோறு, வெயிலுக்கும் மழைக்கும் ஒரு கூடு - இவைதான் அவர்கள் கேட்பது. ஆனால் அழுக்குப் படிந்த மேனியையும், சட்டையையும் அருவெறுப்பாக பார்க்கும் அரசுக்கோ, இந்த 'வேண்டாத சுமை' தான் பெற்றெடுத்தது என்பது ஒத்து கொள்ளும் நேர்மையில்லை. பின் ஆயிரம் காரணங்களைக் கூறி அடித்து துரத்துவதற்கு என்ன யோக்கியதை இருக்கிறது?



படிப்பகம்